உ

ஓம்.

சிவமயம்.

ஆதிப் பூர்வக்யான

உண்மைப் பிரகாசம்.

★

இஃது

தஞ்சை, சென்னை, சூளை வேப்பேரி,

ஸ்ரீலஸ்ரீ, சிவகுமார மௌனகுரு சுவாமி

அவர்கள் இயற்றி அருளியது.

சிவா அமிர்த மௌன ஞான சபையாரால்

அச்சியற்றி வெளியிடப் பெற்றது.

(முதல் பதிப்பு.)

விஸ்வாவசு - சித்திரைமீ] [விலை ரூபாய் 1-50

உ
ஓம்.
சிவமயம்.

ஆதிம் பூர்வக்யான
உண்மைப் பிரகாசம்.

★

இஃது

தஞ்சை, சென்னை, சூளை வேப்பேரி,

ஸ்ரீலஸ்ரீ, சிவகுமார மௌனகுரு சுவாமி

அவர்கள் இயற்றி அருளியது.

சிவா அமிர்த மௌன ஞான சபையாரால்
அச்சியற்றி வெளியிடப் பெற்றது.

(முதல் பதிப்பு.)

விஸ்வாவசு - சித்திரைமீ] [விலை ரூபாய் 1-50

சென்னை - குளை,
ஸ்ரீ பாரதி அச்சகத்தில்,
அச்சிடப்பெற்றது.

ஆதிப்பூர்வக்யான உண்மைப் பிரகாசம்

அட்டவணை

சிவமயம்.

முகவுரை.

உலகத்தினிடத்திலே உண்மை பொய்யாகவும் பொய்மை மெய்யாகவும், உயர்வு தாழ்வாகவும் தாழ்வு உயர்வாகவும், நன்மைத் தீமையாகவும், தீமை நன்மையாகவும், இன்னும் பல விதங்களாகவும் பேதா பேதங்களாவும், விளங்கப்பெற்று நிலவி வருவதால் இவைகளுடைய உண்மைகளை மாந்தர்கள் அறிந்து கைக்கொள்ளும் பொருட்டே இந்நூலை உண்மையான சமத்துவ உள்ளத்தின் ஓர்மையுடனும் பேரறிவுடனுங் கூடிய ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் தெளிந்த விசாரணையாலும் அனுபவத்தாலும் ஈசுவர திருட்டியாலும் ஒவ்வொன்றையும் உணர்ந்து எழுதியதே அல்லாமல் மற்ற நூல்களின் ஆதரவைக்கொண்டோ துவேசத்தினுலோ அபிமானத்தினுலோ கற்பனையாகவோ இவை எழுதப்பட்டன அல்ல. ஆனுல் பெரும்பாலும் மேற்கூறியபடியே புலப்படக்கூடும். ஆதலின் எங்கெந்த இடங்களில் கற்பனையாகவோ துவேஷமாகவோ பேதா பேதமாகவோ சந்தேக தர்க்கங்களுக்குக் காரணமாகவோ காணப்படுகின்றதோ அந்தந்த இடங்களில் நிறுத்தி உண்மையான சமத்துவ உள்ளத்துடன் நேர்மையாகவும் பேரறிவுடனும் இருந்து ஆழ்ந்து நோக்கி விசாரித்தால் உண்மையானது தெற்றெனெ விளங்கக்கூடும். மற்றபடி நூல்களையோ கேள்விகளையோ ஆதாரமாகக்கொண்டு பார்ப்பதானுல் உண்மைகள் விளங்கக்கூடியதன்று. ஏனெனில் வேதம் முதலாகச் சர்வ நூல்களையும் பிற்காலத்தில் பலபேர்களால் பலவிதமாகவும் தங்கள் தங்களுடைய அனுபவத்திற்கும் அபிமானத்திற்கும் தக்கவாறு கூட்டிக் குறைத்தும் வரையப்பட்டுள்ளன. மற்றும் பிற்காலத்திலுள்ள நூல்களும் அவ்விதமே வரையப்பட்டனவாகும். ஆகவே இவைகளின் ஆதரவினுல் உண்மைகளை யறியக்கூடியதன்று. உண்மையான மனமும் பேரறிவும் ஆழ்ந்த ஆராய்ச்சியுமே இதற்கு முக்கிய

ஆதாரமாகக் கொண்டு இதனைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் மேற்கூறிய பிரகாரம் விசாரணைசெய்து உண்மைகளை உணரவேண்டியது முக்கியமாகும். மேலும் முக்கியமான விடயங்கள் மட்டும் சுருக்கமாக எழுதப்பெறுகின்றன. விரிவாகவோ மிக விளக்கமாகவோ எழுதவில்லை. ஆகவே இதைக்கொண்டே உற்று நோக்கில் எல்லா விடயங்களையும் சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

ஆனால் இதை வரைந்து சுமார் பதினேழு வருடங்களுக்கு பின்பு இப்பொழுது அச்சியற்றுவதால் தற்கால நிலைமையில் சாதி, மதம், உயர்வு, தாழ்வு, மொழி முதலாக பல வகையிலும் முன்னையை போன்று துவேசம், பேதம் பகைமை முதலியன இல்லாமல் சமரசம் சமத்துவம் சகோதரத்வம் ஒற்றுமை முதலியது நாளுக்குநாள் அபிவிருத்தி அடைந்து வருவதால் சில பூர்வீக முக்கிய விடயங்களை விளக்கமாக எழுதாமல் நிறுத்தி அவசியமானவைகளை மட்டும் எழுதி அச்சியற்றியதாகும்.

உ

சிவமயம்.

ஆதி பூர்வக்யான உண்மைப் பிரகாசம்.

ஆதியில் இவ்வண்டங்கள் முதலாகச் சர்வ தோற்றங்களும் இல்லாமல் எங்கும் கடவுள் மயமாகவே விளங்கிக்கொண்டிருந்தன. அது எப்படியெனில் பரிசுத்தம்பொருந்திய தூய வெளியும் சாந்தசுடரோடுங்கூடிய ஒளியும் பேரின்பமும் கலந்தஏகவடிவமாகவே விளங்கிக்கொண்டிருந்தனவாகும்.

கடவுளுடைய சொரூபம்.

இவ்விதமாக வெகு காலம்வரை யிருந்துவரும் பொழுது பின்பு ஒரு காலத்தில் கடவுளுடைய அச்சொரூபத்தினின்று ஒரு சங்கல்பந் தோன்றியது. அச்சங்கல்பத்தின் பிரகாரமே கடவுளுடைய சொரூபத்திற் குள்ளாகவே மகா சக்தியினால் அநேக அண்டங்கள் அடுக்கடுக்காகவே தோன்றின. அப்படித்தோன்றிய அவைகளுள் கடவுள் சொரூபமே நிறைந்ததாக இருந்து வந்தன. பின்பு ஒரு காலத்தில் இவ்வண்டங்கள் தோறும் ஆகாய முதலாக ஐம்பூதங்கள் உண்டாகும்படியான சங்கல்பந்தோன்றியது. முதலில் ஆகாயந்தோன்றியது, ஆகாயத்திலிருந்து காற்று தோன்றியது, காற்றிலிருந்து நெருப்புத் தோன்றியது, நெருப்பிலிருந்து நீர் தோன்றியது, நீரிலிருந்து மண் தோன்றியது.

அண்டங்கள் உற்பத்தி.

இவ்விதமாக ஒவ்வொரு அண்டங்கள் தோறும் ஏற்பட்டு ஐம்பூதங்களின் வடிவமும் கடவுள் வடிவமும் கலந்ததாகவே விளங்கிக்கொண்டிருந்தன. இப்படிச் சிலகாலமிருந்து பின்னொரு காலத்தில் இவ்வண்டங்களில் மலைகள் முதலிய சடப்பொருள்கள் உண்டாகும்படியான சங்கல்பம் ஏற்பட்டு அவ்விதமாகவே உற்பவித்துச் சிலகால மிருந்து வந்தன. பின்பு ஒரு காலத்தில்

இவ்வண்டங்கள்தோறும் சீவராசிகள் உண்டாகும்படியான சங்கல்ப முண்டாயிற்று. அவ்விதமேபுல், பூண்டு, மரம், செடி கொடி முதலிய தாவர சங்கமங்களும் அதன் பின்பு வெகு காலஞ்சென்று எறும்பு, புழு, பூச்சி முதலிய பிராணிகளும், பின்பு பட்சி முதலியனவைகளும், அதன் பின் மிருக முதலிய பிராணிகளும் உற்பத்தியாயின. ஆனால், அக்காலத்தில் மனிதன், பசு, நெல், கோதுமை, பருத்தி முதலாக இவ்வைந்தும் ஏற்படவில்லை. மற்றவை யெல்லாம் தோன்றியிருந்தன. அதன் பின்பு இச்சீவர்களுக்கு ஓரறிவு முதல் ஐயறிவு வரை ஏற்படுத்தி அதனோடு மன முதலியதையும் இச்சையெனும் பற்றையும் அமைத்து மற்றும் பல விதத் தன்மைகளும் சட்டங்களும் பருவங்களையும் அமைத்துப் பின்பு ஒவ்வொரு அண்டங்களுக்கும் ஒவ்வொரு முடிவு காலமும் ஏற்படுத்தி இவ்விதமாக உலக சிருட்டி ஏற்படுத்திச் சிலகாலம் நிலவி நிற்பதும் பின்பு யுக முடிவில் கடவுளுடைய சக்தியினால் அக்னிப் பிரளயம், சலப் பிரளயம், வாய்வுப் பிரளயம் முதலிய பிரளயங்கள் ஏற்பட்டு ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்றில் நாசமடைவதும், மகாப் பிரளயத்தில் பூரணமாயழிவதும் பின்பு சில காலஞ்சென்று முன்போன்று உற்பத்தியாவதுமாக இருந்து வந்தன.

ஒரு காலத்தில் இப்போது மேருகிரி என்று விளங்கக்கூடிய மலையின் பக்கமாகவுள்ள ஒரு காட்டகத்தில் அநேக மனிதக் குரங்குகள் வாசஞ்செய்து வந்தன.

திரி முனிவர்கள் உற்பத்தி.

அவைகளுள் தலைமையாக ஒரு குரங்கு இருந்தது. அதன் மனைவியின் வயிற்றில் ஒரே கற்பத்தில் மூன்று ஆண் குட்டிகள் உற்பவித்தன. அவைகள் பால் குடிக்கும் பருவம் வரை தாய் தந்தையிடம் சேர்ந்

திருந்து பின்பு அவைகள் மூன்றும் தம்முடைய இனத்துடன் சேராமல் தனிமையாகவே வசித்துவந்து பின்பு அவைகள் எவ்வனப் பருவத்தை யடைந்தும் சிற்றின்ப முதலிய இச்சைகளும், தம்மினத்திற்குறிய சேட்டைகளும் அற்று மற்ற எல்லாவற்றிலும், அழகிலும், பலத்திலும் அறிவிலும் சிறந்தவைகளாக விளங்கின. மற்றும் அவைகளை மோகித்துச் சில பெண் குரங்குகள் அடுத்த போதிலும் அவைகளை யடித்து துறத்தி விடுவதும் உண்டு. இப்படித் தனிப்பட்ட முறையிலேயே இருந்து வரும்பொழுது ஒரு நாள் அவ்வனத்தைவிட்டு மலையடிவாரத்திற்குப் போய்வரலாமென்கிற இச்சையேற்பட்டு அவைகள் மூன்றும் புறப்பட்டுச் சென்றன. ஆனால் அக்காலத்தில் இக்காலத்தில் இருப்பதைப் போன்று அங்கே பனிக்கட்டிகளும், குளிரும் இல்லை; சாதாரணமாகவே இருந்தது. அங்கே பலவிதமான கனிகளெல்லாம் பழுத்து நிறைந்திருப்பதைக் கண்டு பெரும் மகிழ்சியுடன் வேண்டிய அளவிற்குக் கனிகளைப்பறித்து ஓரிடத்தில் உட்கார்ந்து சௌகரியமாகச் சாப்பிட வேண்டுமென்கிற எண்ணத்துடன் மலையினிடத்தே ஓர் விசாலமான குகையுட்சென்று கனிகளையெல்லாம் அங்கே வைத்து அம்மூன்றும் சுற்றிலும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு குரங்கு உற்றுநோக்கி ஆகா இந்த ஒவ்வொரு விதமான கனிகளையும் அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவித மதுரமான சுவைகளையும் ஏற்படுத்தியது யார்? அது எப்படி ஏற்பட்டது என்பதாகச் சிலநேரம் யோசித்துக் கொண்டிருந்து. பின்பு மற்ற இரு குரங்குகளிடத்திலும் இதைக் கூறிற்று. அதனைக் கேட்டு ஆம் நாங்களும் இதைத்தான் யோசித்துக்கொண் டிருக்கின்றோம் என்பதாகக்கூறி அவைகள் மூன்றும் கனிகளைக் கையில் வைத்துக்கொண்டு அதைப் பார்த்த வண்ணமாகவே

இச் சிந்தனையில் மூழ்கி இருந்தன. இப்படிச் சில நேரம் வேறு எந்தச் சிந்தனையுமின்றி மனதை இவ்வொரே சிந்தனையில் ஈடுபட்டு இருந்தவுடன் மனமானது ஏகாக்கரத்தன்மையுற்று மனப்பிரவிருத்தி யில்லாதபடியால் தன்னை மறந்த நிலையைப்பெற்று அக்குகையினிடத்தே அநேக வருடங்களாக இருந்துவிட்டன.


செகத் காரணப் பொருளை யறிதல்.

இப்படியிருக்க அத்தருணத்தில் உலக முடிவுகாலமானபடியால் கடவுளுடைய சக்தியினுல் அக்கினிப் பிரளயம் ஏற்பட்டு உலகமெங்கும் அக்னியானது பற்றி எரிந்து எல்லாம் வெண் சாம்பராக்கி விட்டது. சமுத்திரங்களெல்லாம் வெப்பத்தாற் கொதிப்புற்று அதிலுள்ள சர்வ சீவராசிகளெல்லாம் இறந்து மேலும் கீழுமாக மிதக்கின்றன. பர்வதங்களெல்லாம் தூள் தூளாக உடைந்து பொடியாகிவிட்டன. இந்த ஒரு பர்வத மட்டிலும் உடையாமல் அக்கினியாற் தாக்கப்பெற்று பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போன்று கல் மயமானது அற்று பொன்மயமாக விளங்கிற்று. அத்தருணத்தில் மலைக்குகையுள்ளிருந்த மூன்று குரங்குகளுக்கும் சரீரத்தில் சீதளம் ஏற்பட்டது. உடனே மனப்பிரவிருத்தி ஏற்பட்டுக் கண்களைத் திறந்து பார்த்தவுடன் இந்த அகோரமான நிலைமையைக் கண்டு பெரும் பயம் உண்டாகி மனமும் சரீரமும் நடுக்குற்று வருந்திப் பற்பல விதமாகச் சிந்தித்து நாம் இந்த இடத்திற்கு எப்படி வந்தோம் என்பதாக யோசித்து பின்பு அவைகளுடைய ஞாபகத்திற்கு உண்மை புலப்பட்டு ஆகா நாம் உலகத்தினிடத்தே சர்வத்திற்கும் காரணமாக உள்ளது எது என்பதை யறியவல்லவா சிந்தித்துக் கொண்டிருந்தோம். அதன் பின்பு என்ன நடந்தனவோ தெரியவில்லை. காரணப் பொருளையும் கண்டபாடில்லை


உ


பரவெளியினுள்
ஒளியாகிய
பரஞ்சோதி
வடிவம்

1


சுத்தப்
பரவெளியின்
வடிவம்

3


பரவெளியினுள்
பரஞ்சோதி வடிவம்
சோதியினுள்
ரூப அரூப வடிவம்

4


பரவெளியினுள்
பரஞ்சோதி வடிவம்
சி
வ
ய
ஓம்
ந
ம
சோதியுள்
பஞ்சாக்கர
வடிவம்

5


பரவெளியினுள்
பரஞ்சோதி வடிவம்

இப்பொழுது என் செய்வது என்பதாகப் பெரும் பயத்துடன் , சோர்ந்து நின்றதுகள்.

கடவுளுடைய ஐந்துவித தரிசனங்கள்

அச்சமயத்தில் திடீரென்று ஒரு பெரும் சப்தம் உண்டாயிற்று. அச்சப்தம் செவியிற் பட்டவுடன் முன்னிலும் அதிகபயமுடன் நிற்கும் போது நிமிச நேரத்திற்குள் முன் தோன்றப்பட்ட அக்னி சொரூபமானது நீங்கி உலகமெங்கும் பரிசுத்தமாகிய வெண்மை பொருந்திய ஏக வெளியாகவே நிறைந்து காணப்பட்டது. இதைப் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியமுற்று அதை நோக்கிய வண்ணமாகவே நின்றதுகள். ஆனால் இதுதான் காரணப்பொருள் என்பதாக அவைகள் கொள்ளவில்லை. பின்பு சிறிது நேரம் சென்று இவ்வொளியாகிய தோற்றம் மறைந்து எங்கும் ஒரே சோதிமயமாகவே காணப்பட்டது. இதையும் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியமுற்று அதை நோக்கிய வண்ணமாகவே நின்றன. இதுதான் சகத்திற்குக் காரணப்பொருள் என்பதாக அறியவில்லை. அதன் பிறகு அச்சோதியினிடத்தே அளவிடப்படாத பேரின்பத்திற்குரிய தோற்றமாகவும் தங்களுக்கு அகத்திலும் புறத்திலும் அளவிடப்படாத ஆனந்தமானது எக்காரணமில்லாமலே நிறைந்து அவ்வடிவமாகவும் நிற்கப்பெற்றன. அப்பொழுதும் அறிந்து கொள்ள முடியவில்லை. அதன் பிறகு அச்சோதியின் மத்தியில் ரூப அரூப முக்கோணம் பொருந்திய வடிவமாகத் தோன்றியது. அப்பொழுது மறியவில்லை பின்பு ஐங்கோண வடிவமாகத் தோன்றியது அப்பொழுதும் அறியவில்லை அதன் பிறகுதான் ஐங்கோணத்தின் மத்தியில் அவயவங்களோடுங் கூடிய பரசிவ வடிவமாகத் தோன்றியது அவ்வடிவத்தைக் கண்டவுடனே மிகுந்த ஆவலும் சந்தோசமும் உடையவைகளாய் கண் இமையாது பார்த்துக்கொண்டிருந்தன. அப்பொழுது பரம்

பொருளாகிய கடவுளிடததிருந்து ஒரு வாக்கியந்தோன் றிற்று. அதாவது ஓ முனிவர்களே! என்னை யாரென அறிந்தீர்களா? யானே சர்வ அண்டங்களுக்கும் காரண கர்த்தா என்பதாக அறிந்துகொள்ளுங்கள் என்ற வாக் கியமானது இவற்றினுடைய செவிகளில் பட்டவுடன் ஆனந்தமும் அன்பும் பக்தியும் மேலிட்டவைகளாய் பேரறிவோடுங் கூடிய மானிடத் தன்மையுந் தெய்வீகத் தன்மையும் வாய்ந்த உருவத்துடன் சிரமேற் கரங்களை கூப்பித் துதித்து தங்களை மறந்து சில நேரம் நின்று பின்பு தெளிவுற்று ஏ பகவான்! இந்த அண்டங்களை யெல்லாம் அளித்து சர்வ கிருத்தியங்களைச் செய்தும் அவைகளுக் கெல்லாம் காரண கர்த்தாவாக எப்படி யிருக்க முடியும் என்பதாகக் கேட்டபொழுது அதற்குக் கடவுள் புன்முறுவலுடன் ஆதியிற் தன்னுடைய சொரூப முதல் பின்பு இவ்வண்டங்கள் உற்பவித்ததை யும் தன்னுடைய மகா சக்தியையும் யுக முடிவிற் பிரளயகாலம் ஏற்படுவதையும் தாம் அவர்களுக்கு ஆரம்பத்தில் அளித்த காட்சிகளையும் ஆதியோடந்தம் வரை தெரிவித்துப் பின்பு நீங்கள் நம்மை

ஆதிபூர்வ க்யானங்களை யறிதல்.

யறியும் பொருட்டாக ஆயிரக் கணக்கான வருடங்க ளாக இருந்தீர்களென்பதாகவும் அவர்களுடைய பூர் வக்யானங்களையுங் கூறி இப்பொழுது உலக முடிவான படியால் நமது சக்தியால் அக்னிப் பிரளயம் ஏற்பட்டு உலகமெங்கும் நாமரூபமற்று வெண்சாம்பராகி விட் டது. நீங்கள் இருந்த மகத்துவத்தினால் இந்தப் பருவத மட்டிலும் அழிவுறுமல் அக்னியாற் தாக்கப்பட்டுப் பொன்மயமாக விளங்கிக்கொண் டிருக்கின்றது என்ப தாகச் சர்வ பூர்வக்யானங்களையும் திருவாய் மலர்ந்தரு ளினார். இவைகளெல்லாம் அவர்கள் செவியுற்று ஆனந் தமும் வியப்பும் அடைந்து பின்பு ஏ கடவுள் ளங்கள்

இந்த குகையினிடத்தே ஆயிரக்கணக்கான வருடங்களாக எப்படி ஆகார முதலியவைகள் இல்லாது இச்சரீரத்துடன் இருக்க முடியும். மேலும் எங்களுடைய மகத்துவந்தான் என்ன என்பதாகக் கேட்டபொழுது அதற்குக் கடவுள் முனிவர்களே! நீங்கள் என்னை யறியும் பொருட்டாக ஒரே சிந்தனையில் இருந்தபடியால் மனமானது சர்வ விவகாரங்களுமற்று நிர்க்குணத் தன்மையை யடைந்தது. அப்பொழுது நீங்கள் தேக முதல் சர்வ தோற்றமுமற்று பரநிலையோடுங் கூடிய எனது வடிவமாகவே விளங்கிக்கொண்டு இருந்தீர்கள் அதனுல் நீங்கள் அழிவுருமல் இருந்ததுடன் இப்பருவதமும் அழிவுருமல் பொன்மயமாக விளங்குகின்றது என்பதாகத் தெரிவித்தவுடன் அவர்கள் இதனைக் கேட்டு மிகுந்த ஆனந்த பரவசமடைந்து ஏ பகவான் எங்களுடைய மனதுள் அநேக இச்சைகள் உதயமாகின்றன. அந்த வரப் பிரசாதங்களை யெல்லாம் அளிக்கவேண்டு மென்பதாக வணங்கிக் கேட்டபொழுது, முனிவர்களே! இது உலக முடிவுகால மானபடியால் உலக மெங்கும் எவ்விதத் தோற்றமென்பதற்று ஏக வெளியாகவே சில காலமிருந்துவரும் பின்பு உலகம் உற்பத்தி காலம் ஏற்படும். அக்காலத்தில் உங்களுக்கு வேண்டிய லரங்கள் எது எதுவோ அவைகளை யெல்லம் கேளுங்கள் அப்படியே அளிக்கின்ருேம். அதுவரையில் முன்போலவே இக்குகையினிடத்தே எனது வடிவமாகவே இருக்கக் கடவீர்களென்பதாகக் கூறி மறைந்தருளினுர்.

அதன் பிறகு அம்மூவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்து பின்பு மறுபடியும் அக்குகையினிடத்தே முன்னிருந்த நிலையை யடைந்து கடவுள் மயமாகவே விளங்கிக்கொண் டிருந்தார்கள். அதன் பிறகு உலக சிருஷ்டிகாலம் ஏற்பட்டது. அப்பொழுது சப்த மேகங்

களும் ஒன்றுகூடி இடைவிடாது மழைபொழிந்து உலக மெங்கும் தண்ணீரானது, பரவி நிறைந்து நின்றது. பின்பு சில வருடங்கள் சென்று பூமியினிடத்தே ஏற்பட்டுள்ள வெப்பமும்உவர் முதலிய தன்மைகளும் நீங்கித் தண்ணீரானது வற்றிச் சமுத்திரங்களின் அளவிற்கு நின்றது. தீவுகள் மட்டிலும் அங்கங்கே காணப்பட்டன. அத்தருணத்தில் இம் முனிவர்களுக்கு சரீரத்தினிடத்தே அதிக வெப்பம் உண்டாயிற்று. உடனே அவர்களுக்கு மனப்பிரவிருத்தி ஏற்பட்டு கண்களை விழித்துப் பார்த்தார்கள். உலகில் எங்கினும் வெப்பமின்றி குளிர்ச்சிப் பொருந்தியதாகவே காணப்பட்டது. அப்பொழுது கடவுள் முன் கூறிய ஞாபகம் ஏற்பட்டு ஓகோ இதுதான் உலக சிருட்டி காலம்போல் தோன்றப்படுகிறது எனத் தெரிந்து அம்மூவருங் கடவுளை நினைத்து மிகுந்த அன்பு பக்தியுடன் நின்று துதிசெய்தார்கள். அச்சமயத்தில் கடவுள் பரசிவ வடிவமாகவே காட்சி யளித்தனர். உடனே அவர்கள் கண்டு ஆனந்த பரவசத்தினால் ஆடிப் பாடி சிரமேற் கரங்களைக் கூப்பித் தொழுது நிற்கும் பொழுது கடவுள் இவர்களை நோக்கி முனிவர்களே! நாம் முன் கூறியபிரகாரம் இதுவே உலக சிருட்டிகாலம் ஏற்பட்டது. ஆகையால் உங்களுக்கு வேண்டிய வரங்களை யெல்லாம் கேளுங்கள். அப்படியே அளிப்போமென்பதாக திருவாய் மலர்ந்தருளினர்.

மறுபடியும் உலக சிருட்டி.

அவ்வாக்கியத்தைக் கேட்ட முனிவர்கள் மிகுந்த சந்தோசத்துடன் ஏ கடவுள்! எங்களுடைய உருவத்தைப்போன்று உலகெங்கும் மானிட சிருட்டியும் அவர்களுக்குத் தகுந்த மேலான அறிவும்

திரிமுனிவர்கள் பெற்ற வரமும் மனிதர் முதலிய உற்பத்தியும்.

உத்தமமான ஆகார வகைகளும் மற்ற சீவர்களைப் போன்று நிர்வாண மில்லாமல் மறைமுகமான நிலைமையும் ஏற்படுத்துவதுடன் நாங்கள் நின்னை தரிசிக்க விரும்பும்போ தெல்லாம் நினது சுய வடிவமாகிய ஏக வெட்ட வெளியே வெண்மை பொருந்திய பர்வதமாகவும் நினது சோதி வடிவமே அப்பர்வதத்தின்மேல் சுவர்ணமயமாகிய ஆலயமாகவும் ஏற்பட்டு இப்பொழுது எழுந்தருளி யிராநின்ற இவ்வடிவமுடன் எழுந்தருளி இருந்து காட்சியளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டு வணங்கி நின்றார்கள்.

இவ்வாக்கியங்களைத் திருச்செவியுற்ற கடவுள் திருவுளமகிழ்ந்து முனிவர்களை நோக்கி அப்படியே அளிக்கின்றோம் மேலும் நீங்கள் இச்சரீரத்துடன் இவ்வுலகில் எவ்வளவு காலம் வரையில் வசிக்க வேண்டுமோ அதுவரையில் எவ்விதக் குறைவுமின்றி ஆனந்தமாக வசிக்கவும் மற்றும் நீங்கள் இவ்வுலகத்தினிடத்தே சீவர்களுடைய சரீர ஆன்மசுகத்திற் குரித்தானதும் பரமார்த்திகமானதுமான காரியங்கள் எது எது செய்வதற்கு விருப்பமோ அவைகளையெல்லாம் செய்யவும் மற்றும் நீங்கள் எங்கெங்கு உலகங்களுக்குச் சென்றுவர விருப்பமோ அப்படியே சென்றுவரவும், நம்முடைய சத்தியில் போதிய அளவு உங்களுக்கு அளித்திருக்கின்றோமென்பதாகக் கூறி மறைந்தருளினர். பின்பு அம்முனிவர்கள் மிகுந்த சந்தோசத்துடன் சிலநேரம் அவ்விடம் தங்கியிருந்து பின்பு அம்மேருமலையின் உச்சியிற்போய்ப் பார்க்கலாம் என்பதாகக் கருதி அங்கே ஏறிச் சென்றார்கள். அவ்விடத்தில் எல்லாம் சுற்றிப்பார்த்து பின்பு அங்கே ஓரிடத்தில் தங்கி யிருந்தார்கள். அதன் பிறகு கடவுள் முன்போலவே தனது சக்தியால் உலக சிருட்டி ஏற்படுத்தியதுடன் மானிட சிருட்டியும் ஏற்படுத்தி

அவர்களுக்கு ஐந்தறிவுடன் மேலான பகுத்தறிவையும் ஞான அறிவையும் படைத்து மனம், புத்தி, இச்சை முதலியவைகளையும் அமைத்து, அவர்களுக்கு ஆகார நிமித்தமாக நெல், கோதுமை இவைகளையும் படைத்து, ஆடையின் நிமித்தமாக பருத்தி என்னும் வர்க்கத்தையும் படைத்து மற்றும் அனுகூலமாக பசு வர்க்கத்தையும் படைத்தருளினர்.

உலகில் இவைகளெல்லாம் பிரவிருத்தி யடைந்து எங்கும் நிலவின. அதன் பிறகு அம் முனிவர்கள் பர்வதத்தைவிட்டு கீழே இறங்கிவந்து உலக சஞ்சாரஞ் செய்துவர விரும்பி அங்கங்கேசென்று எல்லாஞ் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்ததின் பின் மிகுந்த சந்தோசமடைந்து மற்ற உலகங்களையும் போய்ப்பார்க்க விரும்பி கடவுளுடைய சத்தியின் பெருமையால் ககன மார்க்கமாகச் சென்று அங்கங்கே பார்த்தபொழுது அவ்வுலகங்களில் பல அற்புதத் தன்மைகளையும் மற்றும் தங்களைப் போன்றதாகவே மானிடத்தன்மையும் தெய்வீகத் தன்மையும் வாய்ந்த சிருட்டியானதும் இருக்கக் கண்டு மிகுந்த சந்தோசத்துடன் மீண்டும் பூ உலகை நாடிவந்து முன்னிருந்த பொன் மேருகிரியை யடைந்து சிலநாள் இனிதுடன் வாழ்ந்து அதன் பிறகு முன் அமர்ந்திருந்த நிலையிலும் சுகத்திலும் விருப்ப முடையவர்களாய் அந்நிலையை யடைந்து அநேக வருடங்களாக அப்படியேயிருந்து விட்டார்கள். அதன் பிறகு மனமானது பிரவிருத்தி ஏற்பட்டு விழித்து எழுந்து சில நேரஞ் சென்றபின் நாம் அநேக வருடங்களாக இந்நிலையிலேயே இருந்துவிட்டோம் ஆகவே இவ்வுலகத்தின் நிலைமை யெப்படி யிருக்கிறதென்பதைத் தெரிந்திலோம் ஆகையால் உலகச் சஞ்சாரஞ் செய்துவர வேண்டுமென்பதாக உத்தேசித்தார்கள்.

அதன்பிறகு அம்முனிவர்கள் மூவரும் புறப்பட்டு அங்கங்கே சென்று பார்த்துக்கொண்டு வரும்பொழுது ஆதியில் தோன்றிய மனிதர்கள் காடுகளிலும் மலைகளிலும், ஆற்று ஓரம் முதலிய சம இடங்களிலும் வசித்துக்கொண்டும் மற்ற சீவன்களைப்போலவே அங்கங்கே விளைந்திருக்கக்கூடிய நெல், கோதுமைகளைக்கொண்டு வந்து சமையல்செய்யத்தெரியாமல் அரிசியாக்கி உண்பதும் அது போதிய உணவாகக் காணுது காய், கனி, கிழங்குகளையும், பச்சிலைகளையும் உண்பதுமாகவும் இடையில் ஆடைகளுக்கு பதிலாக இலைகளைத் தரித்திருப்பதும், வெய்யில், மழை, குளிர் இவைகள் நிமித்தமாக ஓரில்லம் ஏற்படுத்திக் கொள்ளத் தெரியாமல் அங்கங்குள்ள மரத்தினடியில் இலைகளால் பந்தலாகப் போட்டுக்கொண்டு வசிப்பதுமாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

ஆதியில் மனிதர்கள் நிலைமையும் சீர் திருத்தமும்.

அப்பொழுது அம்முனிவர்கள் அங்கு காடுகளின் வழியாக வந்தார்கள். காடுகளில் வசித்த மனிதர்களெல்லாம் இம்மூவரையுங் கண்டு பயந்து ஓடி ஒளிந்து கொண்டார்கள். இதைப் பார்த்த முனிவர்கள் இரக்கங்கொண்டு, அம்மனிதர்களை நோக்கி, ஏன் நீங்கள் கள்வர்களைப் போல் எங்களைக்கண்டு பயந்து ஓடுகிறீர்கள். பயப்படாமல் நீங்கள் எங்கள் முன் வெளியான இடத்தில் வாருங்கள் என்று அன்புடன் அழைத்து அவர்களுக்குப் பல புத்தி யுரைகளைக் கூறி, அவர்கள் இடையில் ஆடையாகக் கட்டியிருந்த தழைகளையகற்றி மரவுறிகளை அணிவித்துக்கொள்ளவும் சிறு சிறு குடிசைகளைக் கட்டிக்கொள்ளவும் காண்பித்து விட்டு பின்பு மலைகளின் வழியாக வரும்பொழுது அங்கு வசித்துவந்த மனிதர்களெல்லாம் இவர்களைக் கண்டு

மனிதத் தன்மையும் தொழில் உற்பத்தியும்

சிறிதும் அஞ்சாமல் மனத்திடங்கொண்டு தைரியமாக வும் பணிவு இல்லாமலும் எதிர்த்து நின்றுகொண்டிருந் தார்கள். இதைப் பார்த்த முனிவர் மூவரும் அவர்களை நோக்கி ஏன் நீங்கள் சிறிதும் பயமின்றியும், பணிவுமின் றியும் மறத்தன்மையுடன் நிற்கின்றீர்களெனக் கூறி, அவர்களுக்கு அன்புடன் பல புத்தி வுரைகளையும் கூறி அவர்களையும் மரவுறிகளை இடையில் அணியச்செய்து சிறு சிறு குடிசைகளையும் கட்டிக்கொள்ளவும் காண் பித்துவிட்டு பின்பு ஆற்று ஓர முதலிய சமவெளி இடங் களுக்கு வரும்பொழுது அங்கே வசித்திருந்த மனிதர்க ளெல்லாம் இவர்களைக்கண்டு ஆச்சரியமுற்று மிகவும் பணிவாகவும், அன்பாகவும் ஓரமாகவும் நின்றுகொண் டிருந்தார்கள். இவர்களைப் பார்த்த முனிவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டு நீங்கள் அகம் படிந்தவர்கள் மனிதருள் தேவத் தன்மை வாய்ந்தவர்கள் என்று அன் புடன் கூறி மரவுறிகளை யணியவும் சிறுசிறு குடிசை களைகட்டிக்கொள்ளவும் காண்பித்து பின்பு அவ்விடத்தி லேயே அம்மூவருந் தங்கி இருந்து யோசித்து இவர்கள் எல்லோரையும் சீர்திருத்தி மனிதர்கள் நிலைமையில் கொண்டுவர வேண்டும் என்பதாக உத்தேசித்தார்கள். இவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து முக்குணங் களில் ஒன்ருன தமோ குணத்தினர்களாய்க் காட்டில் வசித்துப் பயந்து ஒளிந்தவர்களைக் கள்வர்களெனப் பெயரிட்டும், இரசோகுண முள்ளவர்களாய் மலை இடங்களில் வசித்து எதிர்த்துப் பணிவு இல்லாமல் திடமாகவும் தைரியமாகவும் நின்றவர்களை மறவர்க ளெனவும் பெயரிட்டும், சாத்வீக குணத்தினர்களாய் ஆற்று ஓர முதலிய சம இடங்களில் வசித்து அகம் பணி வாகவும் அன்புடையவர்களாகவும் நின்றவர்களை அகம் படிந்தவர்கள் அகம்படியர் என்பதாகவும் பெயர் வைத் தும் விளங்களாயிற்று.

அதன் பிறகு சீர்திருத்த ஆரம்பித்து அங்கங்கே சிறு சிறு ஊர்களும், நிலங்களும் ஏற்படுத்தினுர்கள். பின்பு வேளாண்மைசெய்யவும் கூற்றுக்கொடுத்தார்கள். பின்பு தங்களுடைய யுக்தியினுலும் கடவுள் அளித்த சக்தியினுலும் பலவிதக் கருவிகளையறிந்து மண்ணினுலும் மரத்தினுலும் கல்லினுலும் பின்பு இரும்பு முதலிய லோகங்களினுலும் வேண்டிய கருவிகளையெல்லாம் கண்டுபிடித்தும் செய்தும் அங்கங்கே சென்று மற்றவர்களைப் பழக்குவித்தும் அவரவர்களுக்கு வேண்டிய நெல், கோதுமை முதலியவைகளைத் தாங்களே பயிர்செய்துகொள்ளவும் மண், மரம், புல் இவைகளால் இல்லம் ஏற்படுத்திக் கொள்ளவும், பருத்தியின் பஞ்சுகளைக் கொண்டு நூல் நூற்று ஆடையாக்கி அணிந்துகொள்ளவும், பசுக்களை பாதுகாத்துக் கன்ருனது பால் குடித்து மிஞ்சிய பாலை பூமியில் சொரிந்து வீணுகாமல் அப்பாலைக் கறந்து தாங்களே உபயோகித்துக் கொள்ளவும், காளை மாடுகளை ஏர் உழுக வைத்துக்கொள்ளவும் பின்பு தினந்தினம் காலையிலும் மாலையிலும் இவைகளுக்கெல்லாம் காரணக் கர்த்தாவான கடவுளைத் தவருமல் சிந்திக்கவும் கற்றுக் கொடுத்தார்கள். இப்படியாக இன்னும் பல தொழில் களையும், நல் வழிகளையும் காண்பித்து அங்கங்கே நிலவச்செய்து மிக்க மகிழ்ச்சியுடன் மறுபடியும் பொன் மேருகிரியை அடைந்தும் பின்பு தென் பொதிகை மலையிலும் தங்கியிருந்து கொண்டும் அடிக்கடி உலகைச் சுற்றிக் கவனித்துக் கொண்டும் இருந்து வந்தார்கள். (உலகில் மனிதர்கள் முதல் முதலில் தோன்றியது இந்தியாவின் தென் கடைசியில் என்பதை எல்லாத் தேச ஆராய்ச்சி யாளர்களும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். மொழியும் முதலில் தமிழ்மொழியே ஏற்பட்டுள்ளது.) என்பதும், தொழில் முதல் நாகரீகம் ஏற்பட்டதும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். பின்பு, அங்கங்கே

சிறு சிறு கிராமங்களும், நிலம் பண்படுத்தி, நெல், கோதுமை முதலியவைகளின் விளைவுகளும் உண்டாயின. ஒவ்வொருவரும் வேண்டிய எல்லாத் தொழில்களும் தாங்களே செய்து கொள்வதாகவும், எங்கும் நிலவி இருந்தன. ஆனால் மக்களுக்கு ஓய்வு என்பது இல்லாதிருப்பதை உணர்ந்து, அம்முனிவர்கள் ஒவ்வொரு தொழில்களுக்கும் ஒவ்வொருவரை ஏற்படுத்தி அவர்களுக்கு வேளாளர், தச்சர், கொள்ளர், அம்பட்டர், வண்ணார், பறையர், குயவர், நெசவாளர் அல்லது கைக்கலியர் முதலாக பல பெயர்கள் வைத்தும், அவர்களுக்குச் சீவனத்திற்கு வேண்டிய அளவுக்கு நெல், கோதுமை முதலியவைகளை பயிரிடுவோர்கள் எல்லோர்களும் சேர்ந்து கொடுப்பதாகவும், அங்கங்கே ஏற்படுத்தினார்கள். அம்பட்டர், அம்படச்சி இவர்கள் பிறப்பு இறப்பு முதலிய காரியங்களுக்கும், குருக்களைப் போன்று இருந்தார்கள். இப்படியாக அமைந்திருந்தது. அக்காலத்தில் இரவு பகல் என்பதும் நாள் மாதம் வருடம் முதலிய எவ்விதக்காலங்களும் இல்லாதிருந்தது. எப்பொழுதும் எந்த இடத்திலும் வெளிச்சமாகவே இருந்தன. சீவர்களுக்கு நித்திரை யென்பது இல்லை. எந்தெந்த சமயத்தில் எது எது நோக்கமோ அதைச் செய்வதும், சரீரத்திற்குக் களைப்பானபோது சிறிது ஓய்வு எடுத்துக்கொள்வதுமாக இருந்து வந்தார்கள். இதனால் பிராணிகளுக்கும், மனிதர்களுக்கும் பலவிதக் கெடுதிகள் ஏற்பட்டன. இதை அறிந்த முனிவர்கள் இவ்விடத்தில் நன்றாக யோசித்து, சீவர்களது தொழில்களுக்கு இடையூறானதும், ஓய்வுக்கும், நித்திரைக்கும் உரித்தானதும், இருள்தான் பொருத்தம் என்பதாக உணர்ந்து இதனைக் கடவுள் மூலமாக ஏற்படுத்த வேண்டுமென்பதாக எண்ணிக்கொண்டு பல இடங்களிலும் சென்று சஞ்சாரம் செய்துகொண்டு பின்பு மற்ற

உலகங்களைக் காண விரும்பிக் ககன மார்க்கமாகச் செல்லும்பொழுது விண்ணுலகிற்கு அப்பாற் போகும் சமயம் அங்கே பலவிதமான அற்புதக் காட்சிகளும் இன்பமும் அமிர்தமும் கலந்தாற்போன்று கேட்பதற் கரிய வாக்கியங்களும் சீவர்கள் ஏதாவதொரு மேலான பொருளைத் தேடி யலையும்பொழுது திடீரென்று கைக்கு அகப்பட்டால் எவ்வளவு ஆனந்தம் ஏற்படுமோ அதைப்போன்ற தன்மையும் அவ்விடத்தில் முனிவர்க ளுக்குப் புலப்பட்டது. உடனே அந்த இடத்தில் இறங்கிச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். பார்க்கப் பார்க்க மென்மேலும் ஆனந்த குதூகலமே உண்டா யிற்று. பின்பு அம்மூவரும் மிகுந்த ஆச்சரியமுற்று இதன் உண்மையை அறிய விரும்பி மிகுந்த ஆவலுடன் கடவுளை நோக்கி அன்பு பக்தியுடன் துதிசெய்து, பின்பு ஓரிடத்திலமர்ந்து ஐம்புலன்களையும் அடக்கித் தியானித் துக்கொண் டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கே பரிசுத்தம் பொருந்திய தூய வெண்மைப் பிரகாசத்தோடுங் கூடிய மகாப் பர்வதம் ஒன்று மிக அழகாக அமையப்பெற்றும், அதன் உச்சியில் சோதிப்பிரகாசம்போன்று படிகமயமான ஒப்பற்ற அழகிய ஆலயமும், அவ்விடத் திற்கு ஏறிச்செல்ல வழிகளும், பல சித்தி ரங்களை உடையதான கோபுரங்களும், உடையதாய் விளங்கிக்கொண்டிருந்தன. அம்முனிவர்கள் வெகுநேரம் தியா னித்துக்கொண்டிருந்து பின்பு கண்களைத் திறந்து பார்த்தார்கள். பார்த்தவுடன் இவ்வற்புத நிலைமையைக் கண்டு மிகுந்த ஆனந்த பரவசத்துடன் ஆகா நாம் கடவு ளிடத்தில் முன்னமே நாங்கள் தெரிசிக்க விரும்பும் பொழுது இவ்விதமாகவே காட்சி அளிக்க வேண்டு மென்பதாகக் கேட்டுக்கொண்டோ மல்லவா? அவ்

திருக்கைலாய தரிசனமும், பரசிவனுடைய வடிவமும், சத்திகளும், சிருட்டி, திதி, சங்காரம் இவைகளின் சக்தி தேவ தைகளும்.

விதமே கடவுள் அளித்திருக்கின்றார் என்பதாக ஞாபகம் ஏற்பட்டு உடனே அம் மூவரும் மலையின்மீது காணப்பட்ட வழியாக ஏறிச்சென்று உச்சியை அடைந்தார்கள். அங்கே அமைந்துள்ள ஆலயங்கள் முதலான பலவித அற்புதங்களை யெல்லாம் பார்த்து மிகுந்த ஆனந்த பிரவாகத்துடன் உள்ளே பிரவேசித்துப் பார்த்தபொழுது அங்கே எவர்களும் இல்லாமல் பரிசுத்தமாகவே இருந்தன. அவ்விடம் எங்கும் சுற்றிப் பார்த்து முடிவில் சன்னதியின் கடைசியில் சொல்வதற்கரிய ஒப்பற்ற அழகிய மண்டபமும், அதன் மத்தியில் தக்க ஆசனம் அமைந்த நவரத்ன மேடையும் இருந்தன. அதைக் கண்டவுடன் இந்த இடம்தான் கடவுள் எழுந்தருளியிருக்கக் கூடிய இடமாக இருக்கவேண்டுமென்பதாக அறிந்து அதன் முன்னதாக இரு கரங்களையும் சிரமேற் குவித்த வண்ணமாக வெகுநேரம் வரையில் நின்றுகொண்டிருந்தார்கள். கடவுளுடைய தெரிசனம் காணப்படவில்லை. மிகுந்த துக்கமுடன் துதிசெய்ய ஆரம்பித்தார்கள். பின்பு சில நேரஞ்சென்று கடவுளுடைய சொரூபம் அங்கே காணப்பட்டது. மிகுந்த ஆனந்தத்துடன் வணங்கித் துதித்து நின்று, ஏ பகவான் தாங்கள் செய்விக்கக்கூடிய இத்தகைய மகா அற்புதமான தன்மைகளுக்கும், மற்றும் சர்வ அண்டங்களிலும் சிருட்டி, திதி, சம்மாரம் என்னும் முத்தொழில்களை செய்விக்கக்கூடிய தன்மைக்கும் காரணமாகிய நினது சக்தியானது எத்தன்மை யுடையது, அதனுடைய வடிவந்தான் எப்படிப்பட்டது. அதனை நாங்கள் பிரத்தியட்சமாகக் காண விரும்புகின்றோம். ஆகையால் அதனைக் காண்பித்தருள வேண்டுமென்பதாக வணங்கி நின்றார்கள். அவ்வார்த்தையைத் திருச்செவியுற்ற கடவுள் புன்முறுவலுடன் ஏ முனிவர்களே! நீங்கள் அதனைப் பார்க்கவேண்டுமா? அப்படியானால் இதோ பாருங்கள் என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வாக்கியத்தைக் கேட்டு முனிவர்கள் மிகுந்த ஆனந் தத்துடன் கண் இமையாது பார்த்துக்கொண்டிருந்தார் கள். கடவுளுடைய வடிவத்திலிருந்து குபீரென்று செழுஞ்சுடரோடுங் கூடிய் சோதியானது தோன்றி யெங்கும் பிரகாசித்தது. அதில் நின்று முன்புறத்தில் பவள நிறம் போன்று ஒளி வீசுகின்ற மேனியுடன் ஒரு ஆண் வடிவமும் பின்பு இடப்புறத்தில் பச்சை நிறம் போன்று ஒளி வீசுகின்ற ஒரு பெண் வடிவமும் அப் பெண் வடிவில் நின்று பொன்னிறம் போன்ற ஒரு பெண் வடிவமும் தூய வெண்மை பொருந்திய நிறமு டன் ஒரு பெண் வடிவமும் தோன்றிற்று. வலப் புறத் தில் நீல நிறம் போன்று ஒளி வீசுகின்ற நிறமுடன் ஒரு ஆண் வடிவமும் அதன் பக்கமாக மஞ்சள் நிறமும் நான்கு முகமும் கொண்ட ஒரு ஆண் வடிவமும், அதன் பக்கமாக அகோரமான அக்கினிச் சுவாலையோடுங்கூடிய நிறம் பொருந்திய ஓர் ஆண்வடிவமும் காணப்பட்டன. இவைகளைக் கண்டவுடன் அம் முனிவர்கள் மிகுந்த வியப்பும் ஆனந்த முடையவர்களாய் நிற்கும்பொழுது சில நேரஞ்சென்று இவ்வடிவங்களுக்கு மத்தியில் கடவு ளுடைய சொரூபமும் முன்போன்று விளங்கிற்று. அப் பொழுது முனிவர்கள் வணங்கி ஏ பகவான்! இவ்வடி வங்கள் யார் யார் என்பது எங்களுக்குப் புலப்பட வில்லை என்பதாகக் கேட்டபொழுது,

ஏ முனிவர்களே! முன் புறத்தில் நிற்கக்கூடிய வடி வம் ஏதுவோ அதுவே சர்வ சக்திகளுக்கும் முதன்மை யாயும் சர்வ கிருத்தியங்களுக்கும் அனுகூலமானதாயும் உள்ள சக்தியின் வடிவமாகும். வலப்புறத்தில் நான்கு முகத்தோடும் நிற்கக்கூடிய வடிவமே உலகங்களைச் சிருட்டி செய்யுங் காலத்தில் ஏற்படக்கூடிய சக்தியின் வடிவம். அதன் பக்கமாக முகில் நிறத்துடன் நிற்கக் கூடிய வடிவமே நாம் சீவகோடிகளை இரட்சிக்குங் காலத்தில் ஏற்படக் கூடிய சக்தியின் வடிவம், அதன்

பக்கமாக அக்னி சுவாலையோடும் நிற்கக்கூடிய வடிவமே நாம் உலக சம்மாரம் செய்யுங் காலத்தில் ஏற்படக் கூடிய சக்தியின் வடிவம், இடப்புறமாக பச்சை நிற முடன் நிற்கக்கூடிய வடிவமே சர்வ சக்திகளுக்குங் காரணமாயும் என்னை விட்டு நீங்காததாயும் ஏற்பட் டுள்ள வடிவமாகும். அதன் பக்கத்தில் பொன்னிறமா யும் வெண்மை நிறமாயும் நிற்கக்கூடிய சக்தியின் வடி வம். இரண்டும் முன் கூறியுள்ள சிருட்டி திதி யென் னும் இரண்டு தொழில்கள் செய்விக்கக் கூடிய சக்திக ளுக்கு அனுகூலமான சக்திகளின் வடிவங்களாகும் என் பதாகக் கூறி மற்றும் உங்களுடைய நிமித்தமாக இவை களுக்கெல்லாம் மத்தியில் நிற்கக்கூடிய நமது வடிவமே சர்வத்திற்கும் காரணமானதும் சதா ஆனந்த முடைய தும், எப்பொழுதும் மங்களகரமானதும், ஆதியந்தம் நடு வற்றதும், உபசாந்தமே வடிவமாக உடையதும், சோதிமயமானதும், ஏக வெட்டவெளியானதும், எத் தன்மையும் எக்குணங்களும் அற்றதாக விளங்கக் கூடி யதுமான பரசிவம் என்பதாக நீங்கள் அறிவீர்களாக எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

இதனைக் கேட்ட முனிவர்கள் மிகுந்த ஆனந்த சாக ரத்தில் மூழ்கி, ஏ பகவான்! எங்கள் மீது கருணை வைத்து நாங்கள் தரிசிக்க விரும்பும்போதெல்லாம் இவ் விடத்திலேயே இவ்விதக் கோலத்துடன் காட்சியளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டபொழுது, அப்படியே அளிக்கின்றோம் என்பதாகக் கூறினர். அதன் பிறகு ஏ பகவான்! உலகில் எப்பொழுதும் எவ்விடத்திலும் வெளிச்சமாகவே ஏற்பட்டிருக்கின்ற படியால் சீவர் களுக்குப் பலவித இடையூறுகள் ஏற்படுவதாகப் புலப் படுகின்றது. ஆகவே இருள் ஏற்படுத்த வேண்டுமென்று வணங்கிக் கேட்டபொழுது, முனிவர்களே அப்படியே அளிக்கின்றோம். ஆனால், நீங்கள் பின்வருமாறு யோசிக்க வில்லை. உலகில் இப்பொழுது விளங்கிக்கொண் டிருக்கக்

கூடிய எதார்த்த வெளிச்சமானது மாறுதல் ஏற்படும். உலகில் எப்பொழுதும் எவ்விடத்திலும் இருளாகிய அந்தகாரமானது ஏற்படக்கூடும், இனிமேல் சீவகோடிகள் இருளில் எப்படி நிர்வகிப்பார்கள் என்பதாகக் கடவுள் முனிவர்க்ளை வினவியபொழுது முனிவர்கள் அஞ்சி வணங்கி ஒன்றும் பேசாது நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது பரசிவம், ஏ முனிவர்களே! உலக முதற் சர்வமும் கடந்த நமது நிலையாகிய மேலான பரநிலையை அடைந்து நம் சொரூபமாக விளங்கக்கூடிய ஞானிகளாகிய பெரியோர்களுக்கன்றி மற்ற சீவர்களுக்கெல்லாம் இனிமேல் உலகெங்கும் எவ்விடத்தும் இருளே நிறைந்து தோன்றும். க்ண்ணொளி இருந்த போதிலும் எம்பொருளும் தெரிய முடியாது. ஆகையால் மற்ரொரு ஒளியைக் கொண்டுதான் அறியவேண்டும். ஆகவே கண்ணொளிக்கு மற்ரொரு ஒளியானதும் எங்கும் பிரகாசிக்கக் கூடியதுமான ஒரு பெரிய ஒளிவடிவையும் ஏற்படுத்தி அது பாதி நேரம்வரையில் நின்று ஒளி விளங்கவும் பாதி நேரத்தில் பூரண இருளாகவே இருந்தாலும் சீவர்களுக்கும் பலபிரதி பந்தங்கள் ஏற்படக்கூடும் ஆகவே இருளும் பிரகாசமும் கொண்டதாயும் குளிர்ச்சி பொருந்தியதாயும் நிலவும்படியாக ஓர் ஒளிவடிவையும் மற்றும் சோதிப் பிரகாசத்தை யளிக்கக்கூடிய அநேக ஒளி வடிவங்களையும் ஏற்படுத்துகின்ரோம் என்பதாகக் கூறி மறைந்தருளினர். மற்ற வடிவங்களும் மறைந்தன. பர்வதமும் அதன் உச்சியிலுள்ள ஆலயமும் அப்படியே இருந்தன. அதன் பிறகு அம்முனிவர்கள் சந்தோசத்துடன் அவ்வாலயத்தில் சில நேரங் தங்கியிருந்து அதை விட்டு நீங்க மனம் வராமல் சில நேரம் நின்று பின்பு பரசிவத்தை நினைந்து வணங்கிக்கொண்டு அதை விட்டு நீங்கி மற்ற இடங்களையும் பார்த்துவிட்டுத் திரும்பி தேவலோகத்திற்கு சென்றபொழுது அங்கே தேவர்களெல்லாம் இவர்களைக் கண்டு மிகுந்த அன்பு பக்தியு

டன் உபசரித்து பின்பு தாங்கள் யாரென வினவிய பொழுது தங்களுடைய விருத்தாந்தங்களையும் ககன மார்க்கமாக உலக சஞ்சாரமாக வந்ததையும் பின்பு அங்கே நடந்துள்ள விடயங்களையும் ஆதியோடந்தமாக தெரிவித்தார்கள். இதனைக் கேட்ட தேவர்களெல்லாம் மிகுந்த வியப்பையும் ஆனந்தத்தையும் அடைந்தவர்க ளாய்ச் சிரசின்மேற் கரங்களைக் கூப்பி நின்று பலவித மாகத் துதி செய்து சாஷ்டாங்கமாக எல்லோர்களும் வணங்கி எழுந்துநின்று ஏ மகானுபாவர்களே தாங்களே மானிடர் முதல் எங்களுடைய சிருட்டிக்குங் காரண மாயும், சர்வத்திற்கும் காரணப் பொருளாகிய கட வுளைப் பிரத்தியட்சமாகத் தெரிசித்தவர்களாயும், எங் களுக்கெல்லாம் முதல்வராயும் விளங்கக்கூடிய தங்களு டைய பெருமையை என்ன கூறுவோம். தங்களுடைய தெரிசனம் இன்று கிடைத்த பாக்கியமே பாக்கியம். இனிமேல் எக்குறைவும் அற்ருேம் என்றும் இன்னும் பலவாகப் போற்றிப் பின்பு, ஏ பிரபுக்களே! எங்கள் மீதும் கருணைவைத்து நாங்களும் அப்பரசிவத்தை தெரி சிக்கும்படியான மார்க்கத்தை தெரிவித்தருள வேண்டு மென்பதாகக் கேட்டபொழுது அதனைக் கேட்ட முனி வர்கள், தேவர்களே உங்களில் யார் யார் தெரிசிக்க விருப்பமோ அவர்களெல்லாம் வாருங்கள் எங்களுக்குக் கடவுளாகிய அப்பரசிவ மளித்த சக்தியின் பெருமை யால் எல்லோர்களையும் அந்த இடத்திற்கு ககன மார்க்கமாகக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகின்ருேம். நீங்கள் அப்பருவதத்தையும் அதன் மேலுள்ள ஆலயத் தையும் மற்றுமுள்ள அற்புதக் காட்சிகளையுங் கண்டு பின்பு அம்மலையின் சார்பில் அமர்ந்து அக்கடவுளை நோக்கி மாதவஞ்செய்து அவருடைய திருக் காட்சியை யுங் கண்டு உங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை யும் பெறக்கடவீரென்றுங்கூறி அவர்களை யெல்லாம் ககன மார்க்கமாக அழைத்துச்சென்று அவ்விடம்.

சேர்த்துப் பருவதத்தையுங் காட்டி, மற்றும் தவத்தினுடைய உண்மை நிலைகளையுங் கூறிப் பின்பு நாங்கள் போய் வருகிறோம் என்பதாகத் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டுப் பூ உலகை நாடிவந்து பொன்மேருகிரியை யடைந்து சந்தோசத்துடன் அமர்ந்தார்கள்.

அதன் பிறகு உலகில் எங்கும் இருள் மூடிக்கொண்டது. பின்பு அதை நீக்கும்பொருட்டு உஷ்ண சுடரோடுங் கூடிய சூரியன் என்னும் பிரகாச வடிவம் தோன்றிற்று. அதன் பின் குளிர்ச்சியோடுங் கூடிய சந்திர னென்னும் பிரகாச வடிவம் தோன்றிற்று. பின்பு சொற்ப ஒளியை அளிக்கக் கூடிய அநேக நட்சத்திர மென்னும் பிரகாச வடிவங்கள் தோன்றின.

சூரியன் சந்திரன் உற்பத்தியும் பகல் இரவு உற்பத்தியும் நக்ஷத்திர உற்பத்தியும்

ஒவ்வொரு மண்டலங்களாக ஏற்பட்டது. அது முதலாக இரவு பகல் என்பதும், நாழிகை நாள் வாரம் மாதம் வருடம் காலம் முதலியவைகளும், ஓய்வு நித்திரை விழிப்பு இவைகளும் ஏற்பட்டன, இப்படியிருக்க அங்கே தேவர்களெல்லாம் அற்புதமான காட்சிகளையெல்லாம் சுற்றிப்பார்த்து அளவிறந்த ஆனந்தமுடையவர்களாய் சில நேரம் அங்கே தங்கியிருந்து பின்பு அப்பருவதத்தின் சார்பில் கடவுளை நோக்கி அரிதாகிய மாதவத்தில் அநேக வருடகாலம் வரையில் இருந்து பின்பு கடவுளுடைய காட்சியை முன்பு முனிவர்கள் தெரிசித்த பிரகாரம் தெரிசிக்கப்பெற்று தங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களையும் பெற்று மற்றும் தாங்கள் அனுதினமும் வந்து தெரிசிப்பதற்கு இவ்விதமாகவே காட்சியளிக்க வேண்டும் என்கிற வரத்தையும் பெற்று மிகுந்த ஆனந்தமுடன் தேவலோகம் வந்து சேர்ந்து பின்பு அவ்விதமே அனுதினமும் அங்கே சென்று பரசிவத்தை தெரிசித்து வந்தார்கள். இப்படியிருக்க பொன் மேருகிரியினிடத்தே வசித்து வந்த திரி

முனிவர்களுக்கு ஒரு நாள் இவ்வித எண்ணம் உதயமாயிற்று. அதாவது, மானிடர்கள் இவ்விதமாகவே மற்ற பிராணிகளைப்போலவே ஆகாரம் தேடுவதும் உண்பதும், உறங்குவதும், புணர்வதும், குழந்தைகளைப் பெறுவதும் பின்பு அழிவதும் பிறப்பதும் இவ்விதமாகவே இருந்துவந்தால் இவர்கள் நிலைமை என்ன ஆகும். இவர்கள் உய்வது எப்படி என்பதாக உத்தேசித்து இதற்கு என்ன செய்வது என்று பல தடவை யோசித்து பின்பு ஒன்றும் தோன்ருது, கடவுளாகிய பரசிவத்தினிடத்தே இக்குறையைக்கூறி, அவரால் இதற்கு வேண்டியதை ஏற்படுத்த வேண்டுமென்பதாக யோசித்து அப்பருவதத்தின் உச்சியிலேயே கடவுளை நோக்கி ஏ பரமேசுவரா! எங்களுடைய குறைப்பாட்டை நிவர்த்திக்கும் பொருட்டாகப் பரமகுரு வடிவமாக இவ்விடத்திற் காட்சியளிக்க வேண்டுமென்பதாக மனதிற் சிந்தித்துக் கொண்டு மூவரும் பயபக்தியுடனும் மிகுந்த அன்புடனும் பலவிதமாகத் துதிசெய்து பின்பு மன ஓர்மையுடன் தியானித்துக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது பரம்பொருளாகிய கடவுள் குருமூர்த்தமாகக் காட்சியளித்தனர். அக்காட்சியைக் கண்டவுடன் அளவிறந்த ஆனந்தத்துடன் போற்றி வணங்கி நின்று தங்களுடைய குறைகளைத் தெரிவித்தார்கள். அதனைத் திருச்செவியுற்ற பரசிவம் முனிவர்களே! முன் உங்களுடைய இச்சையின் பிரகாரமே மானிட பிறவியும் மேலான அறிவையும் அவர்கள் நிமித்தமாக இன்னும் பலவற்றையும் அளித்தோம். இப்பொழுது அவர்களுடைய அறிவிற்கும் மேலான அறிவைப் போன்றதும், அவர்களின் அறிவிற்கு விளக்கமானதும், அனுகூலமானதும் சர்வமும் அடங்கியுள்ளதுமான வேதமென்னும் சில வாக்கியங்களை நாம் உங்களுக்கு மொழிகின்ருேம்.

அதனை உலகில் எல்லோர்களுக்கும் போதித்து, அவர்களை அவ்வழியில் நடைபெற செய்தால் மேலான

வேதம் உற்பத்தி.

மானிடத் தன்மை உடையவர்களாகவும், பின்பு தெய்வீகத் தன்மை உடையவர்களாகவும், அதன் பின் பிரமக்ஞானத் தன்மையோடுங் கூடிய பரநிலையைப் பெற்று நம் சொரூபமாகவே விளங்கக் கூடியவர்களாய் நின்று முடிவில் நம்முடைய எதார்த்த சொரூபத்துடன் இரண்டறக் கலத்தலாகிய அத்துவித மூக்தியை யடையப் பெறுவார்கள் என்பதாகக் கூறிய பின்பு அவ்வாக்கியங்களை ஆதியோடந்தமாகக் கர்ம காண்டம், பக்திகாண்டம், ஞானக் காண்டம் என்று மூன்று நிலையாகப் புகன்று மற்றும் அதற்குரிய வழிகளையும் பரம இரசியங்களையும் மந்திரங்களையும் தெரிவித்து மறைந்தருளினார். அம்முனிவர்கள் இவைகளை யெல்லாம் செவியுற்று மிகுந்த சந்தோசத்தை யுடையவர்களாய்ச் சில நாள் அவ்விடமிருந்து கடவுள் கூறிய எல்லா வற்றையும் மீண்டும் மீண்டும் சிந்தித்து நன்றாக மனனஞ் செய்துகொண்டு பின்பு உலகிற் போதிக்க விரும்பி அங்கங்கே சென்று கர்மகாண்டங்களையும், பக்தி காண்டங்களையும் அதற்குரிய வழிகளையும் செவிப்பாடமாகப் போதித்துக்கொண்டு மேலும் ஒவ்வொரு கிராமங்களுள் ஒவ்வொரு தக்க மனிதர்களுக்கும் நன்றாகப் போதித்து அவர்களை அங்கே கர்மகாண்டப்பிரகாரம் நன்மை தீமை முதலிய எல்லா காரியங்களுக்கும் குருக்களாகச் செய்யும்படி ஏற்படுத்தி அவர்களுக்கு ஆச்சாரியார் என்னும் நாமம் சூட்டி எல்லோர்களும் கீழ்ப்படிந்து அவர்களை வணங்கும்படியான முறையில் ஏற்பாடு செய்து எங்கும் நிலவச் செய்தார்கள். மற்றும் அங்கங்கே மானிடர்கள் ஒன்றுக்கொன்று அடங்காமல் சண்டைகளும் கலகங்களுமாக ஒற்றுமையில்லாதிருப்பதை யுணர்ந்து ஒவ்வொரு கிராமங்களுக்கு ஒவ்வொரு தலைவனையும் மற்றும் பத்து கிராமங்களுக்கு
ஒவ்வொரு தலைவனையும் மற்றும் பத்து கிராமங்களுக்கு

ஒரு பெரிய தலைவனையும் ஏற்படுத்தி எல்லோர்களும் அவர்களுக்குக் கீழ்படிந்து நடக்கும்படி செய்து அவர்களுடைய சீவனத்திற்குப் போதிய அளவு தானியங்கள் எல்லோரும் வசூல்செய்து கொடுக்கும்படியாகவும் செய்து அவர்களுக்கு நீதி மார்க்கங்களையும் போதித்து அவ்வழியில் எல்லோர்களையும் நடத்தி வரும்படியாகவே எங்கும் ஏற்படுத்தினர்கள். (அதுவே பின் காலத்தில் நாளுக்கு நாள் அரசர்கள் என்கிற நிலைமையில் ஏற்பட்டதாகும்.)

பின்பு வேதத்தின் முடிவான ஞான காண்டத்தைப் போதிக்க தருமப் பாடசாலை ஏற்படுத்தி அதில் ஐந்து வயது முதல் ஏழு வயதிற் குட்பட்டதாயும் அழகும் சிவப்பு நிறம் வாய்ந்ததாகவும் அவயவப் பழுது இல்லாததாகவும் பல குழந்தைகளைக் கொண்டுவந்து சேர்த்து, அவர்களுக்கு உணவு, உடை முதலியவைகளெல்லாம் தாங்களே அளித்து அவர்களுக்குப் பூனூல் திருநீறு முதலிய சின்னங்கள் அணிந்து இவர்கள் அதிகாலையில் (நான்கு மணிக்கு) எழுந்து குளிக்கவும், திருவெண்ணீறு முதலிய சின்னங்கள் முறையுடன் அணியவும், பின்பு கடவுளைத் தியானிக்கவும், அதன் பிறகு வேதத்தின் ஞான காண்ட வாக்கியங்களை அமர்ந்து கேட்கவும் பின்பு அவைகளை மனனம் செய்யவும் மாலையிலும் அவ்விதமே செய்யவும் அவ்வழிகளில் தவருமல் நடக்கவும் இப்படியாக அவர்களைப் பழக்கிவந்து இப்பாடசாலையே பின் காலத்தில் குருகுல வாசம் என்னும் வேதப் பாடசாலை என்று ஏற்பபட்டதாகும். பின்பு அவர்களுக்குத் தெளிவும் திடமும் வந்தபின்பு மேலான மந்திரங்களையும், உயர்ந்த நிலைகளையும் போதித்து ஆங்காங்கே ஊர்களுக்குச் சிறிது தூரத்திற்கு அப்பால் உயர்ந்த திசையாகிய வடபுறம் அல்லது மேல்புரத்தில் ஏகாந்தமாகஒவ்வொரு சிறு அகங்கள் அதாவது குடிசைகள் ஏற்படுத்தி அதனிடத்தே இவர்கள் ஒவ்வொருவரை

யும் பிரமச்சாரிகளாக இருக்கும்படிச்செய்து யாதொரு பற்றுமின்றி சதா பிரம்ம திருஷ்டியிலேயே இருந்து எல்லாம் கடவுள் மயமாகவும் தன் மயமாகவும் கொண்டு ஆனந்தமாக இருப்பதுடன் மற்ற மாந்தர்களுக்கும் குருவாக நல்ல வாக்கியங்களைப் போதித்துக் கொண்டும் இருக்கும்படி ஏற்படுத்தி அவர்களுக்குத் தேகத்தின் நிமித்தம் வேண்டிய அரிசி, பருப்பு முதலியபொருள்களை அந்தந்த ஊர்களிலுள்ள பொது சனங்கள் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருவரும் கொண்டுவந்து கொடுக்கும் படியாகவும் இவர்களைக் கடவுளைப்போன்றும் மதித்து வணங்கும்படியாகவும் இவர்களே சுவாமியென்றும் எல்லோர்களுக்கும் தெரிவித்து இவர்களுக்கு (பிரம்ம நம்) அல்லது பிரமணர் என்ற நாமம் சூட்டினுர்கள். அதாவது கடவுளென்று சொல்லக்கூடிய பிரமம், அல்லது சர்வத்திற்கும் காரணமான மகா பெரிதாகிய அப்பொருள், நம் அதாவது நாம் மேலும் கடவுளாகிய பிரம்மத்தை யறிந்து தங்களுடைய சீவத்தன்மைகளை யெல்லாம் நீத்து அப்பிரம்மத்தின் தன்மை முதலிய குணங்கள் எதுவோ அதைப் பெற்று, அதுவே தாமாக நிற்கக்கூடிய முடிவான மாநிலையை உடைய பிரமக் ஞானிகள் என்பதாக ஏற்படுத்தினுர்கள்.

அந்த நாமமே பின் காலத்தில் பிரமணரென்று நிலவி நின்று இக்காலத்தில் பிராமணர் என்பதாக விளங்குகின்றது. மற்றும் இக்காலத்திலும் பிராமணருடைய குழந்தைகள் ஐந்து வயதிற்கு மேற்பட்டு (உபநயனம்) செய்த பிறகுதான் பிராமணரென்றும் அதுவரையில் சூத்திரனென்றும் அக்கொள்கை இப்பொழுதும் நடந்து வருகின்றது. சூத்திரனென்றுல் அஞ்ஞானமாகிய அழுக்குடையவன் என்பதாம். முன் கூறியுள்ள அகம் என்பது உள் என்றும் பொருள். இருதயம் அதனிடத்தே கடவுளாகிய பிரம்மம் வசிப்பதாகவும் அதைப்போன்று இவர்கள் வசிக்கக்கூடிய இல்லத்திற்

கும் அகம் என்பதாக ஏற்படுத்தினர்கள். அதுவே இக் காலத்தில் அகத்துக்கு என்பது ஆத்துக்கு என்று விளங் குகின்றது. (உபநயனம்) என்பது உப-அனுகூலமான; நயனம் என்பது கண், அதாவது அனுகூலமான கண் எப்படி எனில் முன்னேற்பட்டுள்ள இரு கண்களுக்கும் மற்றும் அறிவாகிய கண்களுக்கும் உதவியாகிய கண் இதுவே வேதமெனப்படும், இதனைப் பெற்ற பின்பு தான் பிராமணரென்றும் (கருத்து) வேதமென்னும் உப நேத்திரத்தைப் பெற்றோர்கள் பிரமக் ஞானிகளாகிய பிராமணரென்றும் அதனைப் பெருதவர்கள் அந்தகரா கிய அஞ்ஞானச் சூத்திரரென்றும் கருத்தாகும்.

கடவுள் என்பது சர்வமும் கடந்து நிற்கக்கூடிய பொருள் என்றும் மற்றும் உள்ளும் புறமும் கடந்தும் நிற்கக்கூடிய பொருள் என்றும், ஆதி யென்றும் சர்வத் திற்குக் காரணப் பொருள் என்றும் சர்வ உலகங்களி லும் அதில் தோன்றக்கூடிய சர்வ பொருள்களிடத்தி லும், உள்ளும் புறமும் நிறைந்து தெரியாது பூரணமாக நிற்கக் கூடிய மாபெரும் பொருளாகும். இவை நிற்க,

ஆதி திரிமுனிவர்கள் ஏற்படுத்திய பிரகாரம் அங் கங்கே இவர்கள் அத்தகைய நிலையில் வழுவாது வெகு காலம் வரையில் நிலவி நின்றார்கள். பொது சனங்களும் அவர்களைக் கடவுளாகவே பாவித்து மிகுந்த அன்பு பக்தியுடன் நடந்து வந் தார்கள். இப்படியிருந்து பின் காலத்தில் நாளுக்குநாள் சிற்றின்ப முதலிய பல வித இச்சைகளும், பற்றுகளும் ஏற்பட்டது. அதன் பிறகு பற்றற்று இல்லறத் தில் வாழ்ந்துகொண்டே அந்நிலையும் முத்தியென்னும் பதவியும் அடையலாமென்றும் அதற்கு தகுந்த கண்டிப்பான திட்டங்களையும் ஏற்படுத்தி ஐந்து வயதிற்கு மேற்பட்டதும், ஒன்பது வயதிற்கு உள் பட் டதுமான பெண் குழந்தைகளை மணம் புரிய உத்தே சித்துப் பெண் குழந்தைகளில் அவயவ ஈனமில்லாத

இல்லற பிரா மணர்கள், ரிசிகள். துறவிகள் உற்பத்தி.

குழந்தைகளாகவும் அழகும் சிவப்பும் வாய்ந்ததாகவும், பார்த்து மணம் செய்ய ஆரம்பித்தார்கள்.

பெண்கள் திருமணமாகி வேதங்களைக் கேட்டபிறகு தான் பிராமணப் பெண்கள் என்பதாக இன்னும் இருக்கிறது. அது ஏனெனில் சிறு வயதிலேயே இவர்களுடன் இருந்து நல்ல பழக்க வழக்க முதலிய ஒழுக்கங்களும், வேத வாக்கியங்களும் கற்றுக்கொள்ளும்படி ஏற்படக் கூடுமென்றும், பருவ முற்ற பெண்களாயின் இவைகள் ஏற்படுவது கஷ்டமென்றும் உத்தேசித்தே இவ்விதம் ஏற்படுத்தி மணம் செய்த பின்பு, பந்துக்களுடைய வரத்து போக்குக் கூடாதென்றும் பெண்களுக்கு மூன்று ஆடையும், ஆண்களுக்கு இரண்டு ஆடையும் அதற்கு மேல் இருக்கக்கூடாதென்றும், ஒவ்வொரு நாளும் உணவுக்கு வேண்டியதைப் பொது சனங்கள் கொண்டுவந்து முன் போன்றதாக கொடுக்கும்படியாகவும், அந்த ஆகாரத்திலும் சாப்பிட்டு மீதியானதை உடனே வெளியிற் கொண்டுவந்து எவர்களாயினும் பசித்தவர்கள் உண்ணும்படியாக வைத்துவிடவேண்டு மென்பதாகவும், பிராமணர்கள் பழையது சாப்பிடக்கூடாது என்பதாக இக்காலத்திலும் நிலவுகின்றது. மீதமானது தீண்டல் என்பதாக ஆதியில் ஏற்பட்டதாகும். எவ்வித இச்சையுமின்றி எல்லோர்களையும் சமத்துவமாகவும், குழந்தைகளாகவும் பார்க்கவேண்டு மென்பதாகவும், இன்னும் பல கட்டுபாடுகளையும் ஏற்படுத்தி இந்த பிரகாரம் அந்த வேதாந்த முறையின்படி பற்றற்ற நிலையில் தங்களால் கூடியவரையில் மிகவும் வற்புறுத்தலாகப் பலவித சிரமங்களுடன் சிலகாலம் வாழ்ந்து வந்தார்கள். பிராமண சந்ததிகளும், குடும்பங்களும் அபிவிருத்தியாயின. பின்பு வரவர அந்நிலையிலும் நிற்க முடியாமல், பலவித பந்த பாசமுதலிய பற்றுகளும், பலவித இச்சைகளும் ஏற்பட்டது. அதன் பிறகு, அப்பிரமஞ்ஞான நிலைக்கும், முத்திக்கும் விருப்பமுடைய சில பெரியோர்களெல்லாம் பலவித

மாக யோசித்து, திருமணம் புரிந்தவுடன் வனத்தினிடத்தே சென்று அங்கே இல்லம் ஏற்படுத்திக்கொண்டு, இருபேர்களுமாக வாழப்பெற்ருல் பற்றற்ற அங்கிலேயில் வாழலாமென்கிற உத்தேசம் ஏற்பட்டு, அவ்விதமே நாட்டைவிட்டுக் காட்டினிடத்தே சென்று ரிஷிகள், முனிவர்களென்கிற நாமமுடன் வாழ்ந்து வந்தார்கள்.

சில காலம் இவர்களும் அங்கிலேயில் தங்களாற் கூடியவரையில் மிகுந்த பிரயாசையுடன் ஈடுபட்டு வந்தார்கள். பின்பு, வரவர அவர்களுக்கும் பந்தம் முதலிய பற்றுகளும், கோபம், தாபம், அபிமானம், இச்சை முதலியவைகளும் ஏற்பட்டது. அதன் பிறகு சில பெரியோர்கள் இதனை அறிந்து இதுவும் சரியன்று, தவத்திற்கும், சற்கருமங்களுக்கும் இது பொருத்தமேயல்லாமல் அத்தகைய பிரமக் ஞான நிலேக்குப் பொருத்தமன்று என்பதாகப் பலவிதமாக யோசித்துப் பின்பு அகப்பற்றும், புறப்பற்று முதலாகச் சர்வமும் நீத்து ஏகாந்தமாக நிலவக்கூடிய நிலே எதுவோ அதுவே ஞானநிலேக்கும் இன்பசுகபோகத்திற்கும் தக்கபொருத்தம் என்பதாக அறிந்து அதற்கு துறவு என்றும், சந்நியாசம் என்றும் நாமம் ஏற்படுத்தி, அதிலும் நான்குவிதச் சந்நியாசம் பின்பு வைத்தார்கள். அதனைக் கைக்கொண்டு அந்த நிலேயையும் இன்பசுக போகத்தையும் முத்திபேற்றையும் அடையும்படி நிலவி வந்தது. பிற்காலத்தில் வரவர அவையும் பந்தபாச முதலிய இச்சைகளுக்கு உட்பட்டு இப்பொழுது அதுவும் கெட்டுவிட்டது. ஆனல், பிராமணர்களிலும், முனிவர்களிலும், துறவிகளிலும் ஆதிமுதல் நாளதுவரையில் உண்மையான பெரியோர்களும் இருந்தேவருகிருர்கள். ஆதி பிராமணர்களுக்கு ஏற்பட்டுள்ள சுவாமி என்கிற பட்டமே பின்பு துறவிகளுக்கும் ஏற்பட்டது.

முன்பு ஆதி திரி முனிவர்கள் வேத வாக்கியங்களையெல்லாம் உலகில் நிலவச் செய்து விட்டுப் பின்பு மகா

மேருகிரியை அடைந்து சந்தோஷமாக வசித்துவந்த பொழுது ஒருநாள் இந்த எண்ணமானது உதயமாயிற்று.

தமிழ் உற்பத்தி.

அதாவது, மானிடர்களுக்கும் மொழி இல்லாதிருப்பது பொருத்தமாகப் புலப்படவில்லை ஆகவே ஒருவித அட்சர மொழியை உலகில் ஏற்படுத்த வேண்டும் என்பதாக முனிவர்கள் மூவரும் உலக சஞ்சாரஞ் செய்யக்கருதிப் புறப்பபட்டு அங்கங்கே சென்று கவனித்துக்கொண்டும், சிற்சில சீர் திருத்தங்களைச் செய்துக்கொண்டும் தென் பொதிகை மலையில் வந்து தங்கி யோசித்தும், பின்பு ககனமார்க்கமாகத் தேவலோகத்திற்குச் சென்றார்கள். அங்கே தேவர்களெல்லாம் இவர்கள் வரவைக் கண்டவுடன் அளவிறந்த ஆனந்தத்துடன் எதிர்கொண்டழைத்துக் கொண்டே தேவேந்திரனுடைய மாளிகைக்குச் சென்றார்கள். அதற்குள்ளாகவே தேவேந்திரன் இம்முனிவர்களுடைய பெருமையும், இவர்களுடைய வரவையும், அறிந்து மிகுந்த சந்தோசத்துடனும், பயபக்தியுடனும் பல தேவர்கள் சூழவந்து எதிர்கொண் டழைத்துப் போய் தக்க ஆசனங்களில் இவர்களை அமரச்செய்து சோடச உபசாரங்களுடன் எல்லோர்களும் தங்கள் தங்கள் கரங்களைச் சிரமேற்கூப்பியவண்ணமாக நின்று பலவித தோத்திரஞ்செய்து போற்றி சாஷ்டாங்கமாக வணங்கி யெழுந்துநின்று, ஏ பிரபுக்களே! தாங்கள் இதற்கு முன் இவ்விடம் வந்து தாங்கள் அளித்த தெரிசனத்தின் பாக்கியத்தால் நாங்கள் விரும்பியதெல்லாம் பெற்று மேலான இன்ப சுக நிலையையும் அடையப்பெற்றோம். தாங்கள் இப்பொழுது அளித்த தெரிசனத்தின் பாக்கியத்தால் இதற்கு மேலான பாக்கியம் என்ன கிட்டுமோ அறிந்திலோம் என்று பலவாறுகப் புகழ்ந்துநின்ற பொழுது முனிவர்கள் மிகுந்த ஆனந்தத்துடன் தேவர்களை நோக்கித் தேவர்களே, நாங்கள் உங்களை யெல்லாம் அவ்விடம் சேர்த்துத் தவம் செய்யும் படியாக

விட்டு நாங்கள் சென்ற பின்பு அங்கே நடந்துள்ள விடயங்களை யெல்லாம் விபரமாகவும் ஆதியோடந்தமாகவும் தெரிவியுங்கள் என்பதாக முனிவர்கள் கேட்டபொழுது எல்லோர்களும் மிகுந்த சந்தோசத்துடன் தெரிவிக்க ஆரம்பித்தார்கள். ஏ மகானுபவர்களே! நாங்கள் அவ்விடத்தில் முதலில் அன்ன ஆகாரத்துடன் சில் காலம் தாங்கள் தெரிவித்தப் பிரகாரம் அருந்தவத்தைச் செய்தோம். அதன் பிறகு அன்ன ஆகாரமில்லாமல் தேக முதல் எல்லாத் தோற்றங்களும் அற்றவர்களாய் மகா அரிய தவத்தைச் செய்தோம். இவ்விதமாக அநேக வருடகாலம் வரையில் செய்யும்பொழுது ஒரு சமயம் மாபெரும் சப்தமானது முழங்கிற்று. அதனால் எங்களுடைய தவ நிலையானது நீங்கப்பெற்று, கண்களைத் திறந்து பார்த்தவுடன் பர்வதத்தின் உச்சியில் சோதிமயமாக விளங்கிக்கொண்டிருந்தது. அதனைக் கண்டு மிகுந்த ஆனந்தமும், வியப்பும் உடையவர்களாய் அங்கே ஏறிச்சென்றோம். அக்காலத்தில் அச்சோதி மறைந்துவிட்டது. பின்பு ஆலயத்தினுள்ளே சென்ற பொழுது அங்கே தாங்கள் தெரிவித்த பிறகாரம் சர்வ சக்திகளோடுங் கூடிய வடிவத்துடன் கடவுளாகிய பரசிவம் எழுந்தருளியிருந்தனர். அக்காட்சியைக் கண்டு அளவிறந்த ஆனந்த பிரவாகத்துடன் ஆடிப்பாடித் துதித்து சாஷ்டாங்கமாக வணங்கி நின்ற பொழுது கடவுள் எங்களை யெல்லாம் திருக்கண்நோக்கி தேவர்களே உங்களுக்கு வேண்டிய வரங்களையெல்லாம் கேளுங்கள் அப்படியே அளிக்கின்றோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாக்கியத்தைக் கேட்டு மிகுந்த அன்போடும், பணிவோடும் எல்லோர்களும் வணங்கி, ஏ பரமேஸ்வரா! நாங்கள் இப்பொழுது தெரிசித்த பிறகாரமே அனுதினமும் வந்து தெரிசித்து இன்பமடையும் பொருட்டாக நின்று சக்திகளாகிய இவ்வடிவங்களும்

திருக்கைலாய தரிசனமும் தேவர்கள் பெற்ற வரமும்.

நினது திருவடிவமும் நீங்காது இருக்கவேண்டு மென்பதூகவும் மற்றும் என்றும் எங்களுக்குத் தங்களுடைய திருவருட்கிருபை இருக்கவேண்டு மென்பதாகவும், எங்களுக்கெல்லாம் தலைவனுக இருந்து காக்கும்பொருட்டாகத் தங்கள்து சக்திவாய்ந்த ஒரு தலைவனையும், மற்றும் எங்களுக்கெல்லாம் குரு மூர்த்தமாக நின்று நாங்கள் தீய வழிகளில் செல்லாமல் தடுத்து பரமார்த்திகமான நல்வழிகளில் நடப்பிக்கக் கூடிய நினது அனுக்கிரகம் வாய்ந்த ஒரு பரம குருவையும் மற்றும் இன்னும் எங்களுக்கு வேண்டிய பல வரங்களையும் கேட்டபொழுது கடவுள் திருச்செவியேற்று எங்களை நோக்கி, தேவர்களே! நீங்கள் கேட்க கூடாத வரத்தை முன்னதாக கேட்டீர்கள். நாம் எதுவாயினும் தவிற்காமல் அளிக்கக் கூடியதான கிரமமாக இருக்கின்றபடியால் அளிக்கின்ருேம். ஆனுல் நாம் உலக சம்மாரம் செய்யுங்காலத்தில் உதயமாகக் கூடிய சக்தி எதுவோ அதுவே வலப்புறத்தில் நிற்கக்கூடிய வடிவமாகும். இதன் நாமம் கால உருத்திரன் என்பதாகும். இது மகா கோபமும் மகா அக்னி சுவாலையும் அகோரமான வடிவமும் கலந்துள்ளது. ஆகையால் இவ்வடிவுடன் நிற்குமாயின் உலகில் சர்வ சீவர்களுக்கும் சதா ரசோகுணமும் சதா அக்னி சுவாலையும் அகோரத் தோற்றமும் ஒருவரை யொருவர் கொன்று கொல்லக் கூடிய பகையும் சதா நிரந்தரமாகவே இருப்பதுடன் உலகில் அடிக்கடி கலகங்களும் பல அபாயங்களும் எக்காரண மில்லாமல் அக்னி பற்றி எரிவதும் முதலான அநேகம் அபாயங்கள் ஏற்படக்கூடும். ஆகையால் சீவர்கள் உலகில் வாழப்பெறுவது மிகவும் துர்லபமாகும். ஆகவே அவ்வடிவத்தை மட்டும் மகா உபசாந்த முடையதும் மகா தண்மயமானதும் என்றும் பேரின்பம் நிறைந்துள்ளதும் சதா மங்களகரமானதும் சர்வமும் அடக்கிக்கொள்ளக் கூடிய தன்மையுடையது மான நம்முடைய பரசிவ வடிவில் முன்போலவே சேர்த்

துக்கொள்ளுகின்றோம். ஆகையால் நம்மை (உருத்திர பரசிவம்) என்பதாகக் கொள்ளுங்கள். மற்றும் நீங்கள் நம்மை வணங்கும் பொழுது (அவ்வடிவத் தோற்றமு மாகப் பாவித்து வணங்குங்கள் என்பதாக திருவாய் மலர்ந்து பின்பு,

பிரம்மா, விஷ்ணு, உருத்திர பரசிவம், மகா கணபதி பராசக்தி, திருகலை முதலிய உற்பத்தி.

வலப்புறத்தில் நான்கு முகத்துடன் மஞ்சள் நிற மாக நிற்கக்கூடிய படைப்புக் குரிய சக்தி வடிவத் திற்கு பிரமன் என்று நாமகரண மிட்டும், அதன் பக்கத்தில் முகில் நிறம் போன்று நிற்கக் கூடிய காப்புக் குரிய சக்தி வடிவத்திற்கு விஷ்ணு அல்லது (விண்டு) என்று நாமகரண மிட்டும், முன்புறத்தில் பவள நிறம் போன்று நிற்கக்கூடிய எல்லாச் சக்திகளுக்கும் முதன்மையாயும், சர்வ தொழில்களுக்கும், அனுகூல மாயும் ஏற்பட்டுள்ள சக்தியின் வடிவத்திறகு மகா கணபதி என்று நாமகரணமிட்டும், இடப்புறத் தில் பச்சை நிறம் போன்றும் எல்லாச் சக்திகளுக்கும் காரணமாக நிற்கக்கூடிய சக்தியின் வடிவத்திற்கு பராசத்தி யென்னும் நாமகரண மட்டும், (உருத்திர பரசிவ வடிவின் வலது கரத்தில் சூலம் அல்லது மழுப் படை இருப்பது உருத்திர வடிவ அறிகுறியும் இடது கரத்தில் மான் இருப்பது சத்தி அறிகுறியும் ஆகும். புராணங்களில் ஆதியில் பிரமனுக்கு ஐந்துமுகம் இருந்த தென்று கூறுவது ஐந்துவித சக்தியின் தத்துவமும், ஈசு வரன் அதை விலக்கியதாகும். அது முகமல்ல. அதன் பக்கத்தில் பொன்னிறம் போன்றும், வெண்ணிறம் போன்றும் படைப்புக்கும் காப்பிற்கும் உரிய சக்தி களுக்கு அனுகூலமாக நிற்கக்கூடிய சக்தியின் வடிவங்க ளுக்குத் திரு என்றும் கலை யென்றும் நாமகரண மிட் டும் இந்த இரு சத்திகளையும், விஷ்ணு, பிரமன் என்ற இருவரிடத்தில் சேர்த்து நீங்கள் அவர்கள் செய்யும்

தொழில்களுக்கு அனுகூலமாகவும், பிரியாமலும் இருப்பீர்களென்பதாகக் கூறி அவர்களை இருதிசையிலும் இருக்கும்படிசெய்து மகா கணபதியை முன் புறத்தில் இருக்கும்படிசெய்து, இடப்புறத்தில் நிற்கின்ற பரசத்தியுடன் கடவுளாகிய பரசிவம் எழுந்தருளி இருந்ததுடன் இப்பருவத்திற்குத் திருக்கைலாயம் என்றும் நாம கரணம் சூட்டி, பின்பு எங்கள் எல்லோர்களையும் திருக்கண் நோக்கி, இருவர்களைமட்டும் தமது திருக்கரத்தால் சுட்டிக்காட்டி இவர்கள் இருவர்களுக்கும் நம்முடைய சக்தியும் அனுக்கிரகமும் போதிய அளவு அளித்திருக்கின்றோம். அவர்களில் ஒருவரை உங்களுக்கு அரசனுகவும், ஒருவரை குருவாகவும் ஏற்படுத்திக்கொள்ளுங்கள் என்பதாகக் கூறி, மற்றும் நாங்கள் கேட்டுள்ள எல்லா வரங்களையும் அளித்துப் பின்பு எல்லோர்களுஞ் சென்று ஆனந்தமாக வாழப்பெறுங்கள் என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினுர்.

அவ்வாக்கியத்தைக் கேட்டவுடன் நாங்கள் எல்லோர்களும் அளவிறந்த ஆனந்த பிரவாகத்துடன் பல விதமாகத் தோத்திரஞ்செய்து வணங்கிப் பின்பு விடைபெற்றுக்கொண்டு இவ்விடம் வந்துசேர்ந்து அவ்விதமே அவ்விருவரையும் ஏற்படுத்திக் கொண்டதுடன் அனுதினமும் திருக்கைலாயத்திற்குச் சென்று, கடவுளாகிய உருத்திர பரசிவத்தை ஆனந்தமாகத் தெரிசித்து வருகின்றோம். அவர்கள் இருவருமே தங்களுடைய இரு பக்கத்திலும் நிற்கக் கூடியவர்கள் எனவும் சுட்டிக் காட்டி இவையெல்லாம் தங்களுடைய கிருபையே என்றும் சொல்லிமுடித்து வணங்கினுர்கள். திருக்கைலாயம் என்பது; திரு — சிறந்ததும், அழகுவாய்ந்ததும், தூய்மையானதுமான, கைலாயம்; கரத்தினிடத்தே வயப்படுத்துவதும், வயப்படுத்திக் கொள்ளக்கூடியதுமாகும்; அதாவது ஆன்மகோடிகள் விரும்பி அலையும் பொருள்களை வயப்படுத்துவதும், முடிவில் சர்வ ஆன்ம

கோடிகளை வயப்படுத்திக்கொள்ளக் கூடியதுமான அழகும் தூய்மையும் மேன்மையும் லாய்ந்த மாபெரும் கிரியாகிய பதியாகும். உருத்திர பரசிவம் என்பது; உருத்திர என்பது=உலகை சம்மாரம் செய்விக்கக்கூடிய; பர என்பது=சர்வமும் கடந்த மேலான; சிவம் ஏன்பது= மங்களகரமான பொருள் அல்லது வடிவம், அதாவது முடிவில் உலக சம்மாரம் செய்விக்கக் கூடியதும் மேலானதும் மங்களகர மானதுமான பொருளாகிய கடவுள் பரசக்தி என்பது; பர=மேலான; சக்தி என்பது செயல் ஒப்புவமையற்ற மேலான பரம்பொருளாகிய கடவுளுடன் பிரியாதிருக்கக் கூடிய மாபெரும் செயல் என்பதாகும். இவை நிற்க, முன்பு தேவர்கள் தெரிவித்துள்ள அனைத்தையும் ஆதியோடந்தமாகக் கேட்டுள்ள அம் முனிவர்கள் மிகுந்த சந்தோச மடைந்தவர்களாய் தேவர்களே! அப்படியானால் எல்லோரும் அங்கே செல்லலாம் வாருங்கள் என்பதாக அழைத்துக்கொண்டு திருக்கைலாயத்தில் உருத்திர பரசிவக் கடவுளானவர் பரசத்தியுடன் எழுந்தருளியிரா நின்ற திருக்காட்சியைக் கண்டு பேரின்ப சாகரத்தில் மூழ்கினவர்களாய் எல்லோர்களும் கரங்களைச் சிரசின்மீது கூப்பிப் பலவிதமான தோத்திரங்களுடன் போற்றி சாஷ்டாங்கமாக வணங்கியெழுந்து நின்றபொழுது பரமேசுவரன் புன்முறுவலுடன் தேவர்களுக்கெல்லாம் முன்னதாக நிற்கக்கூடிய அம்முனிவர்கள் மூவரையும் திருக்கண் நோக்கிப் பின்பு பரசத்தியை நோக்கிச் சர்வத்திற்கும் காரணம் இம் மூவர்களே என்பதை நீ அறிவாயாக, என்பதாய்த் திருக்கரத்தால் அவர்களைச் சுட்டிக்காட்டினார். அதனையறிந்த பரசத்தியாகிய தேவி மிகுந்த சந்தோசமடைந்து பின்பு இவர்களுடைய சரித்திரங்களை வினவியபொழுது பரமேசுவரன் ஆதியோடந்தமாகச் சொல்லி முடித்தவுடன் இவைகள் யனைத்தையும் செவியுற்ற தேவியும் பிரம்மா, விஷ்ணு, திரு, கலை, மகாகணபதி முதலியோர்

களும் மற்றும் தேவர்களும் மிகுந்த வியப்பும் ஆனந்த மும் உடையவர்களாய் அம்மூவரையும் பலவிதமாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அப்பொழுது அம்முனி வர்கள் மூவரும் சிரசின்மீது கரங்களைக் கூப்பிப் பலவித மாகத் துதித்து வணங்கி, ஏ கடவுள்! இந்த அண்ட பிண்ட சராசரங்களையும், அத்துடன் எங்களையும் அளித்து காத்துத் தனது சொரூபத்தி னிடத்தே அடக்கிவைத்தருளியும், சர்வ சீவகோடிகளுக்கும் தாய் தந்தை, குரு, தெய்வமும் சர்வ பொருள்களும் அதனு டைய போகங்களாகவும், மற்றும் அண்டங்கள் முதல் சர்வ சீவர்களிடத்திலும் உள்ளும் புறமும் கலந்து நிறைந்து நின்றருளும், பரம்பொருளாகியும், சர்வ கார ணங்களுக்கும் காரணமாகியும் விளங்காநின்ற நினது பெருமையை எங்களால் மொழியக்கூடுமோ என்பதாக இன்னும் பலவிதமாகப் புகழ்ந்து போற்றி வணங்கி நின்றார்கள்.

தமிழ்மொழி உற்பத்தியும் அதன் ரகசியமும்.

அவ்வாக்கியங்களைத் திருச்செவியுற்ற பரமேசுவ ரன் ஏ முனிவர்களே! உலகில் மானிடர்கள் முதல் தேவர் களுடைய சிருட்டிக்கும் இவர்களுக்கு அனுகூலமான இன்னும் மற்ற சிருட்டிகளுக்கும் இவர்கள் எல்லோரும் இத்தகைய மேலான நிலைமையில் வாழ்வதற்கும் மற்றும் நாமும் நம்முடைய சக்திகளின் வடிவங்களாகிய பிரம் மா விஷ்ணு முதலிய எல்லா வடிவங்களும் இவ்விதமாக வே நின்று தினம் எல்லோர்களுக்தும் காட்சியளிப்பதற் கும் காரணம் நீங்கள் அல்லவா என்பதாகக்கூறி மேலும் முனிவர்களே நீங்கள் என்ன கருத்துடன் நம்மிடம் வந்தீர்கள் அதனைத் தெரிவியுங்கள் எனத் திருவாய் மலர்ந்தனர். அப்பொழுது முனிவர்கள் மிகுந்த ஆனந்த முடன் வணங்கி, ஏ பரமேசுவரா! பூ உலகில் மானிடர் கள் எல்லாம் செவிப் பாசையாகவே இதுவரை இருந்து

வருகின்ருர்கள். ஆகையால் அதற்கு ஒரு மொழியும் அதற்குரிய அட்சரங்களேயும் தங்களிடம் பெறவேண்டும் என்கிற கருத்துடன் இவ்விடம் வந்தோம். ஆகையால் அதனை எங்களுக்கு—தா—என்ருர்கள். அவர்கள் சொல்லி முடிந்தவுடன் மிகுந்த ஆவலுடன் சத்தியாகிய தேவி பரசிவத்தை நோக்கி உமிழ் உமிழ் செவ்வனே உமிழ் என்பதாக விரைவாகவும் சந்தோஷமாகவும் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாக்கியத்தைத் திருச்செவியுற்ற பரசிவம் மிகுந்த சந்தோசத்துடன் மூனிவர்களே அப்படியே தெரிவிக்கின்ருேம். இதற்கு முன்னதாகவே உங்களுக்குத் தெரிவித்துள்ள வேதத்தின் முடிவான பொருளே அறிச்சுவடியின் மங்களக் காப்பாகக்கூறி அதன் பிறகு அட்சரப் பாசையைத் தெரிவிக்கின்ருேம்.

அறிச்சுவடியென்பது—அறி—தெரிந்து கொள்ளக் கூடிய;—சுவடி யென்பது=வடிவம் அதாவது தெரிந்து கொள்ளக் கூடிய பாசையின் எழுத்து அட்சர வடிவமாகும். இதற்கு ஆரம்பத்தில் மங்களக் காப்பாக வேதத்தின் முடிவையும், பிரணவத்தின் உண்மையையும் கூறுகின்ருேம் ஏக மனதுடன் கவனிப்பீர்களாக என்று தெரிவிக்க ஆரம்பித்தார். அறிஓம் நன்ருள்க குருவாழ்க குருவே துணே, இதன் பொருள் அறியென்பது=தெரிந்துகொள், ஓம் என்பது ஓங்கார மென்னும் பிரணவத்தின் உண்மைப் பொருளேத் தெரிந்துகொள் நன்ருள்க என்பது = நன் = எவ்விதக் குற்றமுமற்ற நல்லோன் உடையதும், நன்மையானதும், நன்மையை அளிக்கக் கூடியதுமான, அப்பரம்பொருளின் சகுன வடிவத்தின் திவ்விய பாதங்களே யறிந்தும் வணங்குக. குரு வாழ்க என்பது=குரு=ஆச்சாரியன்; வாழ்க என்பது=சேமமாக உலகில் நிற்க, அதாவது மேற்கூறியவைகளே யறிந்தும் பணிந்தும் அடைவதற்கு அனுகூலமான தகுந்த ஞான ஆச்சாரியன் உலகில் வசிக்கவேண்டும். குருவே துணே என்பது = அத்தகைய ஞானகுரவனே சதி

யெனக் கொள்க; அதன் பொருள் வேதத்தில் கூறியுள்ள கிரமப்படி முதல் கரும காண்டத்தின் பிரகாரம் நீதிமார்க்க முதலிய ஒழுக்கங்களில் நின்று சற்கருமங்களைச் செய்தும் பரம்பொருளாகிய கடவுளுடைய சகுன சொரூபத்தின் பாதாரவிந்தங்களை (விக்கிரக மூர்த்தங்களை) தினம் அன்பு பக்தியுடன் பூசித்து பின்பு பக்குவ நிலையை யடைந்து இரண்டாவதாகிய பக்தி காண்டம் அல்லது உபாசனா காண்டத்தின் பிரகாரம் கடவுளுடைய சூக்குமசகுனவடிவமான அச்சகுனவடிவத்தையே நோக்கிச் செபம், தபம், பூசை, தியானம் முதலியவற்றைச் செய்து, இருதயச் சுத்தமும் தெளிவும் மனோதிடமும் திருவடி காட்சிகளும் பூரண பரிபக்குவமும் அடையப்பெற்று, மூன்றாவதாகிய ஞான காண்டத்தின் பிரகாரம் நிர்க்குணசொரூபமாகிய கடவுளுடைய எதார்த்த வடிவையறிந்து அத்தியான நிலையை யடைந்து மவுனம் மாமவுனம் என்கின்ற மனம் வாக்கு காயமற்ற முடிவான பேரின்பநிட்டைபொருந்திய அந்தமேலான சும்மா இருக்கும் நிலையை யடைந்து சீவத்தன்மை முதலாகச் சர்வமும் அற்று அதுவே தானாகவும், தானே அதுவாகவும் தன்மயமாக நிற்கப்பெற்று, பின்பு அத்துவித முக்திப்பேற்றை யடையப் பெறுவதற்குத் தகுந்த அனுபவ குருவை உலகில் அறிந்து உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் அர்ப்பணம் செய்து அவனே கதியெனக் கொண்டு மேற்கூறியப் பிரகாரம் அதைக் கிரமமாக அடையவேண்டும் என்பதாகக்கூறி மற்றும் ஓ என்ற அட்சரத்துள் அகாரம் உகாரம்-ம்-என்ற அட்சரம் கடைசி முடிவான மகாரமுமாம். இம் மூன்றுக்கும் மூன்று காண்டங்களென அறியுங்கள் என்று கூறி, பின்பு இரண்டாவதாகக் கூறுகின்றார்.

அவை யாதெனில், முதலில் ஹ — அறியென்பது= தெரிந்துகொள் இரண்டாவது, :|:—சித்தை யறி என்பது=சித்தாகிய அறிவைத் தெரிந்துகொள். இவ்விரண்

டும் பிரமக்ஞான மந்திர வாக்கியங்கள்.

தமிழின் இரகசியம்.

மூன்ருவது ந — என்பது நானே அது அச்சித்தாகிய அறிவினுள் பர அறிவின் பிரகாசமே நாளுகத் தெரிந்துகொள். மொ— என்பது மவுன சொரூபமாகிய குணங்குறியற்ற ஏக வெளியே நான். இவ்விதமாக. ம்—என்ற மகா அட்சரம் வரையில் (10) பத்து அட்சரங்களும் வேதத்தினுடைய ஞான காண்டத்தையும், அதன் முடிவான நிலையும் அமைந்திருக்கின்றன. அகர முதல் ஃ அக்கன்ளு வரையில் (13) பதின்மூன்று அட்சரங்களும் வேதத்தினுடைய கர்ம காண்டமும் உபாசன காண்டமும் ஞான காண்டமும் அதன் பொருளும் சிருட்டி திதி சம்மாரம் இம்மூன்றும் முக்குணம், மூவாசை, முக்காலம், மும்மலம், முச்சரீரம் இவைகளும் அடங்கி இருக்கின்றன. க—ங முதல். ன—வரையில் (18) பதினெட்டு அட்சரங்களும், சுவடியின் ஒவ்வொரு அட்சரப் பகுதிகளுக்கும் முதல் அட்சரமாகிய அட்டவணையின் குறியைப் போன்றது. இந்த பதினெண் அட்சரங்களை முதன்மையாகக் கொண்டே (18) பதினெட்டுப் பகுதிகளும் முடிவடைகின்றன. ஒவ்வொரு பகுதிகளும் (13) பதிமூன்று அட்சரங்களையுடையது. அவைகளுள் ஒவ்வொன்றுக்கும் தூலம் — சூக்குமம் — காரணம் என்கிற மூன்று அட்சர வடிவங்கள் உள்ளன. ஒவ்வொன்றில் தூலம்—காரணம். இவ்விரண்டு மட்டிலும் ஏற்படக்கூடும். அவையாவன:— ந — என்பது தூல வடிவம். ஒரே அட்சரம்—அதை உச்சரிக்கும்போது—ந—நா— என்கிற தூலம்—காரணம் என்கிற இரண்டு அட்சரங்கள் தோன்றுகின்றன. நா — என்பது தூல வடிவம். ஒரே அட்சரம் அதை உச்சரிக்கும்பொழுது—நா—வ— நா என்பதாக மூன்று அட்சரங்கள் தொனிக்கின்றன. இவ்விதமாகவே எல்லா அட்சரங்களிலும் அமைந்திருக்கின்றது. இவைகள் ஒவ்வொரு அட்சரங்களும் அதன்

பொருள்களுமாக அமைந்துள்ளன. இவைகள் தூலம்—சூக்குமம்—காரணம் முதலாக எத்தனை அச்சரங்கள் உள்ளனவோ அவ்வளவே ஆதியில் ஈசுவரன் தெரிவித்துள்ள வேதத்தின் சூத்திரங்களும் மந்திரங்களும் ஆகும். முதலில்—ஹ் ○ ः இந்த இரண்டு மந்திர அட்சரங்களை தவிர மூன்ருவது—ந—என்கிற அட்சர முதல் கடைசி முடிவின்—ன—என்கின்ற இருச்சுழி னகாரம் வரையில் சர்வ அட்சரங்களிலும் தொனிக்கும் பொழுது—நா—நா என்பதாகிய காரண வடிவ அட்சரமாகவே முடியும். அதாவது வேதத்தின் ஒவ்வொரு சூத்திரங்களிலும், மந்திரங்களிலும் எல்லாம் நான் — எல்லாம் நானுகவே இருக்கிறேன் என்பதாகக் கூறுகின்றன அன்றே அவ்விதமாகவே இவைகள் அமைந்துள்ளனவாகும். இவ்விதமாகவே ஒவ்வொரு அட்சரங்களிலும் தூல சூக்கும அட்சரங்களும் தூல—சூக்கும—காரண அட்சரங்களுமாக அமையப்பெற்று ஒவ்வொன்றிலும் இரண்டு மூன்று சூத்திரங்களும் மந்திரங்களும் உடையதாய் இரண்டு மூன்றுவிதப் பொருள்களையும் உணர்த்தக் கூடியதாயும் முடிவில் காரணப் பொருளாகிய கடவுளையே உணர்த்தக் கூடியதாய் அமைந்துள்ளன. இவ்விதம் ஹ—முதல்—ம்—என்ற (10) பத்து அட்சரம் வரையில் சுவடியின் மங்களக் காப்பாக ஞான காண்டப் பொருளைச் சுருக்கமாகவும், (2) அ—முதல் ஃ வரையில் (13) பதின்மூன்று அட்சரங்களும் வேதத்தின் மூன்று காண்டங்களின் பொருளையும் சுருக்கமாகக் கூறி, பின்பு (3) க—ங முதல்—ன வரையில் (18) பதினெண் அட்சரங்களும், ஒவ்வொரு பகுதிகளின் முதன்மையான அட்சரங்களைக் கூறிப் பின்பு (4) க—முதல் ன—வரையில் 18 பதினெண் பகுதிகளிலும் வேதத்தினுடைய மூன்று காண்டங்களின் பொருள்களையும் முடிவுற விரிவுரையாக கூறப்படுகின்றன. என்பதாகக் கூறிப் பின்பு அறி—ஹ என்பது=தெரிந்துகொள்.

௦|ஃ சித்தை அறி. அதாவது சித்தாகிய அறிவைத் தெரிந்துகொள்—ந—என்பது நாம்—அச்சித்தாகிய அறிவைத் தெரிந்துவிட்டால் அதுவே நாம் என்பதாக—ம் என்ற பத்து அட்சரங்கள் வரையில் கூறி, அதின் இரகசியப் பொருள்களையுங் கூறி, அதன் பின் சுவடியின் அட்சர பாசையைச் சொல்ல ஆரம்பித்து— அகர முதல்கடைசி னகர இறுதியான வரையிலும் தெரிவித்து இப்பாசைக்கு நாமமும் கூறுகின்றேன், அதாவது நீங்கள் தா என்றீர்கள் அதற்குக் கொடு அல்லது அளி என்பது பொருள். பின்பு பரசத்தி தெரிவித்ததாவது, உமிழ் என்பது திருவாக்கினின்று வெளியிடு என்பதாகும். தா—உமிழ், இந்த இரண்டின் பொருள் தனித்தனியாகவும் ஒரே பொருளாகவும் அட்சரம் இரண்டாகவும் வார்த்தையும் சொல்லும் பொருளும் ஒன்ருகவே அமைந்துள்ளன. ஆகவே இப்பாசைக்கு தமிழ் என்றும் வழங்குக:— மற்றும் செவ்வனே உமிழ் என்றபடியால்—நன்ருகவும் குற்றமற்றதாகவும் சிவந்த கனியைப்போன்றதும் இனிமை யுடையதாகவும் வெளியிடு என்பதாகும். ஆகவே, இதற்குச் செந்தமிழ் என்றும் வழங்குக—மற்றும் இவை எக்காலத்தும் வழுவாது உலகில் நிலவக்கூடும்.

மற்றதை தமிழின் இரகசியத்தில் காண்க.

என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினர். இதனைக் கேட்ட முனிவர்கள் மிகுந்த ஆனந்தமடைந்தனர். அதன்பிறகு தேவர்களுடைய இருதயக் கருத்தையும் உணர்ந்து, தேவர்களை நோக்கி நீங்கள் எல்லோர்களும் முனிவர்கள் மூலமாக வேத வாக்கியங்களையும் பொருள்களையும் அறிந்து கொள்ளுங்கள். நாம் முன்னமே அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்ருேம். என்பதாய்க் கூறி, எல்லோர்களையும் செல்லுமாறு ஆக்யாபித்தனர்.

இவைகளை யெல்லாம் செவியுற்ற எல்லோர்களும் அளவிறந்த ஆனந்தமுடன் சிரமேற் கரங்களைக் கூப்பிப்

தா தா தா என்பதாக மூவரும் கேட்ட படியாலும் சக்தி யாகிய தேவி உமிழ் உமிழ் உமிழ்என்பதாக மூன்று தடவை சொன்ன படியாலும் மூத்தமி ழாக விளங்கப்டும்.

பல விதமாகத் தோத்திரஞ் செய்து வணங்கிப் பின்பு பராசத்தி யாகிய தேவியையும், பிர்மா, விஷ்ணு, முதலிய எல்லோர்களையும் வணங்கிக் கொண்டு விடைபெற்று எல்லோர்களுமாக புறப்பட்டுத் தேவலோகத்திற்கு வந்துசேர்ந்து அங்கே இந்திரன் முதல் தேவர்களுக் கெல்லாம் வேத வாக்கியங்களையும் அதன் உண்மைப் பொருளையும் அனுட்டிக்க வேண்டிய கிரமங்களையும் மந்திரங்களையும் தத்து வார்த்தங்களையும் மற்றும் பரம இரகசியங்களையும் தெளிவாகக் கூறினார்கள். இவைகளையெல்லாம் அறியப்பெற்ற தேவர்கள் மிகுந்த சந்தோசமடைந்து சோடச உபசாரங்களுடன் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து பலவிதமாகப் போற்றி நின்றார்கள். அப்பொழுது அம்முனிவர்கள் உளம் பூரித்து எல்லோர்களுக்கும் ஆசீர்வாதம் செய்து, பின்பு பூ உலகிற்கு பிரயாணமானார்கள். அப்பொழுது தேவர்களெல்லாம் வணங்கி ஏ பிரபுக்களே! தாங்கள் வசிக்கக்கூடிய மகா மேரு கிரியையும், பூ உலகையும் நாங்களும் காண விரும்புகின்றோம் என்பதாகத் தெரிவித்தபோது அப்படியே வாருங்கள் என்று இந்திரன் முதலாக எல்லோர்களையும் அழைத்துக்கொண்டு பொன் மேருகிரியை அடைந்து அங்கே எல்லா இடங்களையும் சுற்றிக்காண்பித்து இப்பர்வதத்திற்கு மகா மேருகிரி யென்றும், பொன் மேருகிரி யென்றும் பெயராகும். ஏனெனில் உலகிலுள்ள மலைகளுக்கெல்லாம் பெரிதானதும் தலைமையானதும் மேன்மை வாய்ந்ததும் என்றும் அழிவுறாதது மானபடியால் மகா மேருகிரி என்றும், முன்பு பிரளய காலத்தில் அழிவுறாமல் அக்னியால் தாக்கப்பெற்று, பொன்போன்றும் சிறந்ததாக

விளங்கியபடியால் பொன் மேருகிரியென்றும் நாமம் ஏற்பட்டனவாகும் என்பதாகக்கூறி, பின்பு தாங்கள் ஆதியில் வசித்த குகையையும், பின்பு கடவுளுடைய காட்சிகளை தெரிசித்த இடங்களையும் காண்பித்து அதன் பிறகு உலக சஞ்சாரமாக அங்கங்கே சென்று தென் பொதிகை மலைமுதலியது எல்லாம் காண்பித்துக்கொண்டு மீண்டும் பொன்மேரு கிரியை யடைந்து எல்லோர்களும் சந்தோசகரமாக அமர்ந்தார்கள். அப்பொழுது இவைகளையெல்லாம் அறிந்த தேவர்கள் மிகுந்த வியப்பும் பிரமையும் ஆனந்தமும் அடைந்தவர்களாய் அம்முனிவர்களை பல விதமாகப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

அப்பொழுது முனிவர்கள் தேவர்களை நோக்கித் தேவர்களே! உங்களில் ஒருவரை இவ்வுலகிற்கு மனு வேந்திரனென்னும் அரசனாகவும், மற்றொருவரை மானிடர்களுக் கெல்லாம் குருவாகவும் ஏற்படுத்த உத்தேசிக்கின்றோ மென்றார்கள். அவர்களும் தங்களுடைய சித்தம்போல் செய்க என்றவுடன், மகா மேரு கிரிக்குத் தென்புறத்தில் ஒரு பெரிய நகரம் ஏற்படுத்தி அதன் மத்தியில் அழகிய மாளிகை ஒன்றும் அந்நகரத்திற்கு மனுவேந்திர புரமென்றும் நாமம் சூட்டி, அங்கே எல்லோர்களுமாக இருந்து அவருக்குப் பட்டம் சூட்டிப் பின்பு அவ்வரசனுக்குத் தெய்வலோகத்தி லிருந்து தக்க ஒரு பெண்ணை வருவித்து திருமணம் செய்து இருவர்களுக்கும் நீதி மார்க்கங்களையும் வேதவாக்கியங்களையும் செங்கோல் நிலைமைகளையும் இன்னும் மற்றவைகளையும் போதித்து மற்றும் உலகில் நிகரில்லாத பலமும் மனோதிடமும் அளித்துப் பின்பு உலகில் அங்கங்கே உள்ள தலைவர்களையும் மற்ற எல்லோர்களையும் இவ்வரசனுக்கு கீழ்படிந்து நடக்கும்படியாகவும் ஏற்படுத்தி அதன் பிறகு இந்திரன் முதலாகத் தேவர்களை யெல்லாம் விண்ணுலகிற்குச் செல்லும்படியாக அனுப்பிவிட்டுத் தூங்

மனு வேந்திரன் ஏற்படல்.

கள் மூவரும் ஒருதேவருடனும், அங்கங்கே பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தித் தமிழ் அட்சரக் கல்வியைப் போதித்துப் பின்பு எங்கும் நில அளவை தானிய அளவை கணக்கு இவைகளுக்காக முந்திரி லெக்கம் சுவட்டு லெக்கம் எண்சுவ்டி முதலியவைகளும் செய்து பரவும்படிச் செய்தார்கள். சிலகாலம் அந் நால்வரும் பொன்மேரு கிரியினிடத்தே வாசஞ்செய்து, அதன் பிறகு உலக சஞ்சாரஞ்செய்து அங்கங்கே எல்லாம் பார்த்துக்கொண்டும், சிற் சில சீர்திருத்தங்களைச் செய்துகொண்டும், ஆனந்தமாக வரும்பொழுது தங்களுடைய கருத்திற்குத் தக்கவர்களும். எல்லாவற்றிலும் சிறந்த தெய்வீகத் தன்மை வாய்ந்தவர்களுமாக இருவர்களைப் பார்த்து அவர்களையும் அழைத்துக்கொண்டு, பொன்மேருகிரியை அடைந்து, அங்கே முன்னிருந்த தேவருக்கும் மற்றஇந்த இரண்டு மானிடர்களுக்கும் தாங்கள் போதிக்க வேண்டிய அனைத்தையும் தெளிவுறப் போதித்து, மந்திரங்களையும், பரம ரகசியங்களையும் போதித்துத் தங்களுடைய சரித்திரங்களையும் ஆதியோடந்தமாகக் கூறிப் பின்பு கடவுளுடைய பூர்வக்யானங்களையும் தெரிவித்துக் கடவுளால் அளிக்கப்பட்ட தங்களுடைய சக்தியிலும் போதிய அளவு அளித்து நீங்கள் மூவரும் இம்மானிட உலகிற்குக் குருஸ்தானமாக இம்மேரு மலையிலும் பொதிகை மலையிலும் வாசஞ்செய்து கொண்டு, இவ்வுலகையும், இவ்வரசனையும் அடிக்கடி கவனித்துக் கொண்டும் ஆனந்தமாக எங்களைப்போன்றும் வாழக் கடவீர்கள் என்பதாகக் கூறி, அரசனையும் அழைத்து நீ இம்மூவரையும் எங்களைப் போன்று மதித்து, அன்பு பக்தியுடன் கீழ்படிந்து நடக்கும்படியாகவும் தெரிவித்து நாங்கள் இவ்வுலகிற் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்து கண்ணுற்று மனத்திருப்தியும் ஆனந்தமும் அடையப் பெற்றோம். இவ்வுலகில் இவ்வுருவுடன்

விரும்பிய வண்ணம் வெகுகாலம் வரையில் வாழ்ந்து இனிப்போதுமெனத் திருப்தியும் அடைந்தோம். ஆகையால் இனிமேல் கடவுளுடைய எதார்த்த சொரூபத்துடன் இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தியை அடைய விருப்புற்ருேம். நீங்கள் மூவரும் எங்களுக்குப் பதிலாக இவ்வுலகில் வசிக்கக் கடவீர்கள் என்பதாகக் கூறி ஆசீர்வாதம் செய்தார்கள். அம் மூவரும், இவர்களைப் பலவிதமாகப் போற்றித் துதிசெய்து சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து நின்று பயபக்தியுடன் நோக்கிய பொழுது அவர்களுக்குச் சமாதானங் கூறிப் பின்பு திரீ முனிவர்கள் ககன மார்க்கமாகப் புறப்பட்டுத் தேவலோகம் சென்று அங்கே தேவர்களால் பூசிக்கப் பெற்றுச் சிலநாள் அங்கே ஆனந்தமாகத் தேவர்களுடன் வாசஞ்செய்து பின்பு தேவர்களை நோக்கித் தேவர்களே நாங்கள் கூறும் வாக்கியங்களைச் சிறிது கவனமாகக் கேளுங்கள். அதாவது உலக சிருட்டி காலத்தில் பூ உலகமே முதலில் உற்பத்தியானது. மற்றும் கடவுளுடைய காட்சிகளும் பூவுலகிலேயே முதலில் தோன்றப்பெற்றது மானிடர்கள் முதலில் தோன்றிய பின்புதான் நீங்களெல்லோரும் உற்பவித்தீர்கள். வேத வாக்கியங்கள் பூவுலகில் தோன்றிய பின்பு இவ்வுலகில் நிலவுகின்றன. அட்சர பாசையும் பூவுலகிற்கு ஏற்பட்ட பின்பு உங்களுக்கும் ஏற்பட்டன. கர்மம் — ஓமம் — தானம்—தவம்— ஞானம் முதலியது எல்லாம் பூவுலகில் நிலவியே இப்பொழுது இங்கே நிலவுகின்றன. ஆகையால், பூவுலகை அலட்சியமாகக் கருதாமல் தாயகமாகவே கருதி, அடிக்கடி கவனித்துக்கொள்ளுங்கள் என்பதாகக் கூறிப் பின்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள அத்துவித முத்தியின் விருப்பத்தையும் கூறினூர்கள். இவைகளை யெல்லாம் கேட்டதேவர்கள் முனிவர்களைநோக்கித் தாங்கள்கூறிய யாவும் உண்மையே அவ்விதமே கவனித்துக் கொள்ளச் சித்தமாக இருக்கின்ருேம். தாங்கள் பின்பு கூறியதைப்

பற்றி வருந்துகின்றோம். தாங்கள் இவ்வுருவுடன் இன்னும் சிலகாலம் இருப்பின் எவ்வுலகிற்கும் எங்களுக்கும் எவ்விதக் குறையும் பயமும் இல்லை என்பதாக வணங்கி நின்றார்கள். அவர்களுக்குத் தகுந்த சமாதானங்களைக் கூறிப் பின்பு விடை பெற்றுக்கொண்டு திருக்கைலாயத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே பரமேசுவரன் பரசக்தியுடன் எழுந்தருளியிரா நின்ற காட்சியைக் கண்டு ஆனந்த பரவசத்துடன் பல விதமாகப் போற்றித் துதி செய்து, சாஷ்டாங்கமாக வணங்கிப் பின்பு அங்கே அமர்ந்துள்ள மகா கணபதி, பிரமா, விஷ்ணு, திருகலை முதலியவர்களையும் வணங்கித் துதித்துப் பின்பு இவர்களுடன் தாங்களும் பரமேசுவரனுக்கும் பரதேவிக்கும் பணிவிடை செய்துகொண்டு சதா காலமும் பரம்பொருளாகிய ஈசுவரனுடைய காட்சியைத் தெரிசித்துக்கொண்டும் அவர்களுடன் ஆனந்தமாக வாசஞ் செய்து வந்தார்கள். இப்படி இருக்க ஒரு தினம் தேவர்கள் முதல் எல்லோர்களும் வந்து தெரிசித்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் தேவ குருவானவர் முனிவர்களை நோக்கி, ஏ பிரபுக்களே! தாங்கள் மூலமாக ஓங்காரமென்னும் பிரணவ அட்சரத்தின் இரகசியப் பொருளையும், மற்ற எல்லா விடயங்களையும் அறியப்பெற்றோம். ஆனால், ஓங்காரத்தின் சக்தியின் வடிவமும், அதனுடைய ஸ்தானமும் தெளிவுற அறிந்திலோம். ஆகவே அதனை யறிய விரும்புகின்றோம் என்றனர்.

இதனைக் கேட்ட முனிவர்கள் பரசிவத்தினிடத்தே தெரிவிக்கும்படி சைகை காட்டினார்கள். இதையுணர்ந்த பரமேசுவரன் எல்லோர்களையும் நோக்கி அப்படியே கூறுகின்றோம் கவனியுங்கள் இதுவே சர்வத்திற்கும் மூலாதாரப் பொருள். இதுவே சர்வ சத்திகளுக்கும் முதன்மையாக உள்ளது. ஒவ்வொரு சக்திகளும் ஒவ்வொரு தொழில்களைச் செய்ய ஆரம்பிக்கும் பொழுது இதன் உதவியை முக்கியமாகக் கொண்டு அத்தொழில்

களைச் செய்கின்றன. இல்லையேல் பிரதிபந்தம் ஏற்படக்கூடும். அந்த அட்சரத்தின் சக்தியின் வடிவமே முன் புறத்தில் நிற்கக்கூடிய மகா கணபதியின் வடிவம். மற்றும் எல்லோர்களுக்கும் நன்ருக விளங்கும்படியாகவும் காண்பிக்கின்ரும். முதலில் ஓங்கார மந்திரவடிவ முதல் பஞ்சாக்கர மந்திர வடிவங்களையும் பின்பு சகுண சொருப சக்தியின் வடிவமும் காண்பிக்கின்ரும் பாருங்கள் என்றனர். அப்பொழுது எல்லோர்களும் சிரசின் மீது கரங்களைக் கூப்பிக்கொண்டு கண் இமையாது பார்த்துக்கொண் டிருந்தார்கள். அக்காலத்தில் பரசிவத்தினுடைய வடிவத்தினின்று குபீரென்று செழுஞ் சுடரோடுங் கூடிய பெரும் சோதியானது தோன்றிற்று. அப்பொழுது முன் வடிவம் நீங்கி அச்சோதியின் வடிவமாகவே எங்கும் நிறைந்து தோன்றிற்று. மகா கணபதியின் வடிவமும் நீங்கிற்று. அச்சோதியின் மத்தியில் ஓங்காரமுடன் வட்டம் போன்றதும், தூய வெண்மை பொருந்தியதுமான கோடுபோன்று சுற்றிலும் வளைந்து தோன்றிற்று. அதன் மத்தியின் மேல் நோக்கிய ஒரு கோணமும், பின்பு பக்கத்தை நோக்கிய கோணங்கள் இரண்டும் பின்பு கீழ்நோக்கிய கோணங்கள் இரண்டுமாக ஐந்து கோணங்களுடன் ஒரு வடிவம் தோன்றிற்று. அதனுள் மேல் நோக்கிய கோணத்துள் 'சி' என்ற அட்சரமும், பக்கத்தை நோக்கிய கோணங்கள் இரண்டிலும் ஒன்றில் வ' என்ற அட்சரமும், மற்ருென்றில் 'ய' என்ற அட்சரமும், கீழ் நோக்கிய கோணத்தில் 'ந' என்ற அட்சரமும் மற்ருென்றில் 'ம' என்ற அட்சரமும் தோன்றின.

இதன் இரண்டின் மேற்பாக மத்தியில் 'ஓ' என்ற அட்சரமும் அதற்கு மேலாகவும் அதன் மூன்றுக்கும் நடுவாக உள்ள இடத்தில் 'ம்' என்ற அட்சரமும் விளங்கியதுடன் அவ்வட்சரங்களும் அந்த ஐங்கோண வடிவமும் தூய

பரசிவ வடிவத்தின் இரகசியம்.

வெண்மை பொருந்திய தாகவே காணப் பட்டன, அதன் பிறகு அந்த ஐங்கோண வடிவமே ஓர் உருவமாகத் தோன்றின மேல் நோக்கிய கோணம் சிரசாகவும், பக்கத்தில் நோக்கிய இரண்டும், இரண்டு கரங்களாகவும், கீழ்நோக்கிய இரண்டும் இரு கால்களாகவும் மத்தியில் ஓ என்ற இடத்தில் மூலாதார உந்தியாகவும், 'ம்' என்ற இடத்தில் இருதயமாகவும் கூடியதாய் முன்னிருந்த பரசிவ வடிவம் தோன்றின. அவ்வடிவில் எங்கும் தூய வெண் பொடி அணிந்ததாய்ப் பிரகாசித்தன. அதன் பிறகு பரசிவ வடிவின் உந்தியினிடத்தே ஒரு பெரிய வடிவம் தோன்றின. அவ்வடிவமானது பரசிவ வடிவத்தை மற்றவர்கள் காண முடியா வண்ணம் மறைத்து விளங்கியது. இவ்வற்புதங்களையெல்லாம் அறிந்த பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் ஆனந்த பிரவாகத்துடன் துதி செய்து வணங்கி, பின்பு ஓங்கார அட்சரத்தைச் சிந்தித்து அவ்வடிவத்தை வணங்கி துதித்தார்கள். அப்பொழுது அவ்வடிவம் குறைந்து முன்னிருந்தாற் போன்று, சிறிய வடிவமாகத் தோன்றியது. அதன் பிறகு பரசிவம் எல்லோர்களையும் நோக்கி, அறிந்தீர்களா என்பதாகக் கூறி, இதுவே மகா கணபதியென அறியுங்கள். மகா என்பது பெரிதானதும் முதன்மையானதும், கண என்பது மேன்மையானதும் சிறந்ததும் மற்றும் பாரமுடையதும்—பதி என்ருல் இடமாகிய தானம் அதாவது பெரிதாகிய மேன்மையான இடத்தில் வசிக்கக்கூடியவன். உந்தி யென்னும் மூலாதாரத்தினிடத்தே பதியாகக் கொண்டவன் என அறியுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினர். இவ்வாக்கியங்களையெல்லாம் கேட்டு, அளவிறந்த சந்தோசமுற்று வணங்கி எல்லோர்களும் ஏ பரமேசுவரா! ஓங்கார முதல் பஞ்சாக்கரத்தின் வடிவிலும் அதன் அட்சரங்களிலும் பின்பு தங்களுடைய திருமேனியிலும் தூய வெண்மை

பொருந்தியதாய் விளங்கிடும் காரணம் அறிந்திலோம் அதனையும் அறிவிக்க வேண்டுமென்றபொழுது அப்படியே கூறுகின்றோம் கேளுங்கள்—அதாவது முக்கியமாக ஒன்றைக் கூறுகின்றோம். நம்முடைய சொரூபத்தினிடத்தே நம்முடைய மகா சக்தியினால் சர்வ அண்டங்களும் தோன்றி பின்பு நம்முடைய சக்தியினாலேயே நிலவி நின்று பின்பு முடிவில் நம்முடைய சக்தியினாலேயே எல்லாம் தகிக்கப்பெற்று வெண் சாம்பராகிய பொடி தூளிதமாகவே நம் சொரூபத்தில் விளங்குவதாகும். இதன் உண்மையான இரகசியத்தை புறியும் படியான அறிகுறியாக இது விளங்குவதாகும். (மற்றவைப் பின் வருமாறு காண்க.)

ஆகவே இத்திரு வெண்ணீறே நமது அறிகுறியாகவும், நமது கலையாகவும், நமது ஞானத்தின் முத்திரையாகவும் விளங்குவது என்று அறிவீர்களாக என்றனர். மற்றும் இக்கருத்தை அறிந்தே இம் முனிவர்களால் பிரணவமும், பஞ்சாக்கரமும், திருவெண்ணீறும் உலகில் விளங்கச் செய்வித்ததாகும் என்பதாகக் கூறி முடித்தனர். (பின் காலத்தில் ஆலயம் ஏற்பட்டபொழுது மகா கணபதியை முன்புறத்தில் ஏற்படுத்தி யிருப்பது இக் கருத்துக் கொண்டேயாகும். முதலில் வணங்குவதும் மற்றும் எத்தொழில்களையும் ஆரம்பிக்குமுன் இவரை முதலில் பூசிப்பதும் ஏற்பட்டு வருகின்றனவாகும்.)

பின்பு பரசிவம் தெரிவித்தருளிய வாக்கியங்களையெல்லாம் செவியுற்ற எல்லோர்களும் மிகுந்த ஆனந்தமுடன் நிற்கும் பொழுது, அம்முனிவர்கள் தேவர்களை நோக்கி தேவர்களே பூவுலகின்கண் பொன் மேருகிரியினிடத்தே நம் சீடர்கள் மூவர்கள் இருக்கின்றார்களல்லவா அவர்களிடத்திற்கு உங்களில் ஒருவர் சென்று இங்கே நடந்துள்ள காட்சிகள் முதலாக எல்லா விடயங்களையும் தெரிவிக்க வேண்டுமென்பதாகக் கூறிப் பின்பு பரசிவத்தை நோக்கி ஏ கடவுள் நாங்கள் மூவரும் தங்க

ளுடைய் வரப்பிரசாதத்தினுல் பூவுலகிலும் மற்ற உலகங்களிலும் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்தோம். பார்ப்பதற்கரிய காட்சிகளையெல்லாம் பார்த்தோம். அடையவேண்டிய பேரின்ப நிலைகளையும் அதன் சுகபோகங்களையும் அடையப்பெற்ருேம். மனம் திருப்தி உண்டாகும் வரையில் பூவுலகில் வாழப்பெற்ருேம் பின்பு தேவலோகத்திலும் திருப்தியாகும் வரையில் ஆனந்தமாக வாழப் பெற்ருேம் பின்பு இவ்விடம் வந்து சதாகாலமும் தங்களுடைய தெரிசனத்தைக் கண்டும் பேரின்ப சுகத்தோடு இவ்வுருவத்துடன் அனுபவிக்கக் கூடிய முத்திப்பேறு என்னும் பரசுக போகத்திலும் வாழப்பெற்ருேம். இனிமேல் தங்களுடைய எதார்த்த சொரூபமும் நாங்கள் ஆதியில் தெரிசித்ததுமான அச்சொரூபத்தி னிடத்தே இரண்டறக் கலத்தலாகிய ஐக்கிய முக்திப் பதவியை அடைய விரும்புகின்ருேம் என்பதாகக் கூறி வணங்கினுர்கள்.

திரி முனிவர்கள் அத்துவித முக்தியை அடைதல்.

இதனைத் திருச்செவியுற்ற பரசிவம் புன்முறுவலுடன் அப்படியே அளிக்கின்ருேம் என்பதாகக் கூறினவுடன் தனது வடிவினின்று குபீரென்று தூய வெண்மை பொருந்திய ஏக வெளியும் செழுஞ் சுடரோடுங் கூடிய ஒளியும் கலந்த சோதி வடிவம் ஏற்பட்டுப் பரவி யெங்கும் அம்மயமாகவே விளங்கின. உலகில் மற்ற எவ்வடிவங்களும் தோன்றவில்லை. பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாகத் தேவர்களுடைய வடிவங்களும் தோன்றவில்லை. பின்பு சிலநேரம்சென்று அது மறையப்பெற்று முன்னிருந்த பரசிவ வடிவமும் மற்ற வடிவங்களும் தோன்றப்பெற்றன. அம் முனிவர்கள் மூவருடைய வடிவங்கள் மட்டும் தோன்ருது அச்சொரூபத்திற் கலந்துவிட்டன.

இதனை யறிந்த எல்லோர்களும் அளவில்லாத பேரின்ப சாகரத்தில் மூழ்கினவர்களாய்ச் சிரசின்மீது

கரங்களைக் கூப்பிப் பலவிதமாகப் பரசிவத்தையும் அம் முனிவர்களையும் துதிசெய்து வணங்கி பின்பு பரமேசு வரனிடத்தில் விடைப் பெற்றுக்கொண்டு தேவலோகத் திற்கு வந்து சேர்ந்து தங்களில் ஒருவரைப் பெரன்மேரு கிரிக்கு அனுப்பி இவ்விடயங்களை யெல்லாம் அங்கிருக் கப்பட்ட மூவருக்கும் தெரிவித்து வரும்படி சொல்ல அவரும் வந்து அங்கே நடந்துள்ள விடயங்களையும் முனிவர்கள் மூவரும் அத்துவித முக்தியை அடைந்ததை யும் தெரிவிக்க இவைகளை யெல்லாம் கேட்ட அம்மூவ ரும் அளவிறந்த ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களாய் சிரசின் மீது கரங்களைக் கூப்பி வணங்கி பின்பு இதனை மனுவேந்திரனென்னும் அரசனுக்குத் தெரிவித்தார்கள். அவனும் கேட்டு அளவிறந்த சந்தோசத்தை யடைந்த னன். அதன் பிறகு இம்மூவரும் அவர்கள் கூறிய பிர காரம் வடமேரு கிரியிலும், தென் பொதிகையிலும் வசித்துக்கொண்டும், உலகில் அடிக்கடி கவனித்துக் கொண்டும் ஆனந்தமாக இருந்து வந்தார்கள் — மனு வேந்திர அரசனும் அவர்கள் கூறிய பிரகாரம் எவ்வகை யிலும் சிறந்தவனாய் நீதிநெறி தவராமலும் சந்தோசகர மாகவும் வாழ்ந்து வந்தனன். (இவ்வரசனுக்குப் பிற் காலத்தில் இவனுடைய வழியில் வந்த மனுச்சக்கர வர்த்தி யென்பவரால் மனுநீதி சாத்திரம் என்பது வரை யப்பட்டதாகும்.

ஆதியில் திரிமுனிவர்கள் ஏற்படுத்திய பிரகாரம் அங்கங்கே தமிழ்ப் பாசையானது உலகில் எங்கும் நிலவி இருந்தன. அதன் பிறகு சிலகாலம் சென்று, பிராமணர் கள் கிரந்தமென்னும் ஒரு மொழியை ஏற் படுத்தி அதில் வேதத்தை வரைந்து கொண்டு வேதத்தையும் கிரந்த பாசை யையும் மற்ற எவர்களும் கற்கக்கூடாது என்பதாக ஏற்படுத்தி இருந்தார்கள். அதன் பிறகு ஆகமங்களும், உப நிடதங்களும், வேதாந்த நூல்களும்

பல
மொழிகள்
உற்பத்தி.

நீதி நூல்களும் இன்னும் பல சாத்திரங்களும் வரைந்தனவாகும். பின்பு சமஸ்க்ரதத்துடன் நாகரமென்னும் ஒரு பாசையை ஏற்படுத்தினர்கள். அதன் பிறகு இந்தி என்னும் ஒரு பொதுப் பாசையை ஏற்படுத்தி இதை மற்ற எல்லோரும் அங்கங்கே கற்றுக்கொள்ளும்படி செய்தார்கள். இது எங்கும் வடக்கே நிலவப்பெற்றன இதனால் இந்தியர் இந்தியா என்று இத்தீவுக்கு பின்பு ஏற்பட்டதாகும். பின்பு வங்காளம், மராட்டி, குஜராத், உருது முதலாகப் பல பாசைகள் ஏற்பட்டது. 'தமிழ் பாசையானதுகுன்றி, தென்பாகத்தில் ஒதுங்கி இருந்தது இதிலிருந்து மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியதும் இன்னும் பல பாசைகளும் உலகில் ஏற்பட்டன. பின்பு தமிழைத் திராவிட பாசையென்றும், தமிழரைத் திராவிடர் என்றும் மாற்றிநாமம் வைத்தார்கள். முன்பு ஏற்பட்டிருந்த தமிழ் அறிச்சுவடி, முந்திரி லக்கம், சுவட்டு லக்கம், எண்சுவடி முதலிய லக்கங்களின் அச்சரங்கள் கிரந்த மொழியில் பெரும்பாலும் கலந்திருக்கிறது. இரண்டையும்ஒத்திட்டுப்பார்த்தால்தெரியவரும்.

ஆதியில் மானிடர்கள் எத்தொழிலும் தெரியாமல் மற்றப் பிராணிகளைப்போலவே வாழப்பெற்றுப் பின்பு திரிமுனிவர்களால் பலவிதத் தொழில்களை யுக்தியினலும், கடவுளுடைய சக்தியினலும் அறிந்து அவைகளை யெல்லாம் மானிடர்களுக்கு அங்கங்கே சென்று கற்பித்து உலகில் நிலவச்செய்தும் சிலகாலம் சென்று ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய எல்லாத் தொழில்களையும் செய்துகொள்வது கஷ்டமாக இருப்பதை யுணர்ந்து ஒவ்வொரு தொழில்களுக்கும் ஒவ்வொருவரை ஏற்படுத்தி அவர்களது சீவனத்திற்கு வேண்டிய அளவு தானிய முதலானதைப் பயிரிடுவோர்கள் கொடுப்பதாக ஏற்படுத்தினர்களல்லவா? அதன் பிறகு ஒவ்வொரு தொழிலாளர்களும் அபிவிருத்தி அடைந்தும்

சாதிகள் உற்பத்தி.

வெகுகாலம் வரையில் எல்லோர்களும் சர்வ நிலைமை களிலும் ஒன்ருகவே இருந்து வந்தார்கள். பின்பு ஒவ்வொரு தொழிலாளரும் தங்கள் தங்கள் அனுகூல உதவியை முன்னிட்டு அந்தந்தத் தொழிலாளர்களிடத்திலேயே கொள்வினை கொடுப்பினை யென்னும் சம்பந்தங்களும் அதனல் பற்றுகளும் ஏற்பட்டு நாளுக்குநாள் அவ்விதமாகவே அபிவிருத்தி யடைந்து அவரவர் ஒவ்வொரு வகுப்புகள்போல மாறுதலாகிச் சிலகாலம் இருந்து வந்தனர். பின் காலத்தில் ஒவ்வொரு சாதிகளாக ஏற்பட்டு அந்தந்த தொழில்களுக்குத் தக்கபடி நாளுக்குநாள் பழக்க வழக்கங்களும், செல்வம் தரித்திரங்களும், ஒழுக்கம் முதலிய நாகரீகங்களும் அச்சம் திடம் கல்வி அறிவின் அபிவிருத்தி குறைவு முதலிய தன்மைகளும் மாறுதல் அடைந்து உயர்வு தாழ்வு என்று ஏற்பட்டபடியால் தாழ்ந்தோராகவும் உயர்ந்தோராகவும் மது மாமிசம் சாப்பிடுவதாலும் அசுத்தமாக இருக்கின்றபடியாலும் தீண்டக் கூடாதவர்கள் என்றும் பின் காலத்தில் ஏற்பட்டனவாகும். சர்வ சாதிகளும் ஒரே இனமே ஆனுலும் சிற்சில பழக்க வழக்கங்களிலும் நிலைமைகளிலுமே வித்தியாசமாகும். அக்கொள்கையானது இப்பொழுதும் நடந்து வருகின்றன.

அதாவது ஒரே சாதியாக இருப்பார்கள் அவர்கள் பலவிதத் தொழில்களைச் செய்வதுடன் அதற்குத் தகுந்த நிலைமைகளிலும் இருப்பார்கள். சொந்தமான பெண்களாகவோ ஆண்களாகவோ இருந்தபோதிலும் அவர்களுக்குரிய தொழில்களிலும் தக்க நிலைமைகளிலும் உரியவர்களுக்கே கொள்வினை கொள்ள விரும்புகின்ருர்கள். மற்றும் கிராமங்களில் விவசாயஞ் செய்யக் கூடியவர்கள் தங்களைப் போன்ற விவசாயஞ் செய்பவர்களாகவே பார்த்துச் சம்பந்தங்கள் செய்து கொள்ளுகின்ருர்கள். நகரங்களில் உத்தியோக முறையிலோ அல்லது பலவிதத் தொழில் முதலிய வியாபார முறை

யிலோ இருப்பவர்களை அவர்கள் விரும்புவதில்லை. இவர்களும் அவர்களை விரும்புவதில்லை. தங்களைப் போன்ற தொழில்களிலோ உத்தியோகத்திலோ நாகரீக முதலிய நிலைமைகளில் இருக்கின்றவர்களையே விரும்புகின்றார்கள். இம்மாதிரியாகவே ஒவ்வொரு தொழிலாளர்களும் சம்பந்தமும் பற்றுகளும் ஏற்பட்டன. ஒரே சாதியில் பல வகுப்புகளாக இருக்கின்றன. அவர்களை வினவில் நாங்கள் எல்லாம் ஒரே சாதிதான் பந்துக்கள் தான் ஆனால் சம்பந்தங்கள் இல்லை என்பார்கள். இதைப் போன்றதாகவே ஆதியில் எல்லாம் ஒரே இனமாகவே மானிடரென்றும் ஆண் பெண் என்றும் இந்த முறையாகவே இருந்து பின் காலத்தில் தொழில்களின் காரணத்தால் பல சாதிகளாக ஏற்பட்டுள்ளனவாகும்.


மதங்கள் உற்பத்தி.

ஆதியில் மத முதலிய எக்கொள்கையும் இல்லாமல் எப்படி இருந்ததென்றால், பிராமணர்கள் அனுதினமும் அதிகாலையில் (நான்கு மணி என்று சொல்லக்கூடிய நேரத்திற்கு) எழுந்திருந்து ஒரு மணி நேரம் மலம் சலம்கழித்தல், பல் துலக்கல், குளித்தல், முதலிய சரீர கருமங்களை முடித்துக்கொண்டு காலை ஐந்து மணிமுதல் எட்டுமணிவரை வேத வாக்கியங்களாலும் பல தோத்திரங்களாலும் செபம், தவம், தியானம் இவைகளாலும் கடவுளைத் துதிக்கும்படியாகவும், பிராமணப் பெண்கள் காலை நான்கு மணி முதல் ஆறு மணி வரையில் சரீர கருமங்களையும் இல்லத்தின் கருமங்களையும் முடித்துக்கொண்டு ஆறு மணிமுதல் எட்டு மணி வரையில் வேத வாக்கியங்களாலும் பல துதிகளாலும் செப தவங்களாலும் கடவுளைத் துதிக்கவும், மாலை நேரங்களிலும் அவ்விதம் செய்வதும், மற்ற சனங்கள் காலை ஐந்து மணிக்கு எழுந்து ஆறு மணிவரையில் சரீர கருமங்களை முடித்துக்கொண்டு ஏழு மணி வரையில் கடவுளைத் துதி செய்து அதன் பிறகு தங்களுடைய தொழில்களைப்


பார்க்கும்படியாகவும் மாலையிலும் ஒருமணி நேரம் வரையில் கடவுளைத் துதிக்கும்படியாகவும் ஏற்பட்டு நடந்து வந்தன.

இதற்கு முன் ஆதி திரிமுனிவர்களுடைய காலத்தில் இவ்வித திட்டங்களெல்லாம் இல்லாமல் எல்லோர்களும் காலையும் மாலையும் அகம்புறச் சுத்தமுடன் கடவுளைத் துதிக்கும்படியாகவே ஏற்பட்டிருந்தன. ஆதி பிராமணர்கள் சதா காலமும் கடவுளுடைய திருஷ்டியிலேயே இருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். நாளுக்குநாள் அந்த நிலைமை நழுவப்பெற்றுப் பின் காலத்தில் இத்தகைய திட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அதன் பிறகு இந்நிலைமையும் வரவரக் குன்றிவிட்டன. இதனை யறிந்த பெரியோர்களும் பிராமணர்களும் மற்ற எல்லோர்களும் இதற்குத் தகுந்த வழியைப் பலதடவை யோசித்துப் பின்பு ஒவ்வொரு கிராமங்களுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மரத்தடியில் மண்ணினால் ஒரு சதுரப் பீட மாதிரியாக ஏற்படுத்தி அதன்மேல் ஆதியில் திரிமுனிவர்களுக்கு கடவுள் அளித்த காட்சிகளில் மூன்றுவதாக அளித்த ரூபமும் அரூபமும் கலந்த முக்கோண வடிவத்தையே கடவுளுடைய வடிவமாக ஏற்படுத்த விரும்பி மண்ணினால் இருகைக்கொண்ட அளவுக்குப் பிடித்து இப்பொழுது பிள்ளையார் பிடித்து வைப்பது போன்றதாக முக்கோண வடிவமாக பீடத்தின்மீது ஏற்படுத்தினார்கள். இவை ஏனெனின், மனிதர்களுடைய மனமானது பற்றுவது ரூபத்தையே சுலபமாகவும் சகசமாகவும் இருப்பதால் அறிகுறியாக ரூபமாகவும் அவயவங்கள் இல்லாதபடியால அரூபமாகவும் ஏற்படுத்தி இதனையே கடவுளுடைய வடிவம் என்றும் எல்லோர்களும் காலையிலும் மாலையிலும் சுத்தமாக இவ்விடம் வந்து வணங்கிப் போகவேண்டு மென்பதாகவும் ஏற்படுத்தி அவ்விதமே சிலகாலம் நடந்துவந்தன. இப்பொழுதும் ஒவ்வொரு ஆலயங்களிலும் தல விருட்ச மிருப்பது


1.



2




3




4











ஆதியில் ஏற்பட்டதே யாகும். அதன் பிறகு அவ் வடிவம் மழைகாலங்களில் அடிக்கடி கரைந்து போவ தால் எல்லோர்களும் யோசித்து, மரத்தினால் அவ்வித வடிவுமாகச் செய்துவைத்து சிலகாலம் இருந்தன. பின்பு அதுவும் நனைந்து, மண் தின்றும், கெட்டும் போவதை உணர்ந்து செங்கல்லால் இவ்வடிவம் போன்று ஏற்ப டுத்தி வைத்தார்கள். பின் காலத்தில் சில பெரியோர் கள் யோசித்து இவையெல்லா வற்றிற்கும் பலமான தும் அழியாமல் இருக்கக்கூடியதுமான சிலை இருந்தும் இதனையே அவ்வடிவமாக ஏன் ஏற்படுத்தக் கூடாது என்பதாக உத்தேசித்து சிலையாகிய கல்லினாலேயே அவ் வடிவம் போன்றதாகவும் மேற்கோணம் கூர்மையாக வும் செய்து ஏற்படுத்தினார்கள். சனங்களுக்கும் மிகுந்த சந்தோசமாகவே இக்கொள்கைகள் இருந்தன, இப்படி இருக்க மரத்தடியில் இருக்கின்றபடியால் காக்கை முத லிய பட்சிகள் எச்சமிடுவதும் காய் கனிகள் இதன் மேல் விழுவதுமான பலவித அசுத்தங்கள் ஏற்படுகிற படியால் அதன் நிமித்தமாகத் தழைகளினால் ஒரு பந் தல் மாதிரியாகப் போட ஆரம்பித்தார்கள். பின்பு நாய் நரிகள் வந்து அசுத்தம் செய்யாதபடி சுற்றிலும் மண் சுவரும் பின்பு மேற்கூரையாக புல்களைக் கொண்டும் ஒரு குடிசையாக ஏற்படுத்தினார்கள். இதனால் சனங்க ளுக்குப் பற்றுதல் அதிகமாக ஏற்பட்டன. மேலும் பல பெரியோர்களும் விருத்தர்களும் ஓய்வான காலங்களில் அவ்விடம் வந்து மன அமைதியாகச் செப தவங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். இதை முன்னிட்டு அக் குடிசைகளை விசாலமாகவும் நன்றாகவும் கட்ட ஆரம்பித் தார்கள். பின்பு அங்கே இருட்டாக இருக்கின்றபடி யால் கடவுளுடைய வடிவம் தோன்றவில்லை. அங்கே விளக்கு ஏற்றவும், மற்றும் சாம்பிராணி தூபம் போட வும், அவ்விடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் ஒவ்வொரு ஆள் ஏற்படுத்த வேண்டுமென்பதாக உத்தே

சித்து அதற்குத் தகுந்த ஆட்களை ஏற்படுத்தி அவர்களை அகம் புறச் சுத்தமாக இருக்கும்படியாகவும் இவ்விடத்தில் இம்மூன்று கருமங்களையும் செய்துகொண்டு சுத்தமான நிலைமையில் வைத்திருக்க வேண்டும் என்பதாகவும் இவர்களுக்குச் (சைவாள்) என்று நாமகரணம் சூட்டி அவர்களின் ஜீவனத்திற்கு வேண்டிய அளவு தானியாதிகள் எல்லோர்களும் சேர்ந்து கொப்பதாகவும் ஏற்படுத்தி மற்றும் இவர்களை குரு முறையில் அன்பு பக்தியுடன் நடக்க வேண்டுமென்பதாகவும் ஏற்படுத்தி, ஒவ்வொரு வீடுகள் தோறும் மாதம் ஒருமுறை வேண்டிய அளவிற்கு திருவெண்ணீறு சேகரித்துக் கொண்டுவந்து எல்லோர்களுக்கும் கொடுப்பதற்காகவும், மற்றும் சில கருமங்களுக்காகவும் பண்டாரங்களை ஏற்படுத்தி இவ்விடத்திலும் வந்து திருவெண்ணீறு கொடுக்கும் படியாகவும் அதிகாலையிலும் மாலையிலும் சங்கு சேகண்டிச் சப்தம் முழக்கி எல்லோர்களும் வருவதற்கு ஞாபகத் தூண்டுதலாகவும் ஏற்படுத்தி, திருநீற்றையும் சாம்பிராணி தூப நீற்றையும் கலந்து வருபவர்களுக்குச் சைவாள் கொடுப்பதாகவும் ஏற்படுத்தினார்கள். இவ்விதமாகச் சிலகாலம் நடந்து வந்தன.

சைவர்கள் உற்பத்தி.

அதன் பிறகு அங்கங்கே நகரங்களும், அரசர்களும் ஏற்பட்டன. பிராமணர்களும் பெரியோர்களும் தூண்டுதலின்பேரில் அவைகளை யெல்லாம் அரசர்களைக் கொண்டு செங்கல்லினால் விலாசமாகவும், அழகாகவும் அங்கங்கே கட்டி அதற்கு ஆலயம் என்றும், கோவில் என்றும் நாமம் சூட்டினார்கள், அதாவது-ஆ-என்றால் பசு, லயம்—என்றால் சேர்வது; பிரிவறக் கலப்பதாம், பசுவாகிய ஜீவர்கள், பதியாகிய கடவுளிடத்தில் கலப்பதாம். மற்றும் ஆ-என்று விரிந்து அலையும், மனமானது லயம்-ஒடுங்கி லயப்படும் இடமாகவும் கொள்ளவும். கோவில் என்பது. கோ = என்பது இறையாகிய

கடவுள்: இல் = என்பது இருப்பிடம் அல்லது பதி, அதாவது இறைவனுகிய கடவுள் வசிக்கக்கூடிய பதி யாகும். மற்றும், கோ வென்பது பசுக்களாகிய ஆன்ம கோடிகள், இல் என்பது நாமரூப பேதங்களற்றுக் கடவு ளுடைய சொரூபத்தில் கலப்பதாம்.

இவ்விதமாக ஏற்படுத்திப் பின்பு சலத்தினுல் அபி டேகம் செய்து புட்பங்களைத் தூவி, எல்லோர்களும் அனுதினமும் பூசிக்கும்படியாகவும் ஏற்படுத்தினுர்கள். சனங்களுக்கு முன்னிருந்ததிலும் அதிகமாக அன்பும் பக்தியும் உற்சாகமும் ஏற்பட்டன. அதன் பிறகு அபி டேக சலம் சுற்றிலும் சிதறுவதால் அடிப் பீடத்தைச் சிறிது பள்ளமாகவும் சலம் விழ ஒரு புறத்தில் சிறிது நீண்ட வழியாகவும் செய்து ஏற்படுத்தினுர்கள். பின்பு மும்மூர்த்திகளின் தத்துவத்தைக் கொண்டும் ஆத்ம தத் துவத்தைக்கொண்டும், அடிப்பீடம் வேருகச்செய்து அதன் மத்தியில் பள்ளமாகத் தோன்றி கடவுள் வடிவை வேருகச்செய்து இப்பீடத்தின் மத்தியில் நட்டுவைத்து அசையாதபடி சில மருந்து பசைகளைச் சாத்தினுர்கள். (சிவலிங்கத்தின் அடியில் உள்ளே நான்கு பட்டையாக இருப்பது பிரமபாகம் அதற்குமேல் எட்டு பட்டையாக இருப்பது விஷ்ணுபாகம் அதற்குமேல் வெளியில் உருண்டையாக இருப்பது சிவ பாகம். ஆவுடை சக்தி பாகமாகும்) இவ்விதமாக ஏற்படுத்தி நடந்து வரும் பொழுது சில சமயங்களில் அரசர்கள் வரமுடியாவிட் டால் தங்களுக்காக அங்கே இருக்கின்ற சைவர்களைப் பூசிக்கும்படியாகச் செய்வதுண்டு. அதன் பிறகு சில பெரியோர்களும் பிராமணர்களும் இவ்விதம் செய்ய ஆரம்பித்தார்கள். பின்பு நாளுக்குநாள் சைவர்களே பூசிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருந்தது. இவ்வித மாக அக்காலத்தில் வேறு எவ்விதக் கொள்கையு மதமு மின்றி இது ஒன்றையே எல்லோர்களும் கைக்கொண்டு, இதற்குச் சைவக் கொள்கையென்றும் நாமம் ஏற்பட்

டிருந்தன. அதாவது;— சுத்தமானதும் உண்மையான தும் மேன்மையானதும் மற்றும் கடவுளை யடையச்செய் விக்கக் கூடியதுமான கொள்கை. அல்லது மார்க்கம் வழி என்பது பொருளாகும். கடவுளுடைய எதார்த்த சொரூபமானது எங்கும் வியாபகமாகவும் பூரணமாக வும் கல் முதல் சர்வ பொருள்களிடத்திலும், சர்வ சீவர்களிடத்திலும் உள்ளும் புறமும் கலந்திருப்பதா லும் மேலும் ஆதியில் இந்த முக்கோண லிங்காகார வடி வமாகக் கடவுள் காட்சியளித்தபடியாலும் மாந்தர் கட்குப் பக்தியும் அன்பும் மேன்மேலும் அளவு கடந்து ஏற்பட ஏற்பட இவர்களுடைய தோற்றத்திற்கு அவ் வடிவத்தினிடத்தே வெளியாகவும் ஒளியாகவும் மற்றும் அவயங்களோடுங் கூடிய வடிவமாகவும் பலவிதமான காட்சிகள் தோன்றுவதும் கடவுளுடைய சக்தியும் சிறிது விளங்குவதும், பலவித அனுகூலத் தன்மைகளும் நிலவியது. மற்றும் அன்பு, பக்தி, ஒழுக்கம், தருமம், கருணை, தவம், இருதய சுத்தம் முதலியவைகளும் மாந் தர்களுக்கு ஏற்பட அனுகூலமாகவும் முடிவான பிரமக் ஞானத்திற்கு அடிப்படையாகவும் விளங்கின. இதனுல் எல்லோரும் இக்கொள்கையை உடையவர்களாகவே இருந்தமையால் இது வெகுகாலம்வரையில் நிலவி நின் றது, வேறு எந்த மதமும் இல்லை. இது ஒன்றே நிலவி இருந்தது. அதன் பிறகு வெகுகாலம் சென்று அறிவிற் சிறந்த பெரியோர்களும், பிராமணர்களும் பக்தர்களும், யோகிகளும், ஞானிகளும், மகரிஷிகளும், அரசர்களும் ஒன்று கூடி யோசித்து பரப் பிர்ம தத்துவத்தையும் ஆத்ம ஞான தத்துவத்தையும், வேதாகம தத்துவத்தையும், சரீர ஆன்ம தத்துவத்தையும் கொண்டே சிவாலயம் அமைத்தார்கள். அகண்ட பரி பூரண சத்து சித்து ஆனந்த சொருபமாயும், ஆதியாயும், சர்வத்திற்கும் காரணமாயுமுள்ள பரப்பிர்ம வடிவமே

சிவாலய உற்பத்தியும் அதன் தத்துவமும்.

சிவலிங்கமாகிய ரூபா அரூப வடிவமாயும் அதையும் அதன் மூல்மாக சர்வத்தையும் இயக்கிவிக்கக் கூடிய அரூப மகா சக்தியாகிய பரா சக்தியின் வடிவமே ஆவுடையாகவும் இவை இரண்டும் சேர்ந்தது சிவம்சத்தி வடிவமாகவும், புட்பம் முதலியது சாத்துதற்காக சிவலிங்கத்தின் மேலே மட்டமாகச் செய்வித்து, மூலஸ்தானம் அல்லது கெற்பகிரகம் என்பதாக மண்டபங்கட்டி அதன் மேல் முடியைப்போன்று விமானமும் கட்டி முன்புரத்தில் அர்த்தமண்டபமும் மகா மண்டபமும் கட்டி அதன் முன்பு வெளி மண்டபமும் கட்டி மூன்று சுற்றுப்பிரகாரமும் கட்டி, வெளிப்பிரகாரமும் திருமதிலும் கோபுரமும் வாயில்களும் கட்டினார்கள். அதாவது சிரம், கழுத்து, இருதயம், வயிறு, கால், பாதம் முதலியதைப் போன்றும் பிரகாரங்கள் தூல சூக்கும காரண மென்னும் மூன்று சரீரத்தைப் போன்றும் அமைத்து அக்கினி மூலையில் மடப்பள்ளியும், ஈசானிய மூலையில் குளம் அல்லது கேணியும் அமைத்து மூன்றாவது பிரகார மண்டபத்தில் கொடி மரம் நட்டும், மகா மண்டபத்தில் பலிபீடமும் நந்தியும்வைத்து மூலஸ்தான மண்டபத்தில் பரப்பிரம்மமாகிய சிவலிங்கத்தை வைத்தும் இதனுடைய உலக படைப்புக் குரிய சக்தியின் வடிவமாகிய பிரமனை மண்டப இடதுபுரத்தில் வைத்தும் உலக காப்புக்குரிய சக்தியின் வடிவமாகிய விஷ்ணுவை பின் புரத்தில் வைத்தும், உலக ஆன்ம கோடிகளை முடிவில் தன்னிடம் சேர்க்கக்கூடிய சக்தியின் வடிவமாகிய தெட்சணாமூர்த்தியை வலது புரம் வைத்தும், சர்வ சக்திகளுக்கும் முதன்மையாகவும். சர்வ ஆன்மகோடிகளுக்கும் முயற்சி செய்விக்க கூடியதுமான சக்தியின் வடிவமாகிய மகா கணபதியை முன்புரமாக வலப்புரத்தில் வைத்தும், சர்வ ஆன்மகோடிகளுக்கும் சக்திகளுக்கும் ஆறு அறிவு வடிவமான சுப்பிரமணி

நந்தி தூய மனம்
பலிபீடம் காமாதிகளை விடுவது.

யரை முன்புரம் இடதுபுரமாக வைத்தும், 'ஆன்மகோடிகளுடைய சரீரப் பிணி முதலிய பீடைகளை நீக்குவதும், சர்வ சக்திகளையும் மறைக்கக் கூடியதுமான சக்தியின் வடிவமான மகா மாயையென்னும் துர்க்கையை இடப் புரத்தில் வைத்தும் பரிபக்குவ ஆன்மகோடிகளின் ஞானநிலையாகிய சக்திகளின் வடிவமாகிய துவாரபாலகர்களை முன்பு இருபுறமும் வைத்தும் ஆலயம் கட்டி எல்லோரும் ஆதி சைவர்களையே ஆறுகாலம் தூபதீப நெய் வேத்தியமுடன் பூசிக்கும்படி ஏற்படுத்தி, மணி, சங்கு, சேகண்டி, டாமாரமேளம் முதலியதுடன் பூசை நடந்து வந்தது. வெகுகாலம் சென்று பரசத்தியின் வடிவம் செய்து தனியாக இடதுபுரம் மண்டபம் கட்டி அங்கே வைத்து பூசித்தும் அறிகுறியாக குங்குமத்தையும் அணிந்தார்கள். அதன் பிறகு பிர்மா விஷ்ணு இவர்களுக்கு உதவியாக வுள்ள சக்திகளின் வடிவமாகிய திரு, கலை, முதலிய வடிவங்களையும் செய்து அங்கே வைத்தும் பூசித்து வந்தார்கள், பரசிவத்திற்கு ஐந்து முகம் என்பது ஐந்து தொழிலுக் குரிய ஐந்து சக்திளாகும்.

ஆலயத் திருமதில் கடவுளையும் ஞானத்தையும் உண்மையும் மறைக்கக்கூடிய உலக நிலையாகிய அஞ்ஞானமாகும். கோபுரம் கடவுளை ஞாபகப்படுத்தக் கூடிய அறிகுறியாகும். கோபுர வாசல் கடவுளை அறிந்து அடையவேண்டு மென்று செல்லும் இச்சையாகும். உள்ளே மூன்று பிரகாரமும், மூவாசை, மும்மலம், முக்குணம், என்பதாகும். விநாயகர் தீவிர முயற்சியும் துணையும் வைராக்கியமுமாகும். சுப்பிரமணியர் ஆறறிவோடுக் கூடிய ஞானமாகும். கொடிமரம் ஆத்மஞான அறிகுறியாகும். பலி பீடம் காமாதிகளை அறவே ஒழிப்பதாகும். நந்தி சர்வமும் நீங்கிய பரிசுத்தமாகிய மனமாகும். பிரமா உலக உற்பத்தியாகிய மனச் சங்கல்பமாகிய நினைப்பாகும். விஷ்ணு உலக வாழ்வாகிய மனப்

ஞானதத்துவ விளக்கம்.

பிரவிருத்தியாகும். தெட்சணாமூர்த்தி உலக ஒடுக்கமாகிய மனம் ஒடுங்கி நிர்க்குணமாகிய மாமௌன நிலையாகும். துவாரபாலகர் சீவத்தன்மைகள் யாவும் அற்று பரமார்த்தத் தன்மையுற்று, எல்லாம் ஒன்றென்னும் பிரம ஆன்மா அத்துவித நிலையை உடையதாகும். சிவலிங்கம் சர்வத்திற்கு காரணமும் தாயகமுமான பரப்பிரமமாகும்.

இருவினையினால் செனன மரண மென்னும் பவப்பிணியுற்று, மூவாசையினால் பலவிதத் துன்புற்றலையுறா ஆன்மகோடிகள் கடவுளுடைய எண்ணம் ஏற்பட்டு அதை அறிந்தும் அடையவேண்டும் என்கிற இச்சை உண்டாகி முயற்சிசெய்து ஞான குருவை அடைந்தும் அவ்வழியில் சென்று எல்லாம் கடந்தும் எல்லாம் விடுத்தும் அத்துவித ஞான நிலையை அடைந்தும் முடிவில் பரப்பிர்ம தெரிசனத்தை கண்டு தெரிசித்து பின்பு அதுவேதானாக விளங்கப்பெற்று அதில் ஐக்கிய மென்னும் அத்துவித முத்தியாகிய பூரணத்துவத்தைப் பெறுவதாகும். இதுவே சிவாலய தத்துவத்தின் ரகசியம். இதற்குச் சிவமதம் என்பதாக விளங்கி பின்பு உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலும் நிலவி இருந்தது. பின்பு கல்வி அறிவிற்சிறந்த பெரியோர்களும் மெய்யன்பர்களும் சூத முனிவர், அகத்தியர், முதலாக பல மகரிஷிகளும், ஞானிகளும், பிராமணர்களும், சிவாகமங்களும், புராணங்களும் சரிதங்களும், தோத்திரப் பாடல்களும் ஏற்படுத்தினர்கள். பின்பு சிவாலயம் உலகிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தி பூசித்து வந்திருக்கின்றார்கள். அந்த அறிகுறிகள் இப்பொழுதும் இருக்கிறது.

அதன் பிறகு அறுபத்து மூன்று நாயன்மார்களும், பின்பு சங்கராச்சாரியார் முதலிய பல மகான்களும் தோன்றிய பொழுது அனேகம் தோத்திரப்பாடல் நூல்களும் சிவமத அபிவிருத்தியும் ஏற்பட்டதாகும். முன்பு

இச்சிவமதத்திலிருந்து தோன்றியே இதைப் பூஜித்தும் வந்து வசிட்டிணர், சமணர், புத்தர், நபி, ஏசுநாதர் முதலாக இன்னும் பலர் பின்பு தாங்கள் ஒவ்வொரு புதிய கொள்கைகளை கைக்கொண்டு ஒவ்வொரு மதங்களை ஏற்படுத்தியதாகும். பின்வருமாறு காண்க:

விஷ்ணுமதம் உற்பத்தி.

இப்படி இருந்துவருங் காலத்தில் ஒருசமயம் பிராமணர்களும் மற்றும் பெரியோர்களும் சேர்ந்த ஒரு சத்சங்கம் ஏற்பட்டது. அங்கே எல்லோரும் கூடித் தக்க பெரியோர்களால் பரமார்த்திகமான சத் விடயங்களைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வசிட்டன் என்னும் ஒரு பிராமணர் விளையாட்டாகக் கடவுள் பெரிதா? அல்லது பக்தன் பெரிதா? என்பதாகக் கேட்க ஆரம்பித்தார். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் எல்லோர்களும் சிரித்தார்கள். இதை அறிந்த வசிட்டனென்னும் பிராமணர் மிகுந்த வெட்கமும் கோபமும் உடையவராகிப் பின்பு எல்லோரையும் நோக்கி நான் கேட்டதற்குப் பதில் கூருது பரிகாசமாக சிரிக்கின்றீர்களே இதற்கு விடைகூறுங்கள் என்பதாகக் கடிந்து கேட்டனர்; அப்பொழுது அவர்கள் கடவுள் தான் சர்வத்திற்கும் காரணப் பொருள், அதனிடத்தே இருந்துதான் பக்தர்கள் முதல் சர்வமும் உற்பத்தியாகின்றன. ஆகவே, அதுதான் பெரிதாகும் என்பதாகச் சுருக்கமாகவும் முக்கியமாகவும் உண்மையாகவுமுள்ள இந்த ஒரு வாத்தையைக் கூறினர்கள். அதனைக் கேட்ட வசிட்டனென்னும் பிராமணர் பக்தன் இல்லாவிடில் கடவுளுடைய நாமதேயமேது, அவரைப் பூசிப்பவர்கள் யார்? இல்லாததாகவே மறைந்துவிடு மல்லவா என்று இன்னும் பலவிதமாகத் தர்க்க வாதங்கள் பேசினர். பின்பு, அவர்களும் பலவிதமாக வாதித்தார்கள். ஒருவருக்கொருவர் வாக்கு விவாதங்கள் ஏற்பட்டுப் பின்பு சண்டைகள்போட்டு அடித்துக்கொண்டார்

கள். இவ்வித சண்டைகளால் அப்பிராமணர்களுக்குள் மிகுந்த அடியும் காயங்களும் ஏற்பட்டன. இதனையறிந்த வசிட்டனென்னும் பிராமணருடைய பந்துக்களும் வந்து மிகுந்த சண்டைகள் ஏற்பட்டு, பின்பு நிவர்த்திக்கப் பெற்றுக் கூட்டம் கலைந்து எல்லோரும் தங்கள் தீங்கள் இல்லத்திற்குச் சென்றார்கள். அது முதலாக அந்த வசிட்டனென்னும் பிராமணரும் அவரைச் சார்ந்த பந்துக்களும் ஆலயத்திற்கு வராமலும், மற்ற பிராமணர்களுடன் சேராமலும் இருந்து வந்தார்கள். இவர்களும் இதைப்பற்றி விரும்பவில்லை பின்பு நாளுக்கு நாள் இவர்களுக்கும் அவர்களுக்கும் மனஸ்தாபம் அதிகமாகவே ஏற்பட்டு வந்தன. அதன் பின் இவர்கள் பல தடவை யோசித்து ஊருக்குப் புறம்பாக ஒரு குடிசை மாதிரியாக ஏற்படுத்தி அதனுள் மண்ணினால் பீடம் ஒன்று ஏற்படுத்தி அதற்குப் பக்தர் ஆலயம் என்பதாக நாமமிட்டு அங்கே இவர்கள் காலையும் மாலையும் சென்று பூசித்து வந்தார்கள். சில வருடகாலம் சென்ற பின்பு இங்கே பக்த தெய்வமாக எதை ஏற்படுத்துவது என்பதாக யோசித்து, ஆதியில் பரசிவத்தினுடைய பக்தியிற் சிறந்தவர் விஷ்ணு என்றே சர்வ சாத்திரங்களிலும் கூறப்படுகின்றன, மேலும் பெரியோர்களாலும் கூறப்பட்டு எங்கும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. மற்றும் இவ்விஷ்ணுவே உலக பாதுகாப்பிற் குரியவராகவும் கூறுகிறபடியால் இவரையே பக்த தெய்வமாக ஏற்படுத்த வேண்டுமென்பதாக உத்தேசித்து அவ்வடிவம் போன்றதாக ஓர் உருவம் செய்து அங்கே அமைத்தார்கள். அதன் பிறகு, சில நாட்சென்று திருநீற்றைக் குழைத்து மூன்று விரலால் நெற்றியில் நேராகப் பூச ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் நாமம் போடுவது இல்லை. திருவெண்ணீற்றையே எல்லோரும் நாமம் போன்றும் அணிவதும், விஷ்ணு வடிவத்திற்கும் திருவெண்ணீற்றையே அணிவதுமாகவே இருந்தன. மற்

றும் சைவர்களுக்கு நேர் விரோதமாக இன்னும் பல காரியங்களும் செய்துவந்தார்கள். இவைகளை யெல்லாம் மற்ற பிராமணர்களும் பொதுச் சனங்களும் கவனிப்பதில்லை.

இவர்களுக்குத் துவேஷம் நாளுக்குநாள் அதிகமாக ஏற்பட்டது. அதன் பிறகு தங்களுடைய கொள்கையை எங்கும் அபிவிருத்தி செய்வதற்காகப் பல வழியிலும் யோசித்து அநேகமுயற்சிசெய்துவந்தார்கள். இவைகளை யெல்லாம் பொதுசனங்கள் அங்கீகரிக்கவில்லை. மேலும் வெறுப்புற்ருர்கள். அதன் பிறகு அத்தேசத்தை ஆண்ட அரசன் பக்தியிலும், ஒழுக்கத்திலும், நீதியிலும், பலத்திலும் சிறந்தவனுக விளங்கினுன். அவ்வரசனை எப்படியாவது தங்களுடைய கருத்துக்கு வயப்படுத்தக் கருதி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் பயன்படவில்லை. அதன் பிறகு அவ்வரசனுக்கு ஒரு தலைமை மந்திரி இருந்தனன். அவன் அன்பு பக்தி ஒழுக்கம் அற்றவன், மிகுந்த அழகும் அளவிறந்த காம இச்சையுடையவன். இவனை யெப்படியாவது வயப்படுத்தக் கருதி, அடிக்கடி மந்திரி வீட்டுக்குப் போக்கு வரத்தாக இருந்து பின்பு மிகுந்த சிநேக முறையை வளர்த்துக்கொண்டார்கள். ஒரு தினம் இவர்கள் யெல்லாம் சந்தோசமாக கூடியிருந்த சமயம் மந்திரியை நோக்கித் தாங்கள் எங்களுக்கு ஒரு பெரிய உபகாரம் செய்விக்க வேண்டும் என்பதாகக் கேட்டபொழுது, அப்படியே செய்கின்றேன் அதைக் கூறுங்களென்ருன். அப்பொழுது இவர்கள் தங்களுடைய பக்தக் கொள்கையைப் பற்றியும் விஷ்ணுவைப் பற்றியும் சுருதி யுக்திப் பிரமாணமாகவும் அத்துடன் பலகற்பனையாகவும் ஒரு நூல் வரைந்து கொண்டு வந்திருந்தார்கள். அந்நூலைப் படித்துக்காட்டி இக்கொள்கையும் ஆலயமும் அபிவிருத்தி யடைய வேண்டி இருக்கின்றபடியால் இவ்வரசனை எவ்விதத்திலும் எங்களுடைய வழியில் வயப்படுத்தித் தரவேண்

டும் என்பதாகக் கேட்ட பொழுது மந்திரியானவன் சிறிது நேரம் யோசித்துப் பின்பு அப்படியே செய்வ தாகக்கூறி அனுப்பிவிட்டு பின்பு யோசித்து மந்திரி அரசனை பலவித உபாயத்தால் வயப்படுத்தி அரசன் உத்தரவுப்படி வசிட்டன் முதலிய பிராமணர்களை வர வழைத்து தக்க ஆசனத்தி லிருக்கும்படி செய்து வேண் டிய உபசரணைகளுடன் உங்களுக்கு வேண்டியது எதுவோ அதனைக் கூறுங்கள். அப்படியே அளிக்கின் றேன் என்பதாக அரசன் கூறினான். அதைக் கேட்ட பிராமணர்கள், தாங்கள் முன்னமே எழுதியுள்ள நூலை யும் படித்துக் காட்டி ஆலயமும் ஏற்பட்டிருப்பதையும் கூறி, இப்பக்த விஷ்ணுவின் ஆலயமும் கொள்கையும் தங்களுடைய தேசத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். இதனைக் கேட்ட அரசன் மந்திரியை நோக்கி அவர்கள் சொல்லுகிற பிரகாரம் அவ்வாலயத் தையும் அக்கொள்கையும் ஏற்படுத்தி இவர்களுக்கும் சீவனத்திற்கும் வேண்டிய அளவிற்கு ஏற்படுத்துவாய் என்று உத்திரவு இட்டனன். அப்படியே செய்கிறேன் என்று மந்திரி கூறினான். அதன் பிறகு இவர்கள் இச் சையின் பிரகாரம் ஆலயம் செங்கல்லுகளினால் விலாச மாகவும் அழகாகவும் கட்டி முடித்து அங்கே விஷ்ணு வின் வடிவம் போன்ற விக்கிரகங்கள் செய்து ஏற் படுத்தி அரசன் மந்திரி முதலியவர்கள் வந்தால் தங்கு வதற்காக ஒரு மண்டபமும் கட்டி, விஷ்ணுவுக்கு அபி டேகங்களும் பலவித மலர் மாலைகளும், ஆடை ஆபர ணங்களும், தூப தீப நெய்வேத்தியங்களும். டமார மேளங்களும் ஏற்படுத்தி மிகுந்த ஆடம்பரமாகச் செய்து அங்கங்கே பூசிப்பதற்கு இப் பிராமணர்களி லேயே தினம் ஒவ்வொருவரை ஏற்படுத்தி, இதற்கு வேண்டிய செலவுகளுக்கும். இவர்களுடைய குடும்பங் களுக்கும் வேண்டுவன எல்லாம் ஏற்பாடு செய்தனன். இதனை யறிந்த அரசனும் சந்தோசமுற்று இரு கோள்

கையும் உடையவனுய் இரு ஆலயங்களுக்கும் போய்த் தெரிசித்துக்கொண்டு மற்றோர்களையும் இவ்விதம் நடக்கும்படி ஏற்படுத்தினுன். ஆனுல் பொது சனங்களுக்குப் பூரண திருப்தி இல்லை. அரசனுக்குப் பயந்தும் மற்றும் பல ஆடம்பரங்களையும் முன்னிட்டே போய் வந்தார்கள். அதன் பிறகு, திருவெண்ணீற்றுல் அணியும் நாமத்தை நீக்கித் திருமண்ணிட ஆரம்பித்தார்கள். அதாவது திரு= அழகு பொருந்திய; மண் என்பது பிரிதிவி; இட என்பது அணிவது என்பதாகும். "சர்வ ஆன்மாக்களும் பொருள்களும் மண்ணினிடத்தே தோன்றி அதிலேயே நிலவிநின்று முடிவில் மண்ணுகவே ஏற்படுகிறது என்கிற அறிகுறியாகும். பூமியினிடத்தே சுத்தமான வெண்மை பொருந்திய மண்ணைக் கொண்டு வந்து அதனை இடித்து வடிகட்டி அதனை விஷ்ணுவுக்கும் நெற்றியின் நேராக மூன்று விரல்களால் அணிந்து தாங்களும் அணிவதுடன் மற்றோர்களையும் அணியும்படி செய்தார்கள். அது முதல் அவர்கள் வசிட்டனப் பிராமணர் என்பதாக வேறுபட்டிருந்தார்கள். ஆனுல், இம்மட்டோடும் இவர்களுக்கு திருப்தி இல்லை. பூராவும் சிவாலயங்களும் அக்கொள்கையும் ஒழிந்து தங்களுடைய ஆலயமும் கொள்கையும் நிலவ வேண்டுமென்கிற இச்சையுடன் கற்பனையாகப் புராணங்களைச் செய்வதும் அங்கங்கே சென்று இதையும் இக்கொள்கைப் பற்றியும் மேள்மையாகவும் அதைப்பற்றித் தாழ்வாகவும் பிரசங்கிப்பதுமாக இருந்தார்கள். இவர்களுக்கு அரசனும் மந்திரியும் அனுகூலமாக இருப்பதால் யாரும் இதை மறுப்பதில்லை.

இதனையறிந்த சைவர்களும், பெரியோர்களும் மற்ற பிராமணர்களும் மிகுந்த கவலையுற்று எதுவும் செய்யத்தோன்றுது சிலநாள் இருந்து பின்பு எல்லோர்களும் ஆலயத்திலேயே அன்ன ஆகாரமின்றி விரதம் பூண்டு ஒரு மண்டலம் வரை பரசிவனை நோக்கி அத்

திருஷ்டியில் இருந்தார்கள். அப்பொழுது பரசிவம் காட்சி யளித்தனர். இதைக்கண்ட எல்லோர்களும் அளவிறந்த ஆனந்த பரவசமுடன் ஆடிப்பாடித் துதித்துப் பின்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையைக் கூறினார்கள். இவ்வாக்கியத்தை திருச்செவியுற்ற பரசிவம் அன்பர்களே நீங்கள் இதைப் பற்றிச் சிறிதளவும் துவேசிக்கவேண்டாம். நான் வேறு அது வேறு என்கின்ற பேதமும் வேண்டாம். நானே அதுவாகவும் அதுவே நானாகவும் கருதி நீங்கள் என்க்குச் செய்யும் பூசனை யெல்லாம் விஷ்ணுவிற்கும், அவர்கள் விஷ்ணுவிற்குச் செய்யும் பூசனை யெல்லாம் எனக்கும் உண்டு. இதில் சந்தேகம் வேண்டாம். அதாவது, உலகில் சீவ கோடிகளைக் காக்கும் தொழிலுக்குரிய எனது சக்தியின் வடிவமே விஷ்ணு வடிவமாகும். அதுவே எனக்குப் பணிவிடை முதலியவைகள் செய்யக்கூடிய அளவிடப் படாத சிறந்த பக்தனாகவும் விளங்குகின்றபடியால் பக்தர்களுக்கு ஏற்படக்கூடிய பூசனையும் பெருமையும் என்னைச் சார்ந்தனவாகும், மற்றும் நம் பக்தர்களுக்கு இவ்விதம் ஏற்படவேண்டியது கிரமந்தான். இதனால் கெடுதி ஒன்றுமில்லை. இப்படி ஏற்படுவதற்குக் காரணம் நானே யாகும். இந்த விஷ்ணு முதல் மற்றும் உலகில் சீவத் தன்மைவாய்ந்த உண்மையான சிறந்த பக்தர்களையும் மற்றும் உண்மையான ஞானிகளையும் என் வடிவமாகவே கருதிப் பூசியுங்கள். அவை யெல்லாம் எனக்குப் பூசித்ததே யாகும். நான் எங்கும் வியாபகமாகவும் சர்வ சீவர்களிடத்திலும் கலந்திருப்பினும் இவர்களிடத்திலும் மிகுதியாக விளங்கப்படுகின்றேன். இதன் உண்மையை அறியும் பொருட்டு இதோ கவனியுங்கள். இச்சமயத்தில் விஷ்ணுவின் ஆலயத்தில் அபிடேக முதலான எல்லாம் நடைபெறப் போகின்றன. அவைகளை யெல்லாம் என் வடிவில் பாருங்கள் என்றனர். அவ்விதமே எல்லோர்களும் கண் இமையாது

பார்த்துக்கொண் டிருந்தார்கள். அங்கே விஷ்ணு விற்குச் செய்துள்ள அபிடேக அலங்காரம் தூப தீபம் நெய்வேத்திய முதலிய தெல்லாம் இங்கே பரசிவத் திற்கே ஏற்பட்டன. இதனை யறிந்த எல்லோர்களும் மிகுந்த ஆனந்தமுடன் வணங்கி நின்றபொழுது கவ னித்தீர்களா. ஆகவே இனிமேல் அத்துவேசங்களை விடுத்துச் சமரசமாகவே இருந்து வாருங்கள். அப் பிராமணர்கள் அஞ்ஞானத்தினால் நம்மைத் துவேசித் தாலும் இகழ்ந்தாலும் அவை யெல்லாம் விஷ்ணு விற்கே என்று அறிந்து நீங்கள் அதைப்பற்றித் துவே சிக்க வேண்டாம் என்பதாகக் கூறி மறைந்தருளினார். அதன் பிறகு இவர்கள் அத்துவேசமும் கவலையும் விடுத்து முன்போலவே இருந்து வந்தார்கள் பின்பு அங்கே நடக்கின்ற புதிய ஆடம்பரங்கள் எல்லாம் சனங்களுக்குப் பிரீதியாகவும் சந்தோசமாகவும் இருப் பதைக் கவனித்து தாங்களும் அவ்விதம் செய்ய ஆரம் தார்கள்.

இப்படி இருக்க சிவமதப் பற்றுடைய சில அரசர் கள் முதலில் விஷ்ணு மதத்தைப்பற்றி கவனிக்காம லும், சிலர் அதற்கு அனுகூலமாகவும் இருந்து பின்பு துவேசமுற்று அதை ஒழிக்க முயன்றார்கள். அப்பொ ழுது பரசிவம் அவர்கள் கனவில் தோன்றி, நான்வேறு விஷ்ணு வேறு என்பதாக நினைக்கவேண்டாம். நானே அவராக நினையுங்கள். அவர்கள் அறியாமல் துவேசித் தாலும் நீங்கள் ஒன்றாகவே கருதி வணங்குங்கள் என்ப தாகக் கூறி மறைந்தருளினார். அதன் பிறகு இந்த துவேசத்தை விட்டு ஒன்றாகவே கருதி, இரு ஆலயங்க ளுக்கும் போய் வணங்கி வந்தார்கள். விஷ்ணு மதமும் ஆலயங்களும் எங்கும் ஏற்பட்டன. சிவமத ஆலயங்க ளில் பரசக்தியை திருவுருவம் செய்துவைத்து அதன் சின்னமாக குங்குமத்தையும் நெற்றியில் பொட்டாக அணிந்து வந்ததைப்போன்று இவர்களும் திருவாகிய

லெக்குமியை திருவுருவமாகச் செய்து விஷ்ணு ஆலயங்களில் வைத்து அதன் சின்னமாக நெற்றியில் குங்குமத்தை அணிந்தார்கள். பின்பு, மஞ்சள் பொடியை மண்ணில் கலந்து அதை மத்தியில் அணிய ஆரம்பித்தார்கள்.

பிற்காலத்தில் வசிட்டனப் பிராமணர்களும் விஷ்ணு மதமும் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைந்து அங்கங்கே நிலவின. பின்பு யாகங்களில் பலி இடுவதை முன்னிட்டு புறப்பட்டுத் தென்னுட்டில் வந்த வசிட்டன பிராமணர்கள் அரசர்கள் உதவியால் ஸ்ரீ ரங்கத்தில் தங்கி ஆற்றின் மத்தியில் முதலில் ஸ்ரீ ரங்கநாதர் ஆலயம் அமைத்தார்கள். அதன் பிறகு அங்கங்கே சோழ தேசம், பாண்டி தேசம், சேரதேசம் முதலாக எல்லா இடங்களிலும் அரசர்களேயும் பொது சனங்களேயும் வயப்படுத்தி ஆலயங்களே கட்டி நிலவச் செய்தார்கள். பின்பு, வடக்கே முகமதியர்களுக்குப் பயந்து புறப்பட்டு வந்த வசிட்டின பிராமணர்களும் சேர்ந்து ராமர், கிருஷ்ணர், பெருமாள் முதலிய பல ஆலயங்களேயும் நிறுவி எங்கும் விளங்களாயிற்று. பல கல்வி அறிவிற் சிறந்த பெரியோர்களாலும். வியாசர் முதலிய பல முனிவர்களாலும் பல புராணங்களும், சரிதங்களும் வரைந்து நிலவச் செய்ததுடன் வேதத்திலும் முக்கியமாகச் சேர்த்து ஏற்படுத்தினுர்கள். பின்பு இவர்களில் வடகலே தென்கலே என்று பல பிரிவுகளும் ஏற்பட்டது. பிற்காலத்தில் பன்னிரு ஆழ்வாராதிகள் ஏற்பட்ட பொழுது பல ஆலயங்களும் திருவாய்மொழி முதலிய தோத்திரப் பாடல் நூல்களும் பல சரிதங்களும் ஏற்பட்டு விஷ்ணு மதம் எங்கும் அபிவிருத்தி அடைந்தது. அதன் பிறகு ராமானுசர் மாத்துலாச்சாரியார் முதலியவர்களாலும் பல நூல்களும் மத அபிவிருத்தியும் ஏற்பட்டது. முன்காலத்தில் திருப்பதியும், கள்ளழகர் ஆலயமும் திருநீற்றுமலேயும் சுப்பிரமணியர் ஆலய

மாக இருந்ததை இவர்கள் பல சூழ்ச்சியாலும் சாமார்த்தியத்தாலும் அரசர்கள் உதவியாலும் விஷ்ணு ஆலயமாக மாற்றி இருக்கிறார்கள். சிவாலயங்களையும் சிவனடியார்களையும் கண்ணால் பார்க்கக் கூடாதென்றும் சிவா என்கிற சப்தம் காதில் கேட்கக்கூடாதென்றும், சிவனடியார்களுக்கு அன்னம் அளிக்கக் கூடாதென்றும், துவேசமும் கட்டுப்பாடும் வைத்திருந்தார்கள். மற்ற மதஸ்தர்கள் துவேசிப்பது அவ்வளவு ஆச்சரியமல்ல. இந்த விஷ்ணுமதக் காரர்கள் சிவமதத்தை துவேசிப்பது தான் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். ஏனெனில் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள ஒரே இந்துமதமாக இருந்தும் இப்படிக் கடுமையான துவேசத்தைக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஒரு பெரும் ஆச்சரியம் என்னவெனில், ராமா என்கிற நாமம் சிவம் சத்தியும் சேர்ந்த பொருளென்றும் அதாவது, அரா — கடைசி எழுத்து ரா, உமா — கடைசி எழுத்து மா. இந்த இரண்டும் சேர்த்து ராமா என்பதாக வசிஷ்ட்ட முனிவரும், கலைக்கோட்டு முனிவரும் நாமம் வைத்ததாக ராமாயணத்திலேயே பார்க்கலாம். ராமர் பரம்பரை சிவ மதத்வர்களென்றும் ராமர் லெட்சுமணர் சீதை அனுமார் முதலியவர்கள் பூசித்த லிங்கமே இப்பொழுதும் இராமேசுவரத்தில் ஆலயமாக இருந்து வருகிறது. கிருஷ்ணபகவானும் அர்ச்சுனன் முதல்பாண்டவர்களும் சிவலிங்கத்தை பூசித்திருக்கும் பொழுது இவர்கள் ஏன் வெறுக்க வேண்டும். இம்மதத்திற்குரிய பாரதம், ராமாயணம், பக்த விசயம், ஜெயதேவர் சரிதம் முதலாக இன்னும் சில நூல்களைக் கற்றுத் தெரிந்திருந்தும் ராமர் கிருஷ்ணர் முதலியவர்களை விஷ்ணு அவதாரமாகப் பூசிப்பவர்கள் அவர்கள் பூசித்த சிவலிங்கத்தை பூசிக்காமல் ஏன் தூசிக்கவேண்டும். இது துவேசத்தினாலும், அறியாத் தன்மையாலும் ஏற்பட்ட தென்றுதான் கொள்ளவேண்டும்.

சிவ மதத்தவர்கள் ஆதியில் பரசிவம் அருளிய பிர காரம் துவேசமில்லாமல் சமத்துவமாக பாவித்து விஷ்ணுவையும் திருவையும் பூசித்து வந்திருக்கின்றனர் கள். ஆனால் அவர்கள் துவேசத்தினால் செய்யும் சில காரியங்களினால் பின்காலத்தில் இவர்களிலும் சிலர் துவேசத்தைக் கொண்டிருக்கின்றனர்கள். இப்பொழுது இரண்டு மதங்களும் சமரசமாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. கூடிய சீக்கிரம் இரு மதங்களும் ஒன்றாக விளங்கும்படி ஏற்படக்கூடும். இதற்கு முக்கியமாக இப்பொழுது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்க ராச்சாரிய சுவாமி அவர்கள் பெரும் முயற்சி செய்து ஒன்றுபடச் செய்து வருகின்றனர்கள்.

சமண மதம் உற்பத்தி.

சமணமதமென்பது சமணர் என்னும் துறவியால் ஏற்பட்டதாகும். இவர் புதிதாக ஒருமதத்தை உண்டாக் கக் கருதி, சீடர்களைச் சேர்த்து வேறாக ஆலயங்களும் புதிதாகநேர்மாறானகொள் கைகளும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன் பிறகு அதற்குச் சமண மதம் என் றும்நாமம் ஏற்படுத்தி நடந்துவந்தன. சமணம் என்றால் சமத்துவமும் சிறந்ததும் மேலானதும் மற்றும் காருண்ய கொள்கையென்றும் கடவுள் பெயர் அருகன் என்றும் ஏற்படுத்தினார்கள். பின்பு நாளுக்கு நாள் இக்கொள்கையும், சமணப் பள்ளிகளும் அங்கங்கே எங்கும் அபிவிருத்தி யடையச் செய்தார்கள். மற்றும் முன்னிருந்த சிவமதம் விஷ்ணுமதம் இவற்றின் பேரில் துவேசங்களும் ஏற்பட்டு சில அரசர்களைப் பல சூழ்ச்சி யால் வயப்படுத்தி இவ்விரண்டையும் ஒழிக்க முயன்றனர் கள். ஆனால் அது கூடவில்லை. மீண்டும் எவ்வளவோ பிரயத்தனமும் சூழ்ச்சியும் செய்தும் அநேக கெடுதிக ளும் செய்தார்கள். (முன்பு விஷ்ணு மதத்தவர்கள் சிவமதத்தை ஒழிக்க வேண்டிய முயற்சியும் அநேக கல வரங்களும் செய்தும்) முடியாததைப் போன்று. சமண

மதத்தர்கள் ஒழிக்கக் கருதி, வேண்டிய முயற்சியும் கலவரங்களும் செய்தும் முடியவில்லை. இம்மதம் அதிகமாக அபிவிருத்தி ஏற்படவுமில்லை. ஏனெனில் சீவகாருண்யமே பிரதானமாக இருந்தும், அநேகம் கடுங்கொள்கைகள் ஏற்பட்டிருந்தபடியால், இல்லறவாசிகள் கஷ்டமெனக்கொண்டு வைராக்கியமும் திடமும் உள்ள சில இல்லறவாசிகளும் மிகுதியாகத் துறவிகளும் கைக்கொண்டார்கள். பின்பு நாளுக்கு நாள் அபிவிருத்தி குறைவாகிவிட்டன,

இவர்கள் தங்களது தலைரோமங்களை மொட்டையாக தாங்களே பிடிங்கிக்கொள்வதும் தாடிமை வளர்ப்பதும விளக்கு வைக்காமல் இரவில் உண்பதும் வசிப்பதும் நடக்கும் பொழுது மயில்பீலிகொண்டு முன்னால் தூத்துக்கொண்டே போவதும் கீழே படுக்காமல் மரங்களில் வலையால் தொட்டி கட்டிப் படுப்பதும் இன்னும் பல அனுவசியமும் கடுமையுமான கொள்கையும், சீவகாருண்யமும் அகிம்சையும் உடைய கொள்கையும் கைக்கொண்டு இந்த மதத்தை அங்கங்கே சாமார்த்தியத்தாலும் பல சூழ்ச்சியாலும் நிலவச் செய்தும் மதுரைமா நகரிலுள்ள பாண்டிய அரசனையும் பல சூழ்ச்சியால் வயப்படுத்தி தங்கள் மதத்தில் சேர்த்துவிட்டார்கள். அப்பர் சுவாமிகளையும் முன்பு இப்படியே சேர்த்துவிட்டார்கள். இவருடைய சகோதரி திலகவதி அம்மையாரின் வேண்டுகோளுக்கிரங்கி ஈசுவரன் அவருக்கு சூலை நோயை அளித்து, சமணர்களால் தீர்க்கமுடியாமல், அது பொறுக்க முடியாது திருவதிகை ஆலயம் வந்து ஈசுவரனை உருகிப்பாடி அவ்வியாதி நீங்கி, பின்பு முன்போலவே சிவமதத்தில் சேர்ந்தார். இதை அறிந்த சமணர்கள் கோபமுற்று, அரசன் உதவியால் இவரைப் பிடித்து யானைக் காலில் வைத்தும், சுண்ணும்புக் கால்வாயில் வைத்தும், பின்பு கடலில் கல்லைக்கட்டிப் போட்டும் இறக்காமல் ஈசுவர அனுக்கிரகத்தால் தப்பினார்.

இத்தகைய கொடியவர்களாக இருந்தார்கள். அதன் பிறகு இதேமாதிரியாக பாண்டிய அரசனுக்கும் கொடிய வெப்ப நோய் ஏற்பட்டு, சமணர்கள் எவ்வளவோ மந்திர தந்திர வைத்திய சிகிச்சைகள் செய்தும் நீங்காமல் பின்பு, திருஞான சம்பந்த சுவாமிகள் அங்கேயாத்திரையாக வந்தபொழுது மங்மையர்க் கரசியார் வேண்டுதலின் பேரில் பாண்டியனுக்கு திருவெண்ணீற்றுப் பதிகம் பாடி திருநீறு அணிவித்து அவ்வியாதி நீங்கச்செய்து அரசன் முதலியவர்கள் மூலமாக சமணர்கள் பல ஆயிரக்கணக்கான எல்லோரையும் அங்கே வரும் படிசெய்து, பல வாதங்கள் செய்தும் சபதத்தின் மூலமாக உண்மையான மதம் எது, பொய்யான மதம் எது என்பதாக இருவரும் ஏட்டில் வரைந்து, ஆற்று வெள்ளத்தில் போட்டும், அக்கினியில் போட்டும் சமணர்கள் தோல்வியுற்று, முன்பு சபதப்படி எல்லோரும் கழுமரத்திலேறி இறந்தார்கள். அதன் பின்பு மகாவீர் என்பவர் முக்கியமாக இருந்தார். அவரை சில இடையர்கள் பிடித்து தடியால் கால்களில் அடித்துக் கொன்றார்கள். அத்துடன் அம்மதமும் குன்றி வட நாட்டிலும், சிலோன் முதலிய இடங்களிலும் சொற்பமாக இருந்து வருகிறது. இவர்களில் தமிழ் வித்வத் தன்மையில் சிறந்தவர்களும் இருந்திருக்கிறார்கள்.

புத்தர் மதம் என்பது புத்தரால் ஏற்பட்டபடியால் புத்தர் மதம் என்று விளங்கப்பட்டது. இம்மதம் சமண மதத்திற்குப் பின்பு சிலகாலம் சென்று ஏற்பட்டதாகும். புத்தர் அரசருடைய குமாரராக உற்பவித்து, இல்லறத்தில் நின்று துறவடைந்தவர். அவர் சிவகாருண்யமும், அகிம்சையும் பிரதானமாகக் கொண்டவர் அவர் தன்னுடைய கொள்கையை எங்கும் பரவச் செய்ய ஆரம்பித்தார். இவர் கடவுளைப்பற்றி அறியவோ வணங்கவோ அடையவோ இல்லாத உலகாயித

புத்தர் மதம் உற்பத்தி.

மதக் கொள்கையைக் கைக்கொண்டவர். தங்களுடைய தேச முழுதும் இக்கொள்கையை நிலவியதுமல்லாமல் மற்ற தேசங்களிலும் நிலவச்செய்து, அரசருடைய குமாரர் என்கிற பெருமையினாலும், அதிகார பலத்தினாலும், நிலவும்படி எங்கும் ஏற்பட்டன. ; மற்றும் ஜப்பான், சைனா, பர்மா, சிலோன் முதலிய தேசங்களிலும் சென்று பரவச்செய்தார். சீவகாருண்யமும், அகிம்சையும் முக்கியமாக இருப்பினும், மற்ற எறும்பு முதலிய சர்வ பிராணிகளைப்போல உண்பதும் உறங்குவதும், இரைதேடுவதும், புணர்வதும், அபிவிருத்தி யாவதும், சுகமாக வாழ்வதும், அழிவதும்போல் ஆறறிவோடும் கூடிய மேலான மானிடர்களும் இப்படியே வாழ்ந்து அழிந்தால் என்ன பெருமை இருக்கிறது. இக்கொள்கையும், சீவகாருண்யமும், அகிம்சையும் முக்கியமாகக் கொண்டார். பின்பு ஒரு வனத்தில் ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு சீடர்களுடன் வசித்துவந்தார். உடல் நோய் ஏற்பட்டு பலநாள் சிரமப்பட்டார். மற்ற சீடர்களெல்லாம் கவனிக்காமல் போய்விட்டார்கள். ஒருசில சீடர்கள் மட்டும் கவனித்து வந்தார்கள். பின்பு மனவேதனையுடன் இறந்தனர். அதன் பிறகு அவர் சீடர்களால் அங்கங்கே புத்தர் ஆலயம் ஏற்படுத்தி நிலவச் செய்தார்கள். பின்பு புத்தருடைய வாக்கியங்களை வரைந்து மத நூலாகிய வேதமாகச் செய்தார்கள் இம்மதத்தில் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இருந்திருந்தால் மிகவும் உயர்வாக இருந்திருக்கும். பின்பு அசோகன் முதலிய அரசர்களும் கைக்கொண்டு பரவி இருந்தும் பின் காலத்தில் நாளுக்குநாள் அம்மதமும் குன்றிவிட்டது. அதன் பிறகு, அனேகம் சிறு சிறு மதங்களும் தோன்றி மறைந்துவிட்டன. முகமதிய மதம் என்பது முன் காலத்தில் மதிமுகன் என்னும் அரசனால் இந்த ஏகதெய்வக் கொள்கைஏற்பட்டு பரவாமல் நின்றிருந்தது. பின் காலத்தில் நபிநாயகம் அவர்கள் காலத்தி

முகமதிய மதம் உற்பத்தி.

...விருந்து எங்கும் பரவும்படி ஏற்பட்டது. இவர் அரபி தேசத்தில் மக்கா என்னும் ஊரில் பிறந்து வளர்ந்து ஆடுகள் மேய்த்தும். பின்பு வியாபாரம் செய்து, அதன் பிறகு திருமணம் செய்து இல்லறத்தில் பத்து வருடம் வரை வாழ்ந்தும், அதை விடுத்து இராமலையில் போய் தவம் செய்தும், பத்து வருடம் சென்று தன்னுடைய கொள்கைகளை அங்கங்கே பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். எல்லோரும் இவரை பகைத்து அடித்து பல தொந்தரவுகள் செய்தும், இவரைத் தேடி கொலை செய்வதற்கும் எத்தனித்தார்கள். இவர் பயந்து மதிறுவுக்கு ஓடிச்சென்று, பின்பு, அங்கே தங்கி பிரசாரம் செய்ய ஆரம்பித்து நிலவச்செய்து பின்பு மற்ற இடங்களிலும் நிலவச்செய்தார். கடவுளை ஆண்டவன் அல்லா என்றும் ஏக தெய்வ வழிபாட்டையும், பல நேர்மாறுதலான கொள்கைகளையும் ஏற்படுத்தினர். (குரான்) என்னும் நூலையும் பின்பு வரைந்தார்கள். அதாவது குர்-என்றால் இருள். ரான் - என்றால் நீங்குவது. இருளாகிய அஞ்ஞானம் நீங்கக்கூடிய ஞான வாக்கிய மேன்பதாம். இவர்கள் மற்றவர்களுக்கு நேர்மாறாக தாடியை வளர்த்து தலையை மொட்டையிட்டு தொப்பி வைப்பதும், ஆடவர்கள் பெண்கள் அணியும் சேலைகளைப் போன்று கயிலி அணிவதும், பெண்கள் ஆண்களைப்போன்று வெள்ளை வஸ்த்திரம் அணிவதும், குழந்தைகள் பிறந்தால் அன்று அழுது துக்கம் கொண்டாடுவதும், இறந்தால் சந்தோசம் கொண்டாடுவதும், ஆண் பெண் திருமணங்களும் நேர்மாறாக ஏற்படுத்தினர்கள். இன்னும் பல கொள்கைகளும் மாறுதலாக ஏற்படுத்தி பலாத்காரமாக நிலவச் செய்தார்கள். கடவுளை வணங்குவது, மண்டி இட்டுத் தொழுவதாக வைத்தார்கள். அங்கங்கே கோவில்களைக் கட்டி அதற்கு கோரி என்று பெயர்வைத்தார்கள். பின்பு மசூதி என்றும் ஏற்பட்

டது. பின்பு இவர்கள் துடுக்கு என்னும் ஒரு மொழி யையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இதனுல் துடுக் கர் என்றும் பின்பு துலுக்கர் என்றும் முஸ்லீம் என் றும் விளங்களாயிற்று. பின்பு நபி அவர்களை கற்களால் சிறுவர்கள் அடித்து கொன்றிருக்கின்றூர்கள்.

இவர் மறைந்த பிறகு இம்மதத்திலுள்ள அரசர் களும் மாந்தர்களும் பல கொடுகையான கொள்கைகளை வைத்துக்கொண்டு பலவந்தமாகவும் கட்டாயமாகவும் கொலை முதலிய தொந்தரவுகள் செய்தும் மத மாற்றி யும் அபிவிருத்தி செய்தார்கன். மதச் சின்னமாக கர மும், பிறையும் வைத்தார்கள். பின் காலத்தில் சுல்தான், அவுரங்கசீப், நவாப்பு முதலியவர்களால் மிகுந்த துவேச மும் பலாத்காரச் செயல்களும் இந்து மதச் சின்னங் களையும் ஆலயங்களையும் நீக்குவதும் நடைபெற்றது. ஆனுல் அழிக்க முடியவில்லை. மீண்டும் ஏற்பட்டது. அதன் பிறகு வரவர இக்காலத்தில் சிறிது சமரசம் நிலவி வருகிற நிலமை ஏற்பட்டது. இவர்கள் மற்ற வர்களுக்கு நேர்விரோதமான கொள்கைகளும் வரம்பும் கைக்கொண்டார்கள்.

டில்லி நவாப்பு ஆட்சிசெய்த காலத்தில் இந்து மதத்திலும், இந்துக்கள் பேரிலும் மிகுந்த துவேசமும் வெறுப்பும் ஏற்பட்டு பலாத்காரமாக காசி முதலிய பல ஆலயங்களையும், விக்கிரகங்களையும் சின்னுபின்னப் படுத்தினுன். இந்து மதஸ்தர்களை பலவந்தமாக மத மாற்றினுன், பின்பு தென்னுட்டிலும் வந்து இங்கே உள்ள ஆலயங்களையும் ஒழிக்க விரும்பி பல சிறு சிறு ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களை எல்லாம் உடைத்து விட்டு அங்கங்கே மலைகளின்மீது கோட்டைகளைக் கட் டிச் சேனைகளுடன் இருந்துகொண்டு சுற்றிலும் சென்று பெரிய ஆலயங்களை அழிப்பதற்காக திட்டமிட்டு; திருச்சி மலையிலும், திண்டுக்கல் மலையிலும், திருப்பரங் கிரி மலையிலும் கட்டி முடிந்ததும் நவாப்பு நேரில் வந்து

பார்த்துச் சந்தோசித்துப் பின்பு சேனைகளுடன் கீழே இறங்கி முருகப் பெருமான் கோவிலுக்குள் போக வந்தார்கள். முன்னமே இதை அறிந்த பிராமணர்களும், கிராமச் சனங்களும் பயந்து வீடுகளுக்குள் மறைந்து கொண்டார்கள். ஒரு குருக்கள் மட்டும் தவறி அகப்பட்டுக் கொண்டார். அவரைப் பிடித்துக்கொண்டு போய் உங்கள் சாமி எது? பெயர் என்ன என்பதாகக் கோபமுடன் கேட்டான் கந்தசாமி என்பதாக முருகன் உருவ விக்கிரகத்தை காட்டினார். உடனே இது தானா என்ன செய்யும் பார்க்கலாம் என்பதாக கை தடியால் ஓங்கி தலையில் அடித்தான் அது தவறி மூக்கில் பட்டவுடன் படாரென்று நவாப்பு கன்னத்தில் மிகவும் பலமாக அறை விழுந்தது உடனே திடீரென்று கீழே சாய்ந்து மயங்கிக்கிடந்தான். மற்றவர்கள் கோபமுடன் சுற்றிப்பார்த்தால் யாருமில்லை, அய்யர்தான் நடுக்கமுடன் நிற்கிறார், இவர்கள் ஒன்றும் தோன்றாது நின்று பின்பு அவனைத் தூக்கினார்கள். அவனும் மிகுந்த கோபமுடன் எழுந்து அடித்தது யார் என்று கேட்டபொழுது எவர்களும் இங்கே இல்லை என்றவுடன் பயந்து இனிமேல் என்ன ஆபத்து ஏற்படுமோ என்பதாக யோசித்து அப்படியே மலைமீதுபோய் இது கோட்டை யல்ல சிக்கந்தர் ஆலயம் என்பதாக ஏற்படுத்திவிட்டு, அத்துடன் இந்து மதத் துவேசத்தையும் விட்டு சேனைகளுடன் டில்லி வந்து சேர்ந்தான். அது முதல் மேலே சிக்கந்தர் ஆலயமாக விளங்கி வந்தது. பின்பு முஸ்லீம் மசூதியாக இப்பொழுது இருந்து வருகிறது. இந்த ரகசியத்தை யாரும் தெரிவிக்கவில்லை. இப்பொழுதும் முருகன் முகத்தில் வடுவு இருக்கிறது. இம் மதம் ஏற்பட்டது முதல் முன் காலத்து அரசர்களாலும் மற்றும் மக்களாலும் பின்காலத்தில் அவுரங்கசீப், சுல்தான் (நவாப்பு) முதலிய சில அரசர்களாலும், மக்களாலும் இந்த மதத்தையும் இக்கொள்கைகளையும்

நிலவச்செய்யும் பொருட்டாகச் செய்த பலர்த்காரச் செய்கைகளும் கொலைகளும் அநீதங்களும் அளவு கடந்தனவாகும். ஆனால் அப்படிச் செய்தபோதிலும் மற்ற மதங்களும் கொள்கைகளும் சீர்கேடாகாமல் மீண்டும் மீண்டும் உடனே அபிவிருத்தி ஏற்பட்டன். இவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் நிவர்த்திக்க முடியவில்லை. முதலில் இவர்களுடைய அநீதங்களுக்குப் பயந்தே இந்தி தேசத்திலும் தெலுங்கு தேசத்திலும் வசித்த வசிட்டண பிராமணர்களும் அம்மதத்தைச் சார்ந்த பல பொது மக்களும் மற்ற சைவப் பிராமணர்களும் பொது சனங்களும் தமிழ் நாட்டில் குடிபுகுந்தார்கள். இதற்கு அறிகுறியாக இக்காலத்திலும் சில வருடங்களுக்கு முன்பு, நவகாளி என்னும் ராஜ்யத்திலும், கிழக்கு பாக்கிஸ்தானிலும் இவர்கள் கொலை முதலிய அட்டூழியங்கள் செய்து மதம் மாற்றியது எல்லோரும் அறிந்த விஷயம். முன்போன் றில்லாமல் இப்பொழுது சிறிது சமரசம் நிலவி வருகிறது.

முன்காலத்தில் இப்பொழுது இந்தியா என்று விளங்கக்கூடிய இத்தீவு ஒன்று தவிர மற்ற தீவுகளெல்லாம் மானிடர்கள் உற்பத்திக்கும் அபிவிருத்தி அடைந்து வசிப்பதற்கும் கூடாத நிலைமையில் ஏற்பட்டிருந்தன. சில தீவுகளில் அகோரமான உஷ்ணமும் அதனால் மரம், செடி, கொடி, புல், பூண்டும், தண்ணீரும் இல்லாத பாலை வனங்களாகவும், சில தீவுகளில் மிகுந்த காடுகளும், மலைகளும், குளிர் பனிக்கட்டிகளும், மிகுதியான மழையும் ஏற்பட்டுள்ளதாகவே இருந்தன. ஆகையால் இவ்விரண்டிற்கும் உகந்த பல சீவராசிகளே உற்பவித்து வாழப்பெற்றன. மனிதர்கள் ஏக தேசமாக ஏதாமொரு இடத்தில் உற்பவிப்பதும் அவர்களும் மற்ற பிராணிகளைப் போலவே சீவிக்கப் பெற்றும் மற்றும் நிர்வகிக்க முடியாமல் அழிவதும், இப்படியாக மானிடர்

பல தேசங்கள் உற்பத்தி.

கள் அதிக உற்பத்தியும் அபிவிருத்தியும் இன்றி வெகு காலம் வரையில் இருந்து வந்தன. இந்தியா வென்னும் தீவு மட்டிலும் சமநிலைமையை உடையதாக ஆதிமுதல் ஏற்பட்டிருந்தபடியால் இத்தீவு மட்டிலும் மானிடர்கள் உற்பத்தியும் அபிவிருத்தியும் மிகுதியாகவே இருந்து வந்தன. இதனாலேயே முன்காலத்தில் சில பெரியோர்கள் இந்தியாவே உலகமாகவும், இதற்குள் வசிக்கப் பட்டவர்களில் அளவுதான் உலகில் மாந்தர்கள் என்பதாகவும் கூறியுள்ளார்கள். வெகு காலத்திற்குப் பின்பு அத்தீவுகளிலும் நாளுக்குநாள் உஷ்ணமும் சீதளமும் சிறிது சிறிதாகக் குறைவுபட்டு அதன் பின் சிறிது சிறிதாக மானிடர்கள் உற்பத்தியும் அபிவிருத்தியும் ஏற்பட்டு அவர்களும் மனிதக் குரங்குகளைப் போல் ஆதியில் இந்தியாவில் வசித்த மாதிரியாக ஆடையின்றியும், காய் கனி கிழங்குகளையும் இலைகளையும் புசித்துக்கொண்டு மரத்தடியிலும் குகைகளிலும் மிருகங்களைப் போலவே வசித்து வந்தார்கள். அக்காலத்தில் இந்தியாவில் தவ சக்தியை யடைந்த பல சித்தர்கள் ஏற்பட்டிருந்தார்கள். அவர்கள் ககன மார்க்கமாகப் பல தீவுகளிலும் சஞ்சரிக்கும் பொழுது இம் மானிடர்களையும் இவர்களின் நிலைமைகளையுங் கண்டு கருணை வைத்து மனிதத் தன்மையில் ஏற்படுத்த விரும்பி, போகர் முதலியவர்கள் அங்கங்கே தங்கி இருந்து அவர்களை யெல்லாம் வயப்படுத்தி ஆதியில் திரிமுனிவர்கள் சீர்திருத்தம் செய்தது போன்று இவர்களும் சீர்திருத்தம் செய்து மனித நிலைமையையும் சிற்சில வேண்டிய தொழில்களையும் அதற்குரிய கருவிகளையும் தெரிவித்து, நிலவச்செய்து நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்தன. சித்தர்களின் மிகுந்த முயற்சியினாலேயே அந்நிலைமையில் முன்னேற்ற மானார்கள். அதன் பிறகு அங்கங்கே சிறு சிறு கிராமங்கள் ஏற்பட்டன. இவர்களும் அடிக்கடி சென்று பலவித உண்மைகளையும் யுக்தி புக்திகளை

யும் இரகசியங்களையும் தெரிவித்து வந்தார்கள். மற்றும் நீதிகளையும் கடவுளைப் பூசிக்கவும் போதித்து வந்தார்கள். அதன் பிறகு மனிதர்களுடைய அபிவிருத்தியும் மனிதத் தன்மையும் ஏற்பட்டன. இவர்களையும் தெய்வமாகவும் குருவாகவும் பாவித்து மிகுந்த அன்பு பக்தியுடன் நடந்து வந்தார்கள். பின்பு இந்தியாவில் ஏற்பட்டுள்ள சிவமத வழிபாட்டையும் ஏற்படுத்தி, இதற்கு முன் தமிழ் மொழியை வாய்மொழியாகவே ஏற்படுத்தி நிலவி இருந்ததுடன் சிற் சில இடங்களில் தமிழின் எழுத்துப் படிப்பையும் ஏற்படுத்தினர்கள். இப்படி இருந்துவரும் பொழுது இச்சித்தர்களுக்கு அநேக சீடர்கள் அங்கங்கே ஏற்பட்டு அவர்களால் அங்கங்கே ஒவ்வொருதீவுகளிலும் சிவாலயங்களை ஏற்படுத்தி விளங்கச் செய்ததுடன் மரத்தடிகளிலும், மலைகளின் உச்சிகளிலும் மற்றும் பல இடங்களிலும், சிவலிங்கங்களை ஏற்படுத்தி எங்கும் வழிபட்டு விளங்கச் செய்தார்கள். மற்றும் பல இரகசியமான விடயங்களையும் சரீர ஆன்ம சுகத்திற்குரிய நன்மார்க்கங்களையும் எல்லோர்களுக்கும் போதித்துக்கொண்டு குருவாக விளங்கினர்கள். பின்பு நாடு நகரங்களும் பலவித நாகரிகத் தன்மைகளும், அரசர்களும் ஏற்பட்டன. வெகு காலம் வரையில் இந்தியாவைப் போன்று, மற்ற எல்லாத் தீவுகளிலும் சிவமத வழிபாடும், தமிழ் மொழியுமே விளங்கி இருந்தன. ஆனால் தமிழின் எழுத்துக்கள் மொழி மட்டிலும் பரவாமல் சில இடங்களில் மட்டும் இருந்தன. அதன் பிறகு அவரவர்கள் யுக்தியாலும் சாமாத்தியத்தாலும் ஒவ்வொரு மொழிகளை ஏற்படுத்தி அந்தந்த தீவுகளில் நிலவச் செய்தார்கள். இந்தியா என்று இப்பொழுது விளங்கக்கூடிய இத்தீவிற்கு முன் காலத்தில் பிராமணர்கள் தங்களுக்காக சமஸ்கிருத மொழியும், பின்பு நாகரமென்னும் மொழியும் ஏற்படுத்திக் கொண்டு பொது மக்களுக்காக இந்தி யென்னும் ஒரு மொழியையும் ஆதி

தமிழுக்கு விரோதமாக ஏற்படுத்தி எங்கும் விளங்கச் செய்து அதனுல் பிற்காலத்தில் இத்தீவிற்கு இந்தியா என்று பெயர் ஏற்பட்டு எப்படி விளங்குகின்றதோ இதைப்போன்று அந்தந்த மொழிகளின் பெயராலும் சில முக்கிய காரணங்களாலும் அந்தந்த தீவுகளுக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா, சைனு, ஜப்பான், ரஷ்யா, ஜர்மன், பிரன்ஞ்சு எகிப்த், இட்டாலி, பர்மா முதலாக மற்ற எல்லாப் பெயர்களும் ஏற்பட்டு, ஒவ்வொரு தேசமாக விளங்களாயிற்று. பின்பு சிலகாலம் சென்று, சிவ மதவழிபாட்டிலும் சிற்சில பலதெய்வ வழிபாடும் புதிய முறைகளே ஏற்படுத்தினுர்கள். பலியிடவும் ஆரம்பித்தார்கள். சில இடங்களில் சகுண வழிபாட்டை மறுத்து கடவுளே ஏக தெய்வமாக வணங்கி வந்தார்கள்.

இப்படி இருக்க பின்பு பாலஸ்தீனத்தில் பெத்லஹெம் ஊரில் தச்சுவேலே செய்யும் தொழில் உடையவருக்கு ஏசுநாதர் குழந்தையாக மாட்டுத் தொழுவத்தில் உற்பவித்துச் சிறு பருவத்திலேயே துறவு நிலேமையை உடையவராய் இல்லிலிருந்து துறவு பூண்டு தன்னுடைய ஏகதெய்வ வழிபாட்டுக் கொள்கைகளே அங்கங்கே பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்.

கிருஸ்துமதம் உற்பத்தி.

மதக் குருக்கள்களே யெல்லாம் பலவிதமாகக் கண்டித்தும் அவர்களுடைய சிற்சில நடத்தைகளேயும் இகழ்ந்து பேசினுர். கடவுளே பரமபிதா என்றும், தன்னே தேவ குமாரனென்றும் சொன்னுர். கடவுளேத் தேவன் என்பதாகக் கூறினுர். இவைகளே அறிந்த குருக்களனேவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இவரிடத்தில் மிகுந்த வெறுப்பும் பகையும் ஏற்பட்டது. பின்பு இத்தேசத்திற்கு நானே அரசன். ரோமன் அரசனல்லன் என்பதாகவும் அங்கங்கே பிரசாரம் செய்தபடியால் இதனே யெல்லோரும் கவர்னருக்குத் தெரிவித்து இராஜ விரோதியாகத் தேடினுர்கள் இவர் பயந்து ஒழிந்து திரிந்தார். பின்பு ஒரு

சீடரின் துப்பின் பேரில் இவரைக் கண்டுபிடித்து செய்யக்கூடாத பல அவமானங்களும், தொந்தரவும் செய்து, பின்பு சிலுவையில் அறையப்பட்டார். அதன் பின் அவருடைய பன்னிரண்டு சீடர்களால் அவருடைய வாக்கியங்களையும், கொள்கைகளையும் வரைந்து பைபிள் என்னும் வேதப் புத்தகமாக ஏற்படுத்தி அங்கங்கே பிரசுரம் செய்து கிருத்துவ மதம் என்பதாக என்பதாக் முன்னிருந்த இந்து மதக் கொள்கைகளையும் அனுசரித்தே மாதா கோவில்களும் ஏற்படுத்தி ஏசு தெய்வ வழிபாடும், பலிகள் இடுவதையும் நிறுத்தி, பல புதிய முறைகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தி நடந்து வந்தன. அதன் பிறகு இதற்கு ரோமாபுரி அரசனே தலைமையாக இருந்து அங்கேயே முதன்மையான பெரிய கோவிலும் சபையும் ஏற்படுத்தி நடந்தபடியால் ரோமன் கத்தோலிக் கிருத்துவ மதம் என்பதாக விளங்கப்பட்டது. பின்பு பிரிட்டிஷ் சக்கரவர்த்தி ஏற்பட்ட பொழுது ஒரு அரசன் கட்டுப்பாடுகளுக்கு மீறி முன் மனைவியுடன் மற்றும் வேறு மனைவியை மணக்க விரும்பினான். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அதற்காகக் கோபித்துக்கொண்டு தான் வேறு ஆலயங்கள் ஏற்படுத்தி அதற்குச் 'சர்ச்சு' என்பதாகப் பெயர் சூட்டினான், அதாவது சர்—என்றால் மேலானதும், சில்—என்றால் இடமாகவும், தேவனைப் பிரார்த்திக்கக் கூடிய மேலான இடமாகக்கொண்டு கடவுளை ஏக தெய்வமாகவும், ஒளி வடிவமாகவும், தேவன் என்பதாகவும், ஏசு கிருத்துவை தேவ குமாரன் என்பதாகவும் ஏற்படுத்தி, புதிய முறையில் தன் தேச முழுதும் வழிபடச் செய்தான். அது முதல் பிரிவினை ஏற்பட்டது. இம்மதத்திலும் பல பிரிவினையும் கொள்கைகளும் சபைகளும் ஏற்பட்டன. இவர்கள் இந்தியாவில் ஆரம்பத்தில் பலாத்காரமாக தங்கள் மதத்தையும், மொழியையும் பரப்ப ஆரம்பித்தார்கள். சில அறிவாளிகள் யோசித்து

இப்படிச் செய்யக்கூடாது என்பதாக அங்கங்கே மிஸ் ஷெரிகளை ஏத்படுத்தி, படிப்பு, உத்தியோகம் ஜாதிசமத்துவம், திருமணச் சம்பந்தங்கள், வைத்தியம் முதலியவைகளைக் கொண்டும், பல தந்திர உபாயங்களினாலும் மதம் மாற்றி எங்கும் பரவச்செய்தார்கள். சுமார் முன்னூறு வருடங்களுக்குப் பின்புதான் எங்கும் பரவியதாகும்.

இவர்களும் முகமதிய மதத்தவர்களும் இன்னும் மற்றவர்களும் உருவ வழிபாட்டை வெறுக்கிறார்களே கடவுள் எங்கும் எல்லாம் வியாபித்துப் பூரணமாக விளங்கிகொண் டிருக்கும்பொழுது கல்லில்மட்டும் இல்லாமலா இருக்கிறார். மேலும் இவர்கள் சிலுவை, பிறை, கரம் அச்சரமாகிய எழுத்து முதலியதை வைத்தும், ஏசுநாதர் படம், நபிநாயகம் படம், புத்தர் படம் முதலியவைகளையும் வைத்தும் வணங்குகிறார்களே இவைகள் உருவ வழிபாடில்லையா? இந்த உருவங்களும் படங்களும் பேசுமா? கடவுளுடைய அறிகுறியாகவும் ஞாபகமாகவும் பாவனையாகவும் வைத்து எப்படி வணங்கப் படுகிறதோ இதேமாதிரியாகத்தான் இந்துக்களும் வழிபடுவதாகும். இதைக் குறைகூறுவது துவேதத்தன்மையும், அறியாத் தன்மையும் என்றுதான் கொள்ளவேண்டும். கிருஸ்துவர்கள் இன்னும் பழைய முறை, புதிய முறை என்று இரு முறைகளும் கைக்கொள்ளுகிறார்கள். கூடிய சிக்கிரம் எல்லா மதமும் ஒன்றாகக்கூடும். பின்பு பிரிட்டீசாருடைய அரசாட்சி உலகில் எங்கும் ஏற்பட்டதால் இம்மதமும் இவர்கள் மொழியும் அதிகாரத்தினாலும், பலவித உபாயங்களினாலும் அதிகமாக நிலவப்பெற்றது. சர்வ மதங்களுக் குரிய சிவம், விஷ்ணு. தேவன், ஆண்டவன், அல்லா, அருகன் என்னும் இன்னும் எல்லாத் தெய்வங்களும், மானிடர்களும் ஒன்றேயாம். ஆனால், கல்வி அறிவிற்கும், மனிதத்தன்மைக்கும், நீதிக்கும் பொருத்தமின்றிய சிற்சில

கொள்கைகள் மட்டிலும் சில மதங்களில் வித்தியாச மாக ஏற்பட்டுள்ளனவாகும். பின்பு, இன்னும் பல சிறு சிறு மதங்களும் கொள்கைகளும் ஏற்பட்டு மறைந்தனவாகும்.

இந்தியா தவிர மற்ற எல்லாத் தீவுகளும் வெகுகாலம் வரையில் மனிதர்கள் இல்லாமல் இருந்து பின்பு ஏற்பட்டும் மிருகங்களைப் போன்று கீழ்மையான நிலைமைகளில் வாழ்ந்து அதன் பிறகு சித்தர்களால் மனிதத் தன்மையும் சிற்சில தொழில்களும் அந்தரங்கமான விடயங்களும் நீதியும் கடவுளுடைய வழிபாடும் அடையப் பெற்றுப் பின் காலத்தில் நாளுக்குநாள் தங்களுடைய யுக்தியினாலும் புத்தியினாலும் ஆழ்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியினாலும் சாமார்த்தியத்தினாலும் விடா முயற்சியினாலும் உலக வாழ்க்கைக்குரிய தொழில்களையும் அந்தரங்கமான கருவிகள் முதலான விடயங்களையும் இரவும் பகலுமாக விஞ்ஞான முறையிலும் அறிந்து வெகு சீக்கிரத்தில் முன்னேற்றமடைந்தார்கள்.

உலகிலுள்ள சர்வ தேசங்களிலும் ஆதியில் சிவ மதமும், தமிழ் மொழியுமே விளங்கி வந்திருக்கின்றன. சிறிது காலத்திற்கு முன்புதான் அவைகள் மாறுதல் அடைந்திருக்கின்றன, இதற்குப் பிரத்தியட்சமான அறிகுறிகள் இன்னும் அங்கங்கே விளங்கிக்கொண்டிருக்கின்றன. வசிட்டினர், சமணர், புத்தர், நபி; கிருஸ்து முதலாக இன்னும் மற்றவர்களும் இந்து மதத்தில் பிறந்து வளர்ந்து இந்தக் கொள்கையில் இருந்து பின்பு தான் புதிதாக ஒவ்வொரு மதத்தை உண்டாக்கி இருக்கிறார்கள்.

ஆதி வேதத்திலுள்ள கரும காண்டம், பத்தி காண்டத்தின் சாரத்தைக்கொண்டு பல ஆகமங்களைப் பல பெரியோர் வரைந்தார்கள். அதன் பிறகு அதன் சாரத்தைக்கொண்டு பல புராணங்களும், இதிகாசங்களும், நீதி நூல்களும் செய்தார்கள். அதன் பிறகு, பல மந்திரம் தந்திரம், சோதிடம், ஆரூடம், வைத்தியம், சங்கீதம்,

பல நூல்கள் உற்பத்தி.

நாடகம், நடனம் முதலாக பலவித நூல்களை பல பெரியோர்கள் வரைந்து நிலவப்பெற்றதாகும். ஆதிவேதத்தினுடைய ஞான காண்டத்தின் சாரத்தைக்கொண்டு பல மகரிஷிகள் பல உபநிடதங்களும், வேதாந்த நூல்களும், ஞான நூல்களும், யோக நூல்களும் வரையப்பட்டு நிலவி இருந்தன. சாதிகளும், தொழில்களும் பின்பு அதிகமாக ஏற்பட்டு நிலவி இருந்தது. வேதங்களும் அதிக விரிவாக இருந்தன. பின்காலத்தில் வேத வியாசர் தோன்றிய பொழுது வேதத்தை நான்காக வகுத்தும் ஞானகாண்ட சாரமாக பிரம ருத்திர மென்னும் நூல் செய்தும் கர்ம காண்டம், பத்தி காண்டங்களுக் குரிய பல புராணங்களும், இதிகாசங்களும் வரைந்தும், சாதிகளையும் நான்காக வகுத்ததாகும். அதன் பிறகு நாளுக்கு நாள் வேத முதலாக எல்லா நூல்களையும் பல பேர் அவரவர்கள் இஷ்டப்படி கூட்டிக் குறைத்து பல விதமாக வரைந்து நிலவுவதாயிற்று.

மாமிசம் உற்பத்தி.

ஆதியில் உலகத்தினிடத்தே மானிடர்கள் உற்பவித்துச் சிலகாலம்வரையில் மனிதக்குரங்குகள் போன்று எத்தொழிலும் இன்றிக் காய் கனி கிழங்கு பச்சிலை முதலியவைகளை உண்பதுடாக இருந்து பின் காலத்தில் திரிமுனிவர்களால் தொழில்களும் மனிதத் தன்மையும் அடைந்தும் வெகு காலம் வரையில் மது மாமிசம் என்கிற நாமதேயமே இல்லாதிருந்து சுத்தமான ஆகாரமே உண்டுவந்தார்கள். பின்பு வேதம் ஏற்பட்டு நிலவிய பொழுது அதில் முதற் கர்மகாண்டத்தில் ஓமம் அல்லது தூமம் என்பது கூறப்பட்டு அதை இல்லறத்தவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமையான கர்மங்கள் செய்யும் பொழுது அதை ஆரம்பத்தில் பலவித மரச்சுள்ளிகளால் அக்னி மூட்டி, ஆவின் நெய் முதலியது விட்டு எரி வளர்த்திச் சில மந்திரங்களைக் கூறிப் பின்பு, மற்ற காரியங்களைச் செய்யும்படியாக ஏற்பட்டு, அதைச் செய்வ

தற்காக தக்கவர்களைக் குரு முறையாக ஏற்படுத்தி அவர்களுக்கு ஆச்சாரியர் என்று நாமம் சூட்டி, அவ்வி. தம் நடந்து வந்தன. (ஓமம் என்பது சிருட்டி, திதி, சம் மாரம் என்னும் மூன்றும் 'அடங்கிய பிரணவத்தின் பொருளாகும்) தூமம் என்பது சுத்தியும் சாந்தியும் நன் மையும் என்பதாகும். பின் காலத்தில் இந்திரன் முத லிய தேவர்கள் சந்தோசித்து நல்ல மழை பெய்தும் நவ தானியங்களெல்லாம் நன்ருக விளைந்தும், மனிதர்கள், மாடுகள் முதலிய சீவராசிகள் வியாதிகள் இல்லாமல் சுகமாக வாழ்வதற்காக வருடம் ஒருமுறை பொதுவான இடத்தில் பெரியோர்களும், பிராமணர்களும், சைவர் களும் மற்ற எல்லா பொது மக்களும் ஒன்றுகூடி மிகுதி யாகப் பலவித விறகுகளாலும் மிகுந்த நெய்யினுலும் பெரிய ஓமமாக அக்னிவளர்த்துப் பின்பு எல்லோர்களும் பந்தி போசனம் செய்வதும் இது ஒரு மக்கள் மகிழ்ச்சிக் குரிய திருவிழாக் கொண்டாட்டம் போன்று இருந்து வந்தன. அந்த ஓமங்கள் வளர்க்கும்போ தெல்வாம் பலி யாக நந்தி பூசனிக்காயை ரெண்டாக வெட்டி எரிவதும் உண்டு. பலி இடுவதென்ருல் மனத்திலுள்ள காமாதி முதலிய கெட்ட குணங்களை நீக்கிவிடுவதாகும். இப் படி நடந்துவந்தன. பின் காலத்தில் வேதத்தை சமஸ் கிருத மொழியில் வரைந்தபொழுது, மந்திரங்களும் சூத் திரங்களும் கொள்கைகளும் சிறிது கூடுதல் குறைவாக ஏற்பட்டிருந்தன. அதன் பிறகு இந்த ஓமத்திற்கு பலி இடுவதற்கு நந்திப்பூசனிக் காய்க்கு பதிலாக பச்சரிசி மாவு, கோதுமை மாவு இவைகளினுல் ஆட்டுக்கிடாய் மாதிரியாக உருவம் செய்து துஷ்ட தேவதைகளுக்கு அதைப் பலி இடுவதாகவும் இதற்கு யாகம் என்ப தாகவும் ஏற்படுத்தினுர்கள். இவைகளைச் செய்து வந்த ஆச்சாரியர்கள் பின்பு சரிவரச் செய்யாதபடியால் இதனை யறிந்த பிராமணர்கள் அவர்களை நிறுத்தி விட்டு, அரசர்களின் உதவியைக்கொண்டு அந்த யாகத்

தைத் தாங்களே செய்ய ஆரம்பித்தார்கள். பின்பு நாளுக்கு நாள் ஆச்சாரியர்களை நீக்கிவிட்டு, ஆச்சாரியர் என்னும் பட்டப்பெயரைத் தாங்கள் புனைந்துகொண்டு பொது மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமையான கருமங்களையெல்லாம் செய்ய ஆரம்பித்தார்கள். பிராமணர்களுள் சிற்சில முக்கிய மானவர்களுக்கும் இப்பட்டம் ஏற்பட்டதின் காரணம் இதுவேயாகும். பின்பு முன்னிருந்த ஆச்சாரியர்களுக்குத் தொழில் இல்லாததால் அவர்கள் மரவேலை, இரும்புவேலை, பொன்வேலை செய்வதற்காக முன்னமே ஏற்படுத்தியுள்ள தச்சன், கொல்லன், தட்டான் என்பவர்களிடம் சேர்த்து இவர்களும் அவ்வேலைகளைச் செய்யும்படியாகவும், அரசர்கள் ஏற்படுத்தினார்கள். இதனால் இவர்களுக்கு தட்டாச்சாரி, தச்சாச்சாரி, கொள்ளாச்சாரி என்பதாக நாமம் ஏற்பட்டதாகும்.

உலகில் மானிடர்களுக்குப் பல தொழில்களை ஏற்படுத்தி அவர்களுக்கு அந்தந்த தொழிலுக்குரிய பெயரும் ஏற்பட்டிருந்தன. அவர்களுள் பறையர் என்பது அதாவது பறை—அறிவிக்கக் கூடியவர்கள். பொது மக்களுக்குரிய நன்மை தீமையான காரியங்களை எல்லோர்களுக்கும்வாயால்—வாய் ஒலியால் வாய்பறை சாற்றுவது அதாவது வாயின் சப்த முழக்கி அறிவிப்பதும் மற்றும் மனிதர்கள் பசுக்கள் இறந்தால் அவைகளை தகனிப்பதும் அல்லது புதைப்பதும் இந்த இரண்டு தொழில்களுக்காக அவர்களை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் எல்லாக் காரியங்களுக்கும் எல்லோரிடத்திலும் சம நிலையில்தான் மற்ற தொழிலாளர்களைப் போலவே இருந்து வந்தார்கள். பேதம் என்பதில்லை. இவ்விதமாக வெகு காலம் வரை இருந்து பின்பு வாயினால் அங்கங்கே தெரிவித்துக் கொண்டிருந்ததை நீக்கித் தமுக்கு என்னும் ஒரு கருவியை பறையாகக் கொண்டு அதன் ஒலியால் தெரிவிக்கக் கருதி இறந்துபோன பசுவின் தோலை உரித்து அத்தோ

லினுலும் சுட்ட மண் சட்டியாலும் ஒரு பறை செய்து அதன் சப்தத்தால் நடக்கப்பெறும் விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டும், பின்பு மரத்தாற்செப்யப்பட்ட பறை செய்து ஆலயங்களுக்கு டமார மேளமும் செய்து கொடுத்து வந்தார்கள். இவ்விதமாக இறந்த பசுவின் தோலை உரித்து நாளுக்குநாள் பறை டமாரம் செய்யும் பழக்கம் ஏற்பட்டு அதிலுள்ள அசுத்த துற்நாற்றமும் அசுசித் தன்மையும் நீக்கப்பெற்றுத் தோலைப் பயன் படுத்தி வந்தார்கள். சில நல்ல கொழுப்பு தசையுள்ள இளம் மாடுகள் இறந்தால் அதை உரிக்கும்போது இம் மாமிசத்தை உண்டால் என்ன? என்பதான எண்ணங் களும் நாளுக்கு நாள் தோன்றி பின்பு சிறுகச் சிறுக யாரும் காணுமல் சிலர் உணவாக சமைத்து சாப்பிட ஆரம்பித்தார்கள். இதனை யறிந்த அரசர்களும், பிரா மணர்களும், மற்ற பொது மக்களும் மனம் பதைத்து நடுங்கிக் கோபங்கொண்டு, அவர்களை வரச்செய்து அடே! சண்டாளர்களே! நீங்கள் இவ்விதமாக தகாத செயலைச் செய்தீர்கள் என்பதாகக் கோபித்து அவர்க ளுக்குத் தகுந்த கடுமையான தண்டனைகளைச் செய் வித்து இனிமேல் அவ்விதம் செய்யக் கூடாது என்றும், பசுவின் மாமிசம் சாப்பிட்டபடியால் சண்டாளர் என் றும் புலையர் என்றும் இவர்கள் எல்லாம் மற்றவர்களைத் தீண்டக்கூடாதென்கிற முறையில் இவர்களை ஊருக்குப் புறம்பாகச் சிறிது தூரத்திற்கு அப்பால் தாழ்ந்த திசை யாகிய தெற்கில் அல்லது கிழக்கில் தனிமையாகவசிக்கும் படி ஏற்படுத்தி முன்போலவே தங்களுடைய தொழிலைச் செய்து வரும்படி செய்தார்கள். மற்ற பறையர்கள் முன்போலவே எல்லாரோடும் சமமாக இருந்துகொண்டு தங்கள் தொழிலைச் செய்துவந்தார்கள். அதன் பின் ஊருக்குப் புறம்பாக வசித்த பறையர்கள் சிலகாலம் சாப்பிடாமல் இருந்து பின்பு தனிமையாக இருக்கின்ற படியால் நாளுக்கு நாள் யாரும் காணுதபடி சாப்பிட

ஆரம்பித்தார்கள். மற்றும் அசுத்தமான பழக்க வழக்கங்களிலும் ஈடுபட்டார்கள். இவ்விதமாக அபிவிருத்தியுண்டாகி கொள்வினை கொடுப்பினை முதலியவைகளும் அவர்களுக்குள்ளே ஏற்பட்டு, அது ஒரு தாழ்ந்த வகுப்பாக ஏற்பட்டன. பின்காலத்தில் மற்ற பறையர்களும் அவர்களுடன் கலந்து அந்நிலைமையை யடைந்தார்கள். சாப்பிடாமல்இருந்த பறையர்களும் சிலர் அவர்களிடம் போக்குவரத் தானார்கள். இதையறிந்து அவர்களையும் தீண்டாதவர்கள் என்று வேறுபடுத்தினார்கள். சாப்பிட்டவர்களுக்குச் செருப்பும் ஏர் உழ வடமும் செய்து கொடுக்கும்படி ஏற்படுத்தி இவர்களுக்கு சக்கிலியர் என நாமம் ஏற்படுத்தினார்கள். மற்ற பறையர்களை மடத் தொழில் செய்யவும் ஏரி குளம் முதலிய பள்ளம் வெட்டுவதால் பள்ளர் என நாமம் வைத்து வேறுபடுத்தியதாகும். இப்படி இருக்க,

அத்தேசத்தை ஆண்ட அரசன் குடிகளின் பயிர்களை மிருகங்கள் வந்து அழிப்பதாக அறிந்து மிருகங்களைப் பயங்காட்டி வேறு காட்டிற்கு துரத்தும் நிமித்தமாக வேட்டைக் குரிய எல்லோர்களுடனும் தானும் சென்றான். அக்காலத்தில் மிருகங்கள் முதல் எந்த சீவன்களையும் கொல்லுவதில்லை. ஆகவே பலவித சப்தங்களினாலும் நெருப்புப் பந்தக்களினாலும், பயங்காட்டித் துரத்தி விடுவது வழக்கம். இவர்களும் அவ்விதம் செய்தும், மிருகங்கள் ஓடாமல் சுற்றிச்சுற்றி வந்துகொண் டிருந்தபடியால் வெகு நேரமாகி விட்டது. அரசனும் களைப்புற்று இரண்டு சேவகருடன் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் பக்கத்தின் புதரில் ஒரு மான், குட்டி போட்டிருந்தபடியால் அம்மான் ஓடாமற் சுற்றிச்சுற்றி இங்கே வந்தன. குட்டிகளை இவர்கள் அறியவில்லை. அந்த மானைக் கோபத்தினால் இரு சேவகர்களும் விரட்டிச் சென்றார்கள். வெகு தூரம் சென்ற பிறகு, அரசனுக்குத் தற்செயலாக அம்மான் குட்டிகள் காணப்பட்

டன. உடனே மிகுந்த பரிதாபத்துடன் அம்மானை இவ்விடம் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமெனக் கருதி சேவகர்களையும், மானையும் தேடி ஓடினான். அவர்கள் சென்ற வழி தவறி இவன் ஒரு வழியிற் சென்று ஒரு பெரிய மலையும், காடும் அடர்ந்த இடத்தை அடைந்தான். சூரியனும் அஸ்தமனமாகி அந்தகாரமான இருள் மூடிக்கொண்டது; வழி ஒன்றும் தெரியவில்லை. அங்குமிங்கும் சுற்றிச்சுற்றி அலைந்து வெகுநேரமாகிவிட்டது. பசியும்; தாகமும், களைப்பும் அதிகமாயிற்று. மிகுந்த துக்கமுடன் ஒரு மரத்தடியில் இருந்தனன். அங்கே இரு சேவகர்களும்; மற்ற சேனைகளும் அரசனை வந்து பார்த்து அவ்விடத்தில் காணுமல் பல இடங்களிலும் தேடிப் பின்பு. அரண்மனைக்குத்தான் போயிருக்கக் கூடும் என்பதாக உத்தேசித்து, எல்லோர்களும் போய் விட்டார்கள். இங்கே மரத்தடியில் இருந்த அரசன் கண்ணுக்கு ஒரு வெளிச்சம் தோன்றியது. அவ்விடத்தில் சிறிது தூரத்தில் சில வேடுவர் என்னும் பலிங்கர்கள் ஒரு ஆட்டுக் கடாயைக் கொன்று, அதன் இறைச்சியைக் கற்பாறையில் நெருப்பினுல் சுட்டு வைத்துக் கொண்டும், கந்த மூலங்களையும் சேர்த்து வைத்துக் கொண்டும், நெருப்பில் வெளிச்சம் வைத்துக்கொண்டும் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள். (வேடுவரென்ருல் பல உயிர்ப் பிராணிகளை வேட்டையாடிக் கொன்று தின்று சீவிப்பவர்களும் காட்டில் மிருகங்களைப்போல் வசிப்பவர்களு மாவார்கள்.) அவ் வெளிச்சத்தைக் கண்ட அரசன் எழுந்து அங்கே மெதுவாகச் சென்ருன். இவனைக் கண்ட வேடுவர்கள் யாரோ ஓர் அரசன் எனத் தெரிந்து உயிரைக் கொன்று மாமிசம் சாப்பிடுவதற்காகப் பயந்து அவைகளை யெல்லாம் தெரியாமல் மறைவாக வைத்துவிட்டு இவனிடம் எதிர்நோக்கி வந்து தாங்கள் யாரெனக் கேட்டபொழுது, அரசன் நடந்த உண்மையைக்கூறிப் பின்பு, தனக்குப் பசியும் தாகமும்

அதிகமாக இருக்கின்றபடியால் அதற்கு வேண்டியதைக் கூடுமானால் கொடுங்கள் என்றான். உடனே அவர்கள் அரிசனை அமரச்செய்து, ஒரு தொன்னையில் தண்ணீரும் தாங்கள் வைத்திருந்த கந்த மூலங்களையும் கொண்டு வந்து வைத்தார்கள். அவைகளோடு சில மாமிசத் துண்டுகளும் கலந்திருந்தன. அவர்கள் அதை கவனிக்கவில்லை அரசனும் தெரியாமல் பசியின் மிகுதியால் சிலவற்றை அவைகளுடன் சேர்த்துச் சாப்பிட்டுவிட்டான். பின்பு ஒரு துண்டைக்கண்டு அதைக் கவனித்து இது என்ன இவ்வளவு ருசியாக இருக்கிறதென்று நினைத்து அவர்களிடம் வினவினான். அவர்களும் பயந்துகொண்டு உண்மையைக் கூறினார்கள். அதைக் கேட்ட அரசன் ஒரு வகையில் மனம் வெறுப்புற்றும், மீண்டும் இதை இவர்கள் செய்த பாகமே இவ்வளவு ருசியாக இருந்தால் இன்னும் நெய் முதலியவற்றால் சமைத்து உண்போமானால் மிக நன்றாக இருக்கக்கூடும் என்பதாகத் தன்னுள்ளே எண்ணிக்கொண்டு, இன்னும் இத் துண்டுகள் இருந்தால் கொண்டு வாருங்கள் என்றான். உடனே கொண்டுவந்து வைத்தார்கள். அவைகளை யெல்லாம் இலையில் நன்றாகக் கட்டிவையுங்கள். இது ஒரு மருந்துக்கு வேண்டியதால் நாளையதினம் கொண்டுபோக வேண்டுமெனக் கூறினான். அப்படியே அவர்கள் கட்டி வைத்தார்கள். பின்பு, அவர்களை நோக்கி இனிமேல் இவ்விதம் உயிர்களைக் கொன்று உண்ணாதீர்கள். இது மிகப் பாபமாகும், மிருகத் தன்மையு மாகுமெனக்கூறி, அன்றிரவு அங்கேயே தங்கியிருந்து அதிகாலையிலெழுந்து அந்த மாமிசத்தையும் வாங்கித் தன்னுடைய உடுப்புக்குள் மறைவாக வைத்துக்கொண்டு வேடுவருடன் புறப்பட்டு அக்காட்டைக் கடந்தார்கள். அதற்குள்ளாக அரசனைத் தேடி எல்லோர்களும் எதிர்வந்தார்கள். எல்லோர்களுமாக அரண்மனை சேர்ந்து, வேடுவர்களுக்கு வேண்டிய வெகுமதிகளை அளித்து அனுப்பிவிட்டு அந்த

ரங்கமாகத் தன்னுடைய மனைவிக்கு இம்மாமிசத்தைக் காட்டி ஒரு தாசியின் மூலமாக எவர்களுக்கும் தெரியாமல் நெய் முதலியவற்றால் நன்றாகச் சமைத்து இந்த ஒரு வியாதிக்குச் சாப்பிடுவதாக தாசிக்குக் கூறி, இருவருமாகச் சாப்பிட்டார்கள். மிக ருசியாக இருப்பதை உணர்ந்து இன்புற்றார்கள்.

மறுதினம் தனக்கு குருவாகவும், வேதவிற்பனரும், மந்திரியைப் போன்றுமுள்ள பிராமணருக்கும் இதைச் சொல்லி அவரும் இதைப்பற்றிப் பலவிதமாக யோசித்து யாகம் செய்யும்பொழுது மாவினால் ஆடு போன்று உருவம் செய்து பலியிடுவதை மாற்றி உண்மையாகவே ஆட்டைக்கொண்டுவந்து பலியிட்டு அதன் மாமிசத்தை ஒரு பெரிய கொப்பறையில் பசுவின் நெய்யினால் நன்றாக வேகச்செய்து, அதனைத் தேவேந்திரன் முதற் தேவர்களுக்கு ஆவாகனம் செய்து பின்பு அவைகளை அரசர்களும் அங்கே வந்துள்ள எல்லா பிராமணர்களும் சிறிது சாப்பிட வேண்டும், மீதமானால் புதைத்துவிட வேண்டும். இதுதான் உண்மையான யாகம். அந்த ஆட்டுக்கிடாய் சுவர்க்கம் அடைகிறதென்றும், ஆதியில் இவ்விதம்தான் ஏற்பட்டிருந்தது என்பதாகத் தன்னுடைய சாமர்த்தியத்தினால் இதற்குரிய சூத்திரங்களையும், மந்திரங்களையும், தானங்களையும் புதிதாக ஏற்படுத்தி இதை அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் கேட்டு, மிகுந்த மகிழ்ச்சியடைந்து ஒப்புக்கொண்டு அந்த முறையில் ஒரு யாகம் செய்வதற்கு ஏற்பாடுசெய்து மற்ற பிராமணர்களை வரும்படி அழைத்தான். இவ்விடயத்தைக் கேட்ட எல்லோர்களும் நடுநடுங்கி ஐயோ இதென்ன அநீதியாக இருக்கின்றது என்பதாக மிகுந்த துக்கமுடன் யாகத்திற்கு வரவில்லை. சில பிராமணர்கள் மட்டும் அரசனுக்குப் பயந்தும் தானத்திற்கு இச்சித்தும் மற்றவர்களுக்குத் தெரியாமல் வந்தார்கள். அவர்களைக்கொண்டு அந்த யாகத்தை முடித்து அதன்

பிரகாரம் காட்டிலிருந்து ஓர் ஆட்டுக் கிடாயைக் கொண்டுவரும்படிச் செய்து பலியிட்டு அதனை நெய் கொப்பரையில் நன்றாக வேகச்செய்து பின்பு, தேவர்களுக்கு ஆவாகனம் செய்து பின்பு அரசனும், மனைவியும் மற்ற எல்லாப் பிராமணர்களும் சிறிது சாப்பிட்டார்கள். சில தினம் சென்று மறுபடியும் ஒரு யாகம் செய்ய விரும்பித் தன்னுடைய தேசத்திலுள்ள பிராமணர்களெல்லாம் யாகத்திற்கு வரவேண்டும் என்பதாகவும் இல்லையேல் கொடிய தண்டனைகள் ஏற்படக்கூடும் என்பதாகவும் அங்கங்கே தெரிவித்தனன். இதனை யறிந்த சில பிராமணரும் முன்வந்து சாப்பிட்ட பிராமணர்களும், யாகத்திற்குச் சென்றார்கள். மற்ற எல்லோர்களும் அன்றிரவே புறப்பட்டுத் தென் தேசம் வந்து சேர்ந்தார்கள். இவ்வநீதிகளைக் கேள்வியுற்ற தென் தேசத்து அரசர்கள் மிகுந்த கோபமும் கவலையும் உற்றவர்களாய் அவ்வரசனைப் பலவிதம் தூசித்துப் பின்பு, இவர்கள் பேரில் மிகுந்த அன்புகொண்டு இவர்களுள் சிலரை சோழ தேசமாகிய சிதம்பரத்திலும் சிலரை பாண்டிய தேசமாகிய திருச்செந்தூர் இராமேசுவரம் இவ்விரண்டிலும் இருக்கும்படி செய்து அவர்களுக்கு வேண்டிய இல்லம் முதலிய எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்தார்கள். இது நிற்க முன் கூறிய அரசனது தேசத்தில் அடிக்கடி இவ்விதமான யாகம் செய்ய ஆரம்பித்து நாளுக்குநாள் மற்ற பிராமணர்களும் சாப்பிட ஆரம்பித்தார்கள். பின்பு, மற்ற அரசர்களும் இவ்விதமான யாகம் செய்ய ஆரம்பித்தவுடன் இதற்கு வெறுப்புற்ற அநேக பிராமணர்களெல்லாம் புறப்பட்டுத் தென் தேசம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைச் சேர தேசமாகிய மலையாளத்திலும், மற்றும் அங்கங்கே பல இடங்களிலும் இருக்கும்படி ஏற்பாடுசெய்தார்கள். பின்பு, அரசர்கள் இவர்களை ஆலயங்களில் சைவர்களுடன் நீங்களும் இருந்து பூசையை கவனித்துக் கொள்

ளுங்கள் என்பதாக ஏற்படுத்தினர்கள். நாளுக்குநாள் பல நூதனமான புதிய விடயங்களையும், கொள்கைகளையும் ஏற்படுத்தி அரசர்களையும், பொது சனங்களையும் ஆனந்த மடையச்செய்து வயப்படுத்தி, பின்பு சைவர்களை நீக்கிவிட்டுச் சைவ பிராமணுள் என்பதாக் அவர்கள் பட்டத்தைத் தாங்கள் புனைந்துகொண்டு தாங்களே அப்பூசைத்தொழிலை ஒவ்வொருவரும் முறைப்படி செய்ய ஆரம்பித்தார்கள். பின்பு, ஆகமம் என்னும் நூல்கள் வரைந்து பின்காலத்திலுள்ள பலி முதலியதைக் கூறும் வேதத்திற்கு விரோதமாகச்செய்து ஆகமப்பிராமணர் என்பதாக பெயர்வைத்துக் கொண்டார்கள். பின் காலத்தில் இவர்களிலும் இரண்டு மூன்று பிரிவினைகள் ஏற்பட்டிருந்தன. வடதேசத்தில் வேத பிராமணர்கள் என்பதாகவே யாகம் செய்பவர்களுக்கு. நாமம் ஏற்பட்டு, அவர்கள் யாகம் செய்யும் பொழுது மட்டும் மாமிசம் உண்பதாக இருந்தார்கள். பின்காலத்தில் அவர்களுள் சிலர் நாளுக்குநாள் மறைவாக அடிக்கடி மாமிசமும், மீனும் சாப்பிட ஆரம்பித்தார்கள். அதை யறிந்த மற்ற பிராமணர்கள் கண்டித்தும் கேட்கவில்லை. பின்பு, அவர்களை மச்ச பிராமணர்கள் என்பதாக வேறுபடுத்தி விட்டார்கள். மற்ற பிராமணர்களும் பொது மக்களெல்லாம் முன்போலவே சுத்தமான ஆகாரங்களையே உண்டுவந்தார்கள். இதைப்பற்றி அந்த பிராமணர்கள் யோசித்து இவர்களெல்லாம் சுத்தமான ஆகாரம் உண்ண நாம் மட்டும் மாமிசம் சாப்பிட்டு வந்தால் பின் காலத்தில் நமக்கு இழிவு ஏற்படக்கூடும். மற்றும் உண்மைக்கும் நமக்கு இது உண்பது பொருத்தமன்று இதை நீக்கவும் முடியாது. அரசர்களுக்கும் கோபம் ஏற்படும். என்று பல தடவை யோசித்துப் பின்பு, அரசனிடம் தந்திரமாக பொது மக்களனைவரையும் வரும்படி செய்து பக்கத்தில் இருக்கின்ற காட்டில் வனதேவதை வசிக்கின்றது அதற்கு

நீங்கள் எல்லோர்களும் ஒற்றுமையாகச் சேர்ந்து, பச்சரிசி முதலிய பொருள்கள் கொண்டுபோய் அங்கே சமையல்செய்து அங்கே வசிக்கும் ஆட்டுக்கடாய்களில் ஒன்றைப் பிடித்துப் பலியிட்டு அதை சமைத்து வன தேவதைக்கு ஆராதனை செய்து, பின்பு எல்லோர்களும் அதைச் சாப்பிட்டு விடவேண்டும். மீதமானால் புதைத்து விடவேண்டும் கொண்டுவரக் கூடாது. இவ்விதம் வருடம் ஒருமுறை செய்தால் அதனால் மழை அதிகமாக பெய்து தானியாதிகள் அபிவிருத்தியும், குடும்பங்களுக்கும், மாடுகளுக்கும் நோய் முதலியவைகள் வராது காக்கும் என்றுகூறி, அவ்விதம் அவசியம் செய்யும்படியாகச் சொன்னவுடன் இதைக் கேட்ட சில பெரியோர்கள் மனம் வருந்திப் பின்பு, அரசனுடைய ஆக்கினைக்குப் பயந்தும், பிராமணருடைய வார்த்தையை ஒருவாறு நம்பியும் இவ்விதம் செய்துவந்து, பின்பு மாதம் ஒரு முறையாகவும், நாள் செல்லசெல்ல அவரவர்கள் செய்யவும் அடிக்கடி செய்து சாப்பிடவும் ஏற்பட்டன. அதன் பிறகு நிரந்தரமாகவே ஏற்பட்டு ஆடுகளைப் பிடித்து வந்து வீடுகளில் வளர்க்கவும் ஆரம்பித்தார்கள். இன்னும் கோழி, மீன் முதலியவைகளையும் சாப்பிட ஆரம்பித்தார்கள். அவ்விதமே அரசர் முதலியவர்களும் சாப்பிட்டு வந்தார்கள். இதற்கு முன் பசுக்களும், காளை மாடுகளும் வீடுகளில் வளர்ப்பது தவிர மற்ற எதுவும் வளர்ப்பதில்லை. மாமிசம் சாப்பிட ஆரம்பித்த பிறகுதான் ஆடுகளையும், பின்பு கோழி முதலிய பட்சிகளையும் மற்றும் சில பிராணிகளையும் வளர்க்க ஆரம்பித்தார்கள் இப்படியிருக்க, வடதேசத்தில் மாமிசபட்சணம் மிகுதியாக ஏற்பட்டு பின்பு நாளுக்குநாள் வேத பிராமணர்களும் ஏகதேசமாக தென்தேசம் வந்து, அரசர்களை வயப்படுத்தி யாகம் செய்ய ஆரம்பித்தார்கள். அங்கே நடக்கும் வன தேவதையின் பூசையை இவ்விடத்திலும் செய்யும்படி ஏற்படுத்தினார்கள். காளி, கருப்பன், வீரன்

முனியன் முதலிய துட்டதேவதைகளுக்கும் பலிஇட்டுப் பூசிக்கும்படி ஏற்பட்டு, பின்பு மற்ற பொதுமக்களும் வரத்துப்போக்கும் ஏற்பட்டு, சிறுகச்சிறுக இவ்விடத்திலும் பொது மக்களும் அரசர்களும் மாமிசம் சாப்பிட ஆரம்பித்துப் பின்பு, ஆடு கோழி மீன் முதலிய எல்லாம் உண்ணும்படி ஏற்பட்டன. பின்பு வேதப் பிராமணர்கள் அபிவிருத்தி அதிகமான படியாலும் அவர்களுக்கு சீவிப்பதற்கு வேறு தொழில்முறை யில்லாதபடியாலும், சோமயாகம், இராசசூயயாகம், அஸ்வமேத யாகம், புத்தர காமேஷ்டி யாகம் என்றும், இன்னும் அநேகவிதமான யாகங்களை ஏற்படுத்தி இதற்குப் பலாபலன்களையும் கூறி, முப்பத்திரெண்டு தானங்களும் செய்யும்படியாகவும் கூறி, இவைகளை அரசர்களுக்கும் செல்வந்தர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்து அவர்களைக்கொண்டு, இந்த யாகங்களைச் செய்து இதில் வரும் தானங்களையும் வருமானங்களையும் கொண்டு சுகமாக வாழப்பெற்றார்கள். பிராமணர்கள் செய்த காரியங்கள் எல்லாம் தங்களுடைய சீவனத்திற்கும், பாதுகாப்புக்கும் செய்தார்களே அல்லாமல் உலகத்தவர்களுக்கு கெடுதிக்காக எதுவும் செய்யவில்லை. ஆனால் அவைகளில் சிலது நன்மையாகவும், சிலது கெடுதியாகவும், தாழ்மையாகவும் ஏற்பட்டன.

சைவ ஆகமப் பிராமணர்கள் சிவாலயங்களை அபிவிருத்தி செய்து அதில் தங்களுக்கு ஏதுவான சில புதிய முறைகளையும், நூல்களையும் ஏற்படுத்தி அரசர்களையும் மக்களையும் வயப்படச்செய்து அதைக்கொண்டு, இவர்கள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். வசிட்டண பிராமணர்கள் விஷ்ணு ஆலயங்களை அங்கங்கே தங்கள் சாமர்த்தியத்தால் அபிவிருத்தி செய்து தங்களுக்கு ஏதுவான அநேக புதிய முறைகளையும், நூல்களையும் செய்து எல்லோர்களையும் வயப்படுத்தி அதைக் கொண்டு அவர்கள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். ஆச்சாரியர் என்

னும் குருக்கள் பிராமணர்கள் பொது மக்களுக்கு ஏற்ப்டும் சத்கருமம், தீய கருமங்களில் தங்கள் சீவனத்திற்கு ஏதுவான அநேகம் புதிய முறைகளை விரிவாக ஏற்படுத்திச் சனங்களை வயப்படுத்தி அதைச் செய்து கொண்டு அவர்கள் சுகமாக வாழப்பெற்றார்கள். பிற்காலத்தில் பிராமணர்கள் அபிவிருத்தி அதிகமான படியால் உத்தியோகம், விபசாயம், வியாபாரம் முதலிய தொழில்களை செய்து சீவிக்கும்படி ஏற்பட்டதாகும். பின்பு ஆதி சைவர்கள் ஆலயங்களைவிட்டு நீங்கியவுடன் அவர்களுக்குத் தொழில் இல்லாதபடியால், அரசர்கள் யோசித்து அரண்மனைகளில் மானேசர், கர்ணம் முதலாகப் பல உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்தி மற்றோர்களை யெல்லாம் அங்கங்கே ஒவ்வொரு கிராமங்களில் கர்ணம் அதாவது கணக்குப்பிள்ளை என்னும் உத்தியோகத்தில் அமர்த்தி அவர்களுக்குப் பிள்ளை பட்டமும் ஏற்படுத்தினார்கள். இவர்கள் இதைக்கொண்டு சுகமாக வாழப்பெற்றார்கள். மற்றும் ஆலயங்களில் இவர்களுக்கு மரியாதையும் ஏற்பட்டிருந்தன. மற்ற எல்லாத் தொழிளாலர்களும் அவரவர்கள் தொழில்களைச் செய்து சுகமாக வாழப்பெற்றார்கள்.

பின்பு அய்யனார் என்னும் தெய்வத்தை கிராமங்களில் அங்கங்கே ஏற்படுத்திச் சுத்தமான முறையில் குயவர்களைப் பூசிக்கும்படி ஏற்படுத்தி நடந்துவந்தன. பின் காலத்தில் அத்துடன் பல துஷ்ட தேவதைகளையும் சேர்த்து பலி முதலிய தீய முறைகளையும் ஏற்படுத்தினார்கள். அது நாளுக்கு நாள் எங்கும் அதிகமாகப் பரவியது. இதனால் சிவாலயம், விஷ்ணு ஆலயம் இவைகளிடத்தில் பக்தியும் அபிமானம் சிறிது குறைவும், மற்றும் மாமிசப் பட்சணமும், கொலை, தீய நடத்தை முதலியவைகள் அபிவிருத்தியும், யாகத்திற் பலி இடுவதற்கு அநுகூலமாகவும் ஏற்பட்டனவாகும்.

முன் காலத்தில் கங்கை கரையின் ஓரத்தில் மிக வும் செழிப்புள்ள ஒரு பெரிய கிராமம் இருந்தது. அதில் அநேகம் பிராமணர்களும், மற்றும் பல குடியானவர்களும் வசித்து வந்தனர். அங்கே தத்தன் என்னும் ஒருவன் இருந் தான். அவனுடைய இல்லத்தின் பின்

மது வகை உற்பத்தி

புறத் தோட்டத்தில் சில தென்னை மரங்களும், சில வாழை மரங்களும் உண்டாக்கி யிருந்தான். அவனுக்கு பத்து வயதுள்ள ஒரு குமாரன் உண்டு. அவன் ஒருநாள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது மிக்கத் தணிவாகவுள்ள ஒரு தென்னை மரத்தில் ஏறி, கத்தியினால் ஒரு பாளையைக் கால் பாகம் அறுத்து விட் டான். இந்த விடயம் அவனுக்குத் தெரியாது. மறு தினம் காலையில் எழுந்து தோட்டத்திற்கு வந்த பொழுது அம்மரத்தின் கீழ் பரிசுத்தமான ஆவின் பால் போன்றதாய் உறைந்திருந்தன. அதைச் சுற்றிலும் எறும்புகளும், ஈக்களும், வண்டுகளும் மொய்த்துக் கொண்டிருந்தன. இதை உற்றுக்கவனித்தான். அப் போது அது மரத்திலிருந்து சொட்டுச் சொட்டாக வடிந்தன. இதை யறிந்து அம்மரத்தின் மீது ஏறிப் பார்த்தபோது ஒரு பாளை அறுபட்டு இருந்தது. அதன் கீழ்க் காய்ந்துபோன ஒரு பாளையில் நிறையப் பால் தங்கி இருந்தது. இதையும் பார்த்து மிகுந்த ஆச்சரிய முற்றவனாய் இறங்கிவந்து தனது குமாரனை யழைத்து, நீதானா இப்பாளையை அறுத்தாய் என்பதாகக் கேட் டான். அவனும் உண்மையைக் கூறினான். பின்பு தனக்குச் சிநேகிதனான அடுத்த வீட்டுக்காரனை அழைத்துவந்து இதைக்காட்டி இருவரும் யோசித்து இதில் மதுவாகிய தேனைப் போன்று இனிப்பும், ருசியும இருக்கக்கூடும். அதனால்தான் ஈ எறும்பு வண்டுகள் மொய்க்கின்றன. மேலும் இது கற்பக விருட்ச மென் றும், தென்னை விருட்சம் என்றும் மேன்மையாக இருப்

பதால்-இதன் பால் மிகவும் விசேடம் என்பதற்கு ஐய மில்லை. ஆகையால் நாளையதினம் ஒரு பாத்திரத்தில் விடிகட்டி அப்பாளையின் அடியில்வைத்து மறு தினம் எடுத்துச் சாப்பிட்டுப் பார்க்கலாம் என்று இருவரும் பேசி, அப்படியே செய்து மறுதினம் அதை யெடுத்துச் சாப்பிட்டபோது, சிறிது தித்திப்பாகவும், ருசியாகவும் இருந்தன. மற்றும் ஒருவித வாடையுடனும் கூடியதாய் இருந்தன. இதை யறிந்து தினம் அவ்விதம் இருவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஆனால் அது மழைக் கால மானதாலும் மற்றும் புளிக்குமுன் அதிகாலையில் சாப் பிடுவதினாலும் போதை யென்பது ஏற்படவில்லை. ஏதோ சிறிது மதமதப்பாகவே இருந்தன. பின்பு தங்களுடைய குடும்பங்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் கொடுக்க ஆரம்பித்தார்கள். மற்றும் சில பாளைகளை அவ்விதம் அறுத்து பால் வடியச்செய்தார்கள். பின்பு, இதற்கு கற்பகப் பால் என்றும், மது என்றும் நாமம் ஏற்படுத் தினார்கள். அதன் பிறகு, இவ்விடயம் அங்கங்கே தெரிந்து இவ்விதம்எல்லோர்களும் அவரவர்கள் மரத்தில் பாளைகளை அறுத்து அதில்வடியும் பாலைச்சாப்பிட ஆரம் பித்தார்கள். இவ்விதமாக அவ்வூரெங்கும் பரவிப் பின்பு மற்ற ஊர்களிலும் பரவியது. எல்லோர்களும் இவ் விதம் செய்து சாப்பிட ஆரம்பித்தார்கள் இது மது வென்றும், கற்பகப்பால் என்றும், பிராமணர்களும் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஒருநாள் ஒரு குடியானவன் அப்பாலைக் காலையில் சாப்பிட்டுவிட்டு, மீதியை வேலை செய்யும் இடத்திற்கொண்டுபோய் வைத்திருந்து பின்பு தாகமும், பசியும் ஏற்பட்ட மத்தியான வேலையில் சாப் பிட்டான். அது புளிப்பாகவும், சிறிது கெட்ட வாடை யாகவும் இருந்தும் கவனிக்கவில்லை. அதன் பிறகு அவன் போதையினால் மயங்கிக் கீழே விழுந்து, எழுந்திருந்து ஒரு உற்சாகமாக ஆடியும் பாடியும் பின்பு, மதமதப் புடன் வீடுவந்து சேர்ந்தான். இவன் நிலைமையை

யறிந்த மற்றவர்கள், ஏன் இப்படி இருக்கின்றாய் என்று வினவியபோது நடந்த விடயங்களைக் கூறினான். இதைக் கேட்ட மற்றவர்களும் ஆச்சரியமுற்று, அவ்விதம் அப் பாலை நேரம் சென்று சாப்பிட ஆரம்பித்தார்கள். அத ஞல் மயக்கமும், போதையும், உற்சாகமும் ஏற்படுவதை யுணர்ந்து, பின்பு தொழிலாளர்கள் எல்லோரும் சாப் பிட ஆரம்பித்து எங்கும் இவ்விதம் பரவி, அதிக போதையினுல் மயங்கி விழுந்து கிடப்பதும், அறிவிழந்து கண்டபடி புலம்புவதும், கெட்ட வசனங்களைப் புகல்வ தும், ஒன்றுக்கொன்று சண்டை யிடுவதும், பெரும் ஓல மிடுவதும், மற்றும் பல தீய காரியங்களைச் செய்வதும் முன்பு பிராமணர்களைக் கண்டால் தூரத்திலேயே நின்று வணங்குவது நீங்கி, மதிக்காமல் அருகில் வந்து கண்டபடி கெட்ட வார்த்தைகள் புகல்வதுமான இத் தகைய நிலைமைகள் ஏற்பட்டன. இதனை யறிந்த பிரா மணர்கள், இது உண்மைதானு? என்று பார்க்க விரும்பி இவர்களும் அவ்விதம் சாப்பிட ஆரம்பித்தார்கள். அவர் களுக்கும் இவ்விதம் ஏற்பட்டதை உணர்ந்து மிகுந்த துன்பமுற்று இதற்கு என்ன செய்வது என்பதாக யோசித்துக்கொண் டிருந்தார்கள். இவ்விதமான நிலை மையை யறிந்த தத்தன் என்பவன் மிகுந்த கவலையுற்று இதற்குக் காரணம் நாமும் நம்முடைய குமாரனும் அல் லவா ? நம்மால் உலகிற்கே பெரும் கேடான நிலைமை ஏற்பட்டது. ஆகையால் இக்கொடிய பாவத்திற்குரிய சண்டாளனுகிய நாம் இவ்வுடம்புடன் இனி இருக்கக் கூடாது எனக் கருதித் தன் மனைவி முதல் எவர்களுக் கும் தெரியாமல் விடத்தை உண்டு இறந்துவிட்டான், இவனை அடக்கம் செய்தார்கள்.

இவன் இறந்ததின் காரணம் இவன் தான் இந்த மது உற்பத்திக்கு ஆதிகாரணமாகவும், இதை எல்லோ ரும் சாப்பிட ஆரம்பித்துப் பரவினவுடன் இதையறிந்த வனதேவதை கோபித்து, முதன்மையாக இவனைக்

கொன்றதாகவும், இனிமேல் சாப்பிடக் கூடிய மற்றவர் களையும் குடும்பத்துடன் கொல்வதாகவும், ஆகையால் இனிமேல் எல்லோரும் சாப்பிடாதீர்கள் என்பதாக வும், அவன் ஒரு சீட்டில் எழுதி வைத்திருந்த தாகத் தாங்களே ஒரு சீட்டை வரைந்து, அதை எல் லோர்களுக்கும் காட்டிப் பயமுறச்செய்து, பிராமணர் களை எல்லாம் சாப்பிடாதமுறையில் ஏற்படுத்தினார் கள். பின்பு பொது மக்களெல்லாம் இதைப் பூராகவும் விடமாட்டார்களே இதை யெப்படி மாற்றுவது என்று யோசித்து அதன்பிறகு அங்கங்கே சென்று பெரிய கூட் டங்கள் ஏற்படுத்தி எல்லோரும் வரும்படிசெய்து, இச் சீட்டையும் நடந்த விடயங்களையும் கூறி, இனிமேல் நீங்கள் எல்லோரும் வருடம் ஒரு முறை அதிகாலையில் உங்களுக்கு வேண்டிய அளவிற்கு மதுவைக் கொண்டு சென்று வன தேவதைக்குப் பக்தியுடன் ஆராதனை செய்து வணங்கிப் பின்பு எல்லோரும் சாப்பிட்டுவிட்டு, அங்கேயே தங்கி இருந்து மாலையில் வீட்டுக்கு வரவேண் டும். மற்ற நாட்களில் எவர்களும் சாப்பிடக் கூடாது. அப்படி மீறிச் சாப்பிட்டால் உடனே வன தேவதை வந்து உங்கள் குடும்பத்துடன் கொன்றுவிடும். மற்றும் அரச தண்டனையும் ஒரு புறம் இருக்கின்றது, என்று பயங்காட்டி, அவ்விதம் ஏற்படுத்தி அம் முறையில் சில காலம் நடந்து வந்தன. பின்பு மாதம் ஒருமுறை ஏற் பட்டது. அதன்பின் அவரவர்கள் படைத்துச் சாப் பிட்டார்கள். நாளுக்குநாள் சிறிது சிறிதாகச் சாப்பிட ஆரம்பித்து, அங்கங்கே நிலவும்படி ஏற்பட்டன. பிரா மணர்களும் மற்றும் சில தொழிலாளர்கள் மட்டும் அறவே விடுத்திருந்தார்கள். அதன் பின் தென் தேசத் திலும், சிறிது சிறிதாக நிலவி எங்கும் பரவின. பின் காலத்தில் பனை மரம்,, ஈச்சமரம் இவைகளிலும் இந்த மதுவென்னும் பாலை இறக்கும்படி ஏற்பட்டன. இதற் குக் கள் என்று பெயர் வழங்கலாயிற்று. (சஞ்சா,

அபின், சாராயம் உற்பத்தி) முன்பு இவைகள் சித்தர்களுடைய காலத்தில் ஏற்பட்டதாகும். அதாவது இவர்கள் சுருதி யுக்தியினாலும், தங்களுடைய தவ சக்தியினாலும் பலவித அந்தரங்கமான ரகசிய விடயங்களையும், பல அரிய தொழில் களையும் மற்றும் சீவர்களின் சரீரப் பிணிகளின் நிமித்தமாக அநேக பச்சிலை மூலிகைகளையும் வேர் முதலிய சரக்கு களையும் பலவித பட்டைகளையும் ஒவ்வொரு வியாதிகளுக்கு ஔடதமாகக் கண்டு பிடித்த காலத்தில் கஞ்சாவை போதை மூலிகையாகவும் இத்துடன் சில சரக்கு வகைகளையும் சேர்த்துக் கிண்டிய லேகியத்தை அபினாகவும் இது மிகுந்த போதை உடையதாகவும் பல பட்டைகளைச் சேர்த்து அதைக் கசாயமாக வைத்து சாப்பிட்டால் உடம்பில் ஏற்பட்டுள்ள சீதளமும் அதனால் ஏற்படும் உபாதையும் நீங்கி உற்சாகமும் சுகமும் ஏற்படும் என்பதாகக் கண்டு பிடித்து அந்த முறையில் செய்து, இவைகளைச் சீதள ஜன்னி வியாதி யுடையவர் களுக்கும். பிரசவமான பெண்களுக்கும், மிகுந்த உபாதை யுடையவர்களுக்கும் கொடுத்துப் பயன்படுத்தப்பட்டது. பின் காலத்தில் அத்துடன் இன்னும் பல மூலிகைப் பட்டைகளையும் முறைகளையும் சேர்த்து அதிகப் போதை யுடையதாய்ச் செய்து லாகிரி என்னும் மயக்க வஸ்துவாக உபயோகிக்க ஆரம்பித்து எங்கும் நிலவிப் பின்பு அவரவர்கள் பிரியம்போல் செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். பின்பு அரசர்களால் கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. அதன் பின்பு மது என்பது கள் என்றும், லேகியம் அபின் என்றும், கசாயத்தை சாராயம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இந்த கசாயம் முதலியவைகளையே சித்தர்கள் மற்ற தீவுகளாகிய தேசங்களிற் சென்று சிர்திருத்திய காலத்திற் அங்கே மிகுந்த குளிர்தேசமானதால் அவர்களுக்கு இது அவசியம் என்பதாகக் கருதி, இம்முறையை எல்லோர்களுக்கும் தெரிவித்து, அடிக்

கடிசெய்து சாப்பிடும்படியாகச் செய்து, மற்றும் தலை முதல் பாதம்வரை முழுதும் தகுந்த கவசம் உடை அணிந்து கொள்ளும்படியாகவும் ஏற்படுத்தினர்கள். பிற்காலத்தில் இதன் மூலமாக தங்களுடைய யுக்தியினுல் திராட்சை பழம் முதலியதால் பிராந்தி, ஒயின், ஜின் முதலிய அதிகப் போதையுள்ள வஸ்துக்களாக செய்யும்படியாக ஏற்பட்டனவாகும்.

முன்காலத்தில் பொது மக்களிற் சிலர் தங்களுக்குப் பெண் குழந்தைகள் அதிகமாக ஏற்பட்டால் அதில் ஒரு குழந்தையை தேவாலயத்திற்கு அற்பணமாக பொட்டு கட்டிச் சிறு வயதிலேயே அங்கே சேர்த்து விடுவார்கள். மற்றும் சிலர் பிரார்த்தனையின் மூலமாக அப்படிச் செய்வதும் உண்டு. அதாவது பசுமாடுகளைச் சூலக் குறியிட்டு ஆலயங்களுக்கு விடுவதுபோன்று அம்முறையில் இவ்விதம் நடந்துவந்தன. அவர்களுக்கு வேண்டிய உணவு உடை முதலிய எல்லாப் பாதுகாப்பும் தேவாலயத்திலிருந்தே அவ்வதிகாரிகள் கவனித்துக்கொள்வது மற்றும் அன்பு பக்தி உடைய பல பொது மக்களும் அவர்களுக்கு வேண்டியது அளிப்பதும் உண்டு. இவர்கள் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு. ஆலயங்களைச் சுத்தி செய்வதும், தண்ணீர் தெளிப்பதும், கோலமிடுவதும், பின்பு புட்பம் தொடுப்பதும், அதன் பின் அன்பு பக்தியுடன் கடவுளை வணங்குவதும் இவ்விதம் மாலையிலும் செய்வார்கள். இதுவே இவர்களுக்குப் பணியாக ஏற்பட்டு, இவர்களுக்கு தேவர் அடியாள் என்ற பெயரும் ஏற்பட்டிருந்தன. அதாவது தேவனுகிய கடவுளுக்கு அடிமையாக இருந்துதிருப்பணிகள் செய்யக்கூடியவர்கள்.என்பதாக ஏற்பட்டு அங்கங்கே நடந்துவந்தன. எல்லோர்களும் இவர்களிடத்தில் பயபக்தியாகவும், மிக அன்பாகவும் இருந்து வந்தார்கள். அதன் பிறகு பக்தி ரசமான சில

தேவடியாள் என்னும் தாசிகள் உற்பத்தி.

பாடல்களைக் கற்றுக்கொண்டு பூசை முதலிய ஆராதனை கள் நடக்கும் பொழுது மிகுந்த அன்பாகவும், உருக்க மாகவும் பாடிவந்தார்கள். இவ்விதமாக இரவும் பகலும் கடவுளுடைய திருப்பணியிலும், சிந்தனையிலும் ஈடுபட் டுத் தங்கள் வாழ்நாளைக் கழித்துக்கொண்டு பிரமச்சா ரிகளாய் துறவிகளைப்போல் வைராக்கியமாகவே இருந்து வந்தார்கள். இப்படியாக வெகு காலம் வரை யில் இருந்து அதன் பிறகு, பூசை செய்யும் பிராமணர் கள் இவர்களிடம் நேசிக்க ஆரம்பித்தார்கள். பின்பு, இதையறிந்த ஆலய உத்தியோகஸ்தர்கள் நேசிக்க ஆரம் பித்தார்கள். பின்பு நாளுக்கு நாள் செல்வந்தர்களும் மற்ருேர்களும் நேசிக்க ஆரம்பித்து, அவர்களுக்குத் தனித்தனி வீடுகளும் ஏற்பட்டு, அவர்களுக்கு ஆண் பிள்ளை பிறந்தால் மேளம் வாசிக்கவும், இன்னும் ஆலய ஊழியத்திற்கும் ஏற்படுத்திப் பெண்கள் பிறந்தால் ஆலயத் திருப்பணி செய்யவும் ஏற்படுத்தினர்கள். பெண்கள் முன் நிலைமை கெட்டுப் பலவிதமான ஆடை ஆபரணங்களும், அலங்காரங்களும் ஏற்பட்டு, ஆடல் களும் கற்றுக்கொண்டு ஆலயங்களில் நடிக்க ஆரம்பித் தார்கள். பின்பு, இவைகளை யெல்லாம் அறிந்த பெரி யோர்கள் யோசித்து இவ்வித தீய வழிகளில் ஈடுபட் டுள்ள இப்பெண்கள் இனிமேல் ஆலயத் தொண்டு செய்யக்கூடாது என்று மறுத்தார்கள். இதையறிந்த பிராமணர்களும், உத்தியோகஸ்த்தர்களும் இன்னும் இப்பெண்களிடத்தில் அபிமானமுள்ள மற்ருேர்களும் ஒன்றுசேர்ந்து இவர்கள் பணித்தொழில் செய்ய வேண் டாம், ஆலயங்களில் பூசை முதலியவைகள் நடக்கும் போது சுத்தமாகவந்து, ஆடல் பாடல் செய்துவரட்டும் என்றுகூறி, அவ்விதம் ஏற்படுத்தினர்கள். அது முதல் அவ்விதம் நடந்து பின்பு வரவர அது ஒரு வகுப்பாக அபிவிருத்தி யடைந்து தேவடியாள் சாதி யென்றும், மேளக்காரச் சாதியென்றும், அவர்களுக்குப் பொது

மகள் என்றும் அதாவது எல்லோர்களுக்கும் பொது வானவர்கள் என்றும், தாசி என்றும் அதாவது தா= தலையைப்போன்று மேன்மையாக இருந்து, சி=நாயைப் போன்று விரும்புவர்களுக் கெல்லாம் பொருளுக்காக உடன்பட்டுக் கூடியவர்களென்றும் ஏற்பட்டன. இப் பெண்கள், முன்னிருந்த நிலைமை கெட்டு தீய வழிகளில் ஈடுபட்டவுடனே இதனை யறிந்த பொது மக்கள் ஆல யத்திற்கு பெண் குழந்தைகளைத் தொண்டு புரிய அற் பணம் செய்வதை நிறுத்தி விட்டார்கள். முன் காலத் தில் விபசாரம் என்பது ஏகதேசமாக இருந்து பின் இவர்களிலேயே நிரந்தரமாக ஏற்படலாற்று.

ஆதியிற் கடவுளை அருவமாகவும், ஏக வடிவமாக வும், பாவித்துப் பூசிக்கப் பெற்றுப் பின்பு, ரூபாரூப மாகிய இலிங்க வடிவமாகப் பாவித்துப் பூசிக்கப்பெற்றுப் பின்பு, விஷ்ணு மத முதலிய மதங்கள் உற்பவித்து அதன் பிறகு உருவகமாக விஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர், பிர்மா, தெட்சணாமூர்த்தி, பைரவர் முதலிய பல மூர்த்திகளையும் பூசிக்கப் பெற்றி ருந்தனவாகும். பின்பு, வேதப் பிராமணர்கள் யாகங் களைச் செய்யும் பொழுது, அதற்கு அதி தேவதைகளாக இந்திரன், அக்கினி, வருணன், வாய்வு, சூரியன் முத லிய பல தேவதைகளை ஏற்படுத்தினார்கள். பின்பு, பல துட்ட தேவதைகளை ஏற்படுத்தினார்கள். அப்படி நிலவி யிருந்தன. மற்றும் நமக்குப் பலவித உதவிகளைச் செய்து காப்பாற்றக்கூடிய உத்தமர்களை யெல்லாம் எப்படித் தெய்வமாக பாவித்து அன்பு பக்தியுடன் நன்றி பாராட்டு கின்றோமோ அதைப் போன்றே சர்வ ஆன்மகோடிகளையும் பகிர்முகமாக ரட்சித்துக் காப் பாற்றக்கூடிய சூரியன், சந்திரன் ஐம்பூத முதலானவை களையும் தெய்வமாகப் பாவித்து, எல்லோர்களும் பூசிக் கும் நிமித்தமாக ஒவ்வொரு வடிவமாக ஏற்படுத்தி,

உலகில் பல தேவதைகள் உற்பத்தி.

சூரிய பகவான் என்றும், சந்திர பகவானென்றும், அக்கினி பகவானென்றும், வாய்வு பகவானென்றும், மேகத்திற்கு வருண பகவானென்றும் தண்ணீருக்கு கங்கா தேவி யென்றும், பூமிக்கு பூமாதேவி யென்றும், ஆகாய வாணி யென்றும், தானியங்களையும், பொன்னையும், இலட்சுமி யென்றும், கல்வியை சரஸ்வதி யென்றும் பல நதிகளையும், பல நாமங்களுடன் பெண் வடிவமாக ஏற்படுத்தி பூசிக்கப் பெற்றூர்கள். அதன் பிறகு, வரவர காளி, கருப்பன், முனியன், மாரியம்மன், மாடன் முதலிய அநேகம் துட்ட தேவதைகளையும் வடிவமாக ஏற்படுத்தி அங்கங்கே பலவித முறையில் மது மாமிசம் பலி முதலியவைகளுடன் பூசிக்கப் பெற்றதாகும்.

மகா கணபதிக்கு யானைமுகம் உற்பத்தியின் உண்மை விளக்கம்.

முன் காலத்தில் மகாமேரு பருவதத்தின் பக்கத்திலுள்ள ஒரு காட்டகத்தில் மகத்து என்னும் ஒரு முனிவர் ஆசிரமம் ஏற்படுத்திக்கொண்டு, தன் மனைவியுடன் தவம்செய்து வந்தனர். ஒரு நாள் வழக்கம் போல் அதிகாலையில் குளத்திற்குச் சென்று ஸ்நானம் ஜெபம் தபம் முதலிய கருமங்களை முடித்துக்கொண்டு, பின்பு இலை பறிக்கும் நிமித்தமாக அக்குளத்திற்கு அப்பால் சிறிது தூரம் சென்றனர். அங்கே ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் சம்போகம் செய்து கொண்டிருப்பதை யறிந்து உற்று கவனித்தார். அதை உற்று நோக்க நோக்க இவருக்கும் காம இச்சையானது மேன்மேலும் பெருக்குற்று, சகிக்க முடியாதவராய் அதிவேகமாக ஆசிரமத்திற்கு ஓடிவந்து தன் மனைவியைக் கலவிக்காக வேண்டினர். அதனை யறிந்த மனைவியானவள் திடுக்கிட்டு இது என்ன மிருகத்தன்மையும், அசுரத்தன்மையுமாக இருக்கின்றதே என்று இன்னும் பலவிதமாகக் கூறி மறுத்தனள். முனிவர் மீண்டும் பல தொந்தரவு

கள் செய்து வற்புறுத்தலாக சம்போகம் செய்தனர். இவர்களுடைய திருஷ்டியின்படி அவளுடைய கர்ப்பத்தில் மனித வடிவமும் யானை முகத்தோடுங் கூடிய ஒரு ஆண் குழந்தை உற்பவித்தன. இதனைக் கண்ட அவ்விருவரும் வெட்கமும் பயமும் அடைந்து ஐயோ உலகம் அறிந்தால் பரிகசிக்குமே இதற்கு என் செய்வது என்பதாக பலவிதம் யோசித்து பின்பு அவர் அக்குழந்தையைத் தூக்கிச் சென்று, அக்காட்டிற்கு அப்புறத்திலுள்ள ஒரு கிராமத்தின் வழி பாதையில் ஒரு மரத்தடியில் அமர்த்தி பின்பு வந்துவிட்டனர். பின்பு அவ்வூரில் ஒரு குடியானவன் அக் குழந்தையைக் கண்டு, மிகவும் ஆச்சரியமுற்று இது என்ன யானையின் கன்றோ அல்லது மனிதர்களுடைய குழந்தையோ என்பதாக யோசித்து தூக்கிச் சென்று அவ்வூரிலுள்ளோர்களுக்கு காண்பித்தான். எல்லோர்களும் கண்டு வியப்புற்று, இது எதுவாயிருப்பினும் சரி, குழந்தை யானபடியால் நீயே வளர்த்து வருவாய் என்பதாகக் கூறினார்கள். அவ்விதமே அக் குடியானவன் வளர்த்து வந்தான். அக் குழந்தையானது மிருகத் தன்மையும், அசுரத் தன்மையோடும் கூடியவனாய் அதற்குரிய தீய நடத்தைகளையுடையவனாகவே இருந்து, பின்பு பருவமுற்றவுடன் மிகுந்த கொடிய காரியங்களைச் செய்து வந்தான், இவனைக் கண்டால் எல்லோரும் அஞ்சும்படியான முறையில் இருந்துவந்தன. இதனை யறிந்த அவ்வூர் அரசன் இவனைக் கொண்டு வரும்படி செய்து, இவனுடைய வடிவத்தைப் பார்த்து ஆச்சரியமுற்று, பின்பு இவனைப் பலவித கடுமையான தண்டனைகள் செய்து, இனிமேல் என்னுடைய தேசத்திற்குள் இருக்கக் கூடாது என்பதாக கூறி யனுப்பினான். பின்பு, இவன் மிகுந்த துக்கமுடன் காட்டையடைந்து அங்கே வசித்து வந்தான். ஒரு நாள் தற்செயலாக மகத்து என்னும் முனிவரைக் கண்டான். இவனைக் கண்ட முனிவர் தன்

னுடைய மகன் எனத் தெரிந்து பயத்துடன் தெரியாத வர்போல் நீயாரென வினவினர். அப்பொழுது அவன் அவரை வணங்கி, நான் பக்கத்திலுள்ள ஊரில் ஒரு குடியானவன் மகன் என்றும், பின்பு நடந்த விடயங் களையும் தெரிவித்து இனிமேல் நீங்கள்தான் என்னை யாதரிக்க வேண்டுமெனக் கூறினன். அதனைக் கேட்ட முனிவர், அடே நான் சொல்லும் பிரகாரம் மேருவின் சாரலில் சென்று, அங்கே ஈசுவரனை நோக்கித் தவம் செய்து உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்று சுகமாக வாழக்கடவாய் என்பதாகக் கூறி, தவத்தின் வழிகளை யும் தெரிவித்து அனுப்பினர். பின்பு, அவ்விதமாகவே அவன் அவ்விடம் சென்று வெகுகாலம் வரையில் கடுமை யான தவத்தைச் செய்தான். பல இடையூறுகள் ஏற்பட் டும் விடாமற் செய்துவந்தான். பின்பு ஈசுவரனுடைய தெரிசனத்தைக்கண்டு வணங்கிநின்றபொழுது, உனக்கு என்னவரம் வேண்டுமென்று ஈசுவரன்கேட்டனர். அவன் எவர்களாலும், எவ்வாயுதங்களாலும், சாவில்லா மலும் என்னை எதிர்ப்பவர்கள் பலம் பூராவும் எனக்கு வரவேண்டு மென்பதாகவும், நான் விரும்பும் உலகங் களுக்குச் செல்லும்படியான தன்மையும், மற்றும் எப் பவும் சிரஞ்சீவியாக இருக்கக்கூடிய வரமும் வேண்டு மெனக் கூறினன். அதனைக்கேட்ட ஈசுவரன் முன் கூறிய வரங்களை அளித்துப் பின்பு அடே உலகிற் தோன் றினல் அழிவது கிரமம். ஆகையால் நீ யெப்பவும் இருக்கமுடியாது என்பதாகக் கூறினர். இதைக் கேட்ட அவன் அப்படியானல் என் வடிவம் போன்றவன் எவ னுகிலும் என்னைப் பகைத்தால் அவனல் இறக்கக் கட வது என்பதான வரத்தையாவது கொடுக்கும்படி கேட் டான். சரி அப்படியே அளித்தோமென்று கூறி மறைந் தருளினர். அதன் பிறகு அவன் மிகுந்த களிப்புடன் அக்காட்டை விட்டு நீங்கி, முன் தன்னைத் தண்டித்த அரசனிடம் வந்து தன்னுடன் யுத்தத்திற்கு வரும்படி

அழைத்தான். அரசனும் ஒப்புக்கொண்டு சேனைகளுடன் யுத்தம் செய்தான். பின்பு, அவ்வரசனைக்கொன்று அத்தேசத்திற்கு தானே அரசனாக ஏற்பட்டு மற்றும் எல்லா அரசர்களையும், அங்கங்கே சென்று யுத்தம் செய்து வெற்றிபெற்று, உலக முழுதும் தனக்குக் கீழ்ப் படுத்திக்கொண்டு கயமுகா சூரன் என்கிற நாமமுடன் விளங்கினான். மற்றும் தன் வடிவம் போன்ற குழந்தைகள் பிறந்தால் கொன்று விடும்படி உத்தரவுசெய்து இருந்தான். ஒரு நாள் நாரதர் பூலோக சஞ்சாரம் செய்யும்பொழுது இவனுடைய அற்புத விடயங்களைக் கேள்வியுற்று ஆச்சரிய முடையவராய் இவனைக் காணவேண்டுமென்பதாகநினைந்து இவனிடம்சென்றனர். இவரைக் கண்ட கயமுகன் ஆசனத்தில் அமரும்படி செய்து நீர் யார்? என்று வினவினான். அதைக்கேட்டு நான் நாரதர் என்றும், நான் எல்லா உலகங்களிலும் சஞ்சரிப்பேன் என்பதாகவும் கூறினார். அப்படியானால் நீர் பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலியோர்களை நாளைய தினம் என்னிடம் வரும்படியாகக் கூறவேண்டும். அப்படி அவர்கள் வராவிடில் நானேவந்து அவர்கள் எல்லோர்களையும் கட்டி அடித்து இவ்விடம் கொண்டுவந்து சிறையில் அடைத்து விடுவேன் என்பதாகவும் கூறி, மற்றும் நீர் இவ்விதம் தெரிவிக்காவிடில் உன்னையும் அவ்விதம் செய்வேன் என்றும் தெரிவித்தான். அதைக் கேட்ட நாரதர் அவ்விதமே தெரிவிக்கின்றேன் என்பதாகக்கூறி அவ்விடம்விட்டுநீங்கித் தேவேந்திரன் முதல் பிரமா, விஷ்ணு முதலியவர்களுக்கும் இங்கே நடந்த விடயங்களையும் அவன் பெற்றுள்ள வரத்தையும், அவனுடைய பலம் முதலிய நிலைமைகளையும் கூறினார். இவைகளைக் கேட்ட எல்லோர்களும் மிகுந்த துன்பமுற்று, இதற்கு என்ன செய்வது என்பதாக யோசித்துப் பின்பு, ஈசுவரனிடத்தில் வந்து இவ்விடயங்களைத் தெரிவித்து மிகுந்த துன்பமுடன் வணங்கி நின்றார்கள். இதனைத் திருச்செவி

யுற்ற ஈசுவரன் இதற்காகத் துக்கிக்கவேண்டாம் நடப்பது நடைபெறும், நீங்கள் உங்களுடைய தானத்திற்குச் செல்லுங்கள் என்பதாகக் கூறி அனுப்பினர். அதன் பிறகு, இவர்கள் தன்னிடம் வராததை யறிந்த கயமுகா சூரன் மிகுந்த கோபமுற்றவனாய் உடனே புறப்பட்டுத் தேவலோகம் வந்துசேர்ந்தான். ஆனால் அவன் சேனைகளுடன் சென்று யுத்தம் செய்வதில்லை தான் ஒருவனாகவே நின்றுதான் யுத்தம் செய்வது அவனுடைய பழக்கம். இவன் அங்கே யுத்தத்திற் குரிய ஒரு இடத்தில் நின்றுகொண்டு இந்திரன் முதல் எல்லோர்களையும் யுத்தத்திற்கு வரும்படியாகச் சொல்லியனுப்பினான். இதனை யறிந்த இந்திரன் முதல் எல்லோர்களும் பயந்து மிகுந்த துக்கமுடன் என் செய்வ தென்பதாக யோசித்துத் தங்களுடைய இல்லங்களை பூட்டிக்கொண்டு இருந்தார்கள். இப்படியிருக்க, இவ்விடயங்களை யெல்லாம் அறிந்த மகா கணபதியானவர் திருவுள்ளமிரங்கி எவர்களுக்கும் தெரியாமல் யானை முகத்தோடுங் கூடிய ஒரு சிறுவன் வடிவமாக கையில் ஒரு பாசக்கயிற்றை மட்டும் வைத்துக்கொண்டு கயமுகா சூரனின் முன் சென்றார். அவன் இவரைக் கண்டு, ஆச்சரியமுற்று அடா குழந்தையே நீ எங்கு வந்தாய்? என்னுடைய வடிவம் போன்றிருக்கின்றாயே நீ யார்? என்பதாகக் கேட்டான். அதைக் கேட்டு நீ யார்? எதற்காக இங்கே வந்தாய் என்றனர். அதற்கு அவன் யான் கயமுகா சூரன் என்றும், இந்திரன் முதல் எல்லோர்களையும் கட்டித் தன்னிருப்பிடம் கொண்டுபோக வந்தேன் என்றும் கூறினான். அதனைக் கேட்டு, நான் உன்னை இதோ என் கையிலிருக்கும் பாசத்தாற் கட்டிக் கொண்டுபோக வந்தேன் என்று கூறினர். இதனைக் கேட்ட கயமுகன் பெரு நகைப்புடன், அடே சிறுவனே என்னை யாரென அறிந்தாயில்லை. இதோ என்னைக் கட்டுப் பார்க்கலா மென்றான். இதனைக் கேட்ட மகா கணபதியானவர் அவனுக்கு எதிர்முகம்

நோக்காது திரும்பி நின்றுகொண்டு, தன் கையில் இருக்கும் பாசக்கயிற்றை அவன் கழுத்தில் விழும்படியாக பின்புறத்தில் வீசி எரிந்தனர். அவன் கழுத்தில் இக்கயிறு வீழ்ந்தவுடன் தன் பலமும், தான் செய்வது இன்னதென்றும் தெரியாது திகைத்து நின்றான். உடனே அவனைத் தன் முன்புறத்தில் வரும்படியான முறையில் அதிவேகமுடன் இழுத்து அவனுடைய கழுத்தின் பிடரிமீது குதித்து ஏறிக்கொண்டார். இவர் ஏறினவுடன், அவனுக்குத் தாங்கமுடியாத பிர்மாண்டமான பாரமாகத் தோன்றப்பெற்றுத் தாங்க முடியாவண்ணம் குனிந்து இவருடைய கால்களைப் பிடித்துக் கீழே அடிப்பதற்கு மிகுந்த கோபமுடன் எத்தனித்தான். உடனே இவர் தன்னுடைய கொம்பில் ஒன்றை பாதியில் ஒடித்து அங்கென்ற பிரணவ உச்சரிப்புடன் அவனுடைய செவியிற் குத்தினர். உடனே அவன் பெரும் சப்தமுடன் கத்தினன். இச்சப்தம் கேட்டவுடன் தேவர்கள் முதலாக எல்லோர்களும் பயந்து தங்கள் தங்கள் இல்லங்களை நன்றாகப் பூட்டிக்கொண் டிருந்தார்கள். பின்பு, தன்னுடைய வலது பாதத்தால் அவனுடைய மத்தகத்தின் மீது தாக்கினர். உடனே அவன் குப்புத்த வண்ணமாகவே பூமியில் வீழ்ந்து இறந்தான்.

அதன் பிறகு அந்த ரூபத்தை விடுத்து, முன் போன்ற வடிவமுடன் தன்னுடைய தானத்தில் வந்திருந்தனர். இவன் இறந்ததை அறியாமல் எல்லோர்களும் இதோ வந்துவிடுவான், வந்துவிடுவான் என்பதாகப் பயந்துகொண்டிருந்து பின்பு அவன் இறந்துகிடப்பதையறிந்து எல்லோர்களும் மிகுந்த களிப்புடன் அவனைப் போய்க் கண்டு இவனைக் கொன்றது யார்? என்பது தெரியாமல் பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாக எல்லோர்களும் ஈசுவரனிடம் வந்து, இவ்விடயங்களைத் தெரிவித்து வணங்கி நின்றார்கள். அதனைச் செவியுற்ற பரமன் புன்முறுவலுடன் மகா கணபதியை விசாரிக்கும்

படி சுட்டிக்காட்டினூர். அக் குறிப்பை அறிந்து அவரை வினவியபோது நாம்தாம் கொன்ருேம் என்றனர். இதனைக் கேட்டவுடன் எல்லோர்களும் அளவிறந்த சந்தோசத்துடன் வணங்கி, எந்த வடிவமுடன் எப்படிக் கொன்றீர்கள் என்பதாகக் கேட்டவுடன் அந்த வடிவத்தையும் காட்டி, நடந்த விடயங்களையும் விபரமாகத் தெரிவித்தார். இதனைக் கேட்டு ஆச்சரியமுற்று எங்களுடைய பயத்தையும், துன்பத்தையும், நிவர்த்திசெய்துள்ள இவ்வுருவமுடன் எங்களுடைய ஒவ்வொரு இல்லங்களுக்கும், குழந்தையும், தெய்வமும் போன்றதாக விருந்திற்கு வரவேண்டுமென்பதாக வணங்கிக் கேட்டபொழுது அவரும் சம்மதித்து அப்படியே தேவலோகம் வைகுந்தம் சத்திய லோகம் இம் மூன்று லோகத்திலும் ஒவ்வொருநாள் நடந்தன. இவரை அழைத்துச் சென்று ஒவ்வொரு வீட்டிலும், ஆண்களும், பெண்களும் மிகுந்த பயபக்தியுடன் தெய்வமாகவும், மிகுந்த அன்புடன் குழந்தையாகவும் பாவித்து, அபிடேக அலங்காரங்களும் தூபதிபங்களும் ஏற்றித் தங்களுடைய மயிடில் அமர்த்திக்கொண்டு, பலவிதப் பண்டு பலகாரங்களையும் பிரசாதங்களையும் ஊட்டினூர்கள். பின்பு நேரமாகக் கூடும் என்பதாக இவரே அவைகளை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து ஒவ்வோர் கவளமாகச் சாப்பிட்டுக்கொண்டு வேகமாகச் சென்ருர். சாவதானமாகக் கொளுக்கட்டை முதலிய பலகாரங்கள் செய்துகொண்டிருந்த பெண்கள் இவர் இவ்விதம் வேகமுடன் வருவதை உணர்ந்து, அவசரமாகப் பெரும் பெரும் மோதகம் போன்றதாகச் செய்து வைத்தார்கள். இவ்விதம் மூன்று நாளும் நடைபெற்றுப் புன்பு எல்லோரும் கணபதியை அழைத்துக் கொண்டு திருக்கைலாயத்தில் பரசிவத்தின் சன்னதியை அடைந்து வணங்கி நின்ருர்கள். பின்பு கைலாயத்திலும் அவ்விதமே ஒரு நாள் விருந்து நடந்தன. பின்பு, தேவர்கள் வணங்கி எங்களைக் காத்தருளிய இந்த வடிவ

மாகவே அமர்ந்து நாங்கள் தினமும் கண்டு தெரிசிக்க வேண்டுமென்பதாகக் கேட்டபொழுது. அவரும் அப்படியே சம்மதித்து அந்த யானை முகத்தோடுங் கூடிய வடிவுடன் அமர்ந்தருளினர். ஈசுவரனும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். பின்பு இவ்விடயங்களை யெல்லாம் நாரதர் மூலமாக அறிந்த அரசர்களும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து, பூவுலகிலும் அவ்விதம் ஒவ்வொரு வீடுகளிலும் அவருடைய வடிவம்போன்று மண்ணினுற் செய்து அவ்வுலகிற் பூசித்த முறையின்படி நான்குநாள் வரையில் குழந்தையாகவும், தெய்வமாகவும் பாவித்துப் பூசிக்கும்படி ஏற்படுத்தினர்கள். அது முதல் இன்றும் நடந்து வருகின்றன. அதுமுதலாக யானை முகமும் தன் கொம்பாகிய சிறு அங்குசமும், பாசக்கயிறும் கொண்ட கரமும், பெருவயிறும் அதாவது எல்லோர்களும் அளித்த பண்டு பலகாரங்களை யெல்லாம் மீதியின்றிச் சாப்பிட்டபடியாலும் மற்றும் கணபதி கனமான-மேன்மையான-பாரமான வயிற்றிள் உந்தியினிடத்தே பதி இருப்பிடமாகக் கொண்டபடியாலும் பெருவயிறுடையதாகவும் அறிகுறியாக அவருடைய வடிவம் விளங்கும்படி ஏற்பட்டன. மற்றும் ஆற்றங் கரைகளிலும், குளத்தின் கரைகளிலும், கிணற்றின் கரைகளிலும் அமைந்திருப்பதின் காரணம், அனுதினமும் காலை மாலையில் ஆண்களும் பெண்களும் அவ்விடத்திற்கு அவசியம் போகும்படி இருக்கின்றபடியால் இவருடைய ஞாபகமும் ஏற்பட்டு சரீர சுத்தியுடன் பணியக்கூடும் என்பதாகவும் மற்றும் அதுவே சுத்தமான இடமென்பதாகவும் யோசித்துப் பெரியோர்கள் ஏற்படுத்தினர்கள். இப்படி இருக்கப் பலவித புராண இதிகாசங்களிற் பலவிதமாகக் கூறப் படுகின்றன. அப்படி நடந்தது மன்று, பொருத்தமு மன்று, நிற்க மற்றும் இதற்கு அறி குறியாக உலகில் யானைகளின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டினல் தன்னுடைய பலம் தனக்குத் தெரியாமல் படிந்து

கொள்வதும், பிடரியில் ஒருவர் ஏறினவுடன் பெரும் பாரம் போன்று தோன்றப்படுவதும், காதில் சிறு அங்குசத்தால் குத்தியவுடன் பெரும் சப்தமுடன் கத்துதும் இப்பொழுதும் நடந்துவருகின்றது. அங்குசமென்பது ஒரு அங்குல வடிவமுள்ள சிறிய ஆயுத மானபடியாலும் மற்றும் பிரணவ அட்சரத்துடன் கூடிய அங் கென்ற தொனியுடன் அவர் அவன் காதில் ஓர் அங்குலம் வரை பதியும்படியாகக் குத்திய படியாலும் கொல்லுவதற் கியலாது பயங்காட்டக் கூடியதான ஆயுத மானபடியாலும் இது அங்குசமெனப்படுகிறது. பிள்ளையார் சதுர்த்தி என்பது=பிள்ளை யென்றால் குழந்தையாகவும், யார் என்றால்=மேன்மை வாய்ந்த பெரியோராகிய காக்கும் தெய்வ மென்பதாகவும், சதுர்த்தி யென்றால்=நான்கு நாள் கொண்டாடப்பட்ட உற்சவமாகவும் பொருள் கொண்டு வழங்கப்பெற்று நடந்து வருகின்றது.

பிரணவத்தின் இரகசியம்.

இனிப் பஞ்சாக்கரத்தின் உள்ளிருப்பதும் பஞ்சமந்திர அட்சரங்களுக்கும், மற்றும் எல்லா மந்திர அட்சரங்களுக்கும் முதன் மையாக ஏற்பட்டுள்ள பிரணவத்தின் உண்மை விளக்கம். இதை பிரணவம் என்றும், ஓங்காரம் என்றும், மூலம் என்றும், ஆதி என்றும் விளங்கக்கூடும். பிரணவ மென்பது, பிர=அதாவது முதன்மையான தென்றும், ஆதியானது என்றும், காரணமான தென்றும், பொருளாகும்; ணவ=என்பது அண்டங்கள் முதல் நவ விதங்களாகத் தோன்றச் செய்வதாகும். ம்=என்பது கடைசி முடிவாக உலகங்கள் முதற் தோன்றியுள்ள சர்வமும் தன்னிடத்தே ஐக்கியப் படுத்திக் கொள்ளக் கூடிய குணம் குறி அற்ற மாபெரும் பொருளாகும். ஓங்கார மென்பது ஓ என்ற அட்சரத் தொனியுடன் உந்தியினிடத்தே தோன்றி விரிந்து பின்பு முடிவாக—ம் என்ற அட்சரத்

தொனியுடன் இருதயத்துள் அடங்குகின்றது. ஆகவே, ஓ் வென்ற அட்சர இடம் உந்தியும்—ம்-என்ற அட்சர இடம் இருதயமாகும். அதாவது, சர்வ உற்பத்தியும் உந்தியினிடத்தே இருந்து உற்பவிக்கின்றது. பின்பு மனம் இவைகளை விளங்கச் செய்கின்றது. பின்பு எல்லாவற்றையும் மறைத்துக் கொள்ளுகின்றது. அவை யெப்படி யெனின்—பவமுறும் வினைக்கு மனமே காரணமாக இருந்து உற்பவிக்கச்செய்து, பின்பு மனமே அவைகளை பற்பலவாக அறியச் செய்து, பின்பு மனமே அவைகளையெல்லாம் அடக்கிக் கொள்ளுகின்றது. அதாவது மனமுண்டேல் உலக முதல் எல்லாம் புலப்படுவதும் இன்ப துன்பங்கள், விருப்பு வெறுப்பு, பேதாபேதம் முதலாக எல்லாம் ஏற்படுவதும் மற்றும் மிகச் சூக்குமமான வடிவமாக இருந்தும் தன்னுள்ளிருந்து அளவு கடந்த விடயங்களை உற்பத்தி செய்வதும், அவைகளையெல்லாம் வைத்துக் கொள்வதும் மீண்டும், வெளியிடுவதுமாக இருக்கின்றன. மனம் ஒடுங்கினுல் சர்வமும் ஒடுங்கி அதனுள் மறைந்து விடுகின்றன. அப்பொழுது சுத்தப் பர வெளியாகவும், ஆனந்த மாகவும் விளங்கப்படுகின்றன. ஓங்காரத்துள் மூன்று அட்சரங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது ஓ. வென்ற அட்சரத்துள் அ. உ. என்ற இரண்டு அட்சரம் உள்ளன. அ—என்பது உற்பத்தியும், உ—என்பது விரிவது அல்லது உலக முதல் எல்லாம் நிலவப் பெறுவதாகும். ம்—என்ற அட்சரம் எல்லாம் அடங்குவதாகும். இதுவே படைப்பு, காப்பு, அழிப்பு என்பதாம். மற்றும் பிரமம் என்பதும் இப்பொருளே ஆகும். அதாவது பிர—என்பது முதன்மையானதும், ஆதியானதும், மகா பெரிதானதும், குணம் குறி இல்லாததும், ம—என்பது தன்னுடைய சொரூபத்தினிடத்தே தன்னுடைய மகா சக்தியினுல் சர்வ அண்டங்களையும் படைத்து நிலைப்பெற்று விளங்கச் செய்விக்கக் கூடியதும், ம்—என்பது தாம் படைத்து

தம்முடைய சொரூபத்தி னிடத்தே விளங்கச் செய்துள்ள சர்வமும் முடிவில் தன் சொரூபத்தினிடத்தே ஐக்கியப்படுத்திக் கொள்வதாம். இத்தகைய நிலைமையை உடைய பொருளானதால் பெரிய பொருளென்றும், பிரமம் என்றும் விளங்கப்படுகின்றன. மற்றும் உலகில் சர்வ வடிவங்களும் உற்பவிக்கும் பொழுதே ஓங்கார வடிவமாகவே உற்பவித்துப் பின்பு நிமிர்ந்து நிலவி மீண்டும் ஓங்கார வடிவமாகவே ஏற்பட்டு அழிவுறுகின்றன. மற்றும் ஓ என்ற அட்சரத்தின் நாதமாகிய தொனி உதித்து முடிவில்லாது விரியக்கூடியதும் ம்—என்ற அட்சரத்தின் நாதமாகிய தொனி முடிவாக அடங்கக்கூடியதாகும்.

ஆருதாரத்தின் உண்மை விளக்கம்.

ஆருதாரத்தின் உண்மை இரகசியம். அவை யாதெனில்:— ஆறு ஆதாரங்களை யுடையதற்கு ஆருதாரமெனப்படும். உலகில் ஏற்பட்டுள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆதாரங்களைக் கொண்டே நிலவுகின்றன. இல்லையேல் நிர்வகிக்க முடியாது. ஆகவே சரீரங்களுக்கும் ஆன்மாவுக்கும் ஆறு ஆதாரங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகள் இல்லாவிடில் இவைகளும் நிர்வகிக்க முடியாது. அதாவது, சரீரத்திற் குரிய ஆதாரங்கள் சரீரத்துள் உந்தி முதல் உச்சியென்னும் மூளை ஸ்தானம்வரையில் ஆறு ஸ்தானங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த ஆறு ஸ்தானங்களும் மிகுந்த சூக்கும மானதாயும், முக்கியமானதாயும் அமைந்துள்ளன. இவைகளின் ஆதரவைக்கொண்டே சரீரம் நிலவுகின்றது. இனி ஆன்மாவுக்குரிய ஆதாரங்கள் யாதெனின், ஆறு அறிவுகளாகும். இவைகள், தூய வெண்மை நிறம் பொருந்தியதாயும், ஒன்றுக்கொன்று மிகமிகச் சூக்குமமாயும், நுட்பமாயும். தேசசுடையதாயும்விளங்குகின்றன. இவைகளுள் ஆருவது அறிவானது எல்லாவற்றிலும் மிகச் சூக்குமமானதாயும் மிகுந்த பிர்காச

முடையதாயும் ஏற்பட்டுள்ளன. இவைகள் ஆறும் ஒன்றுபட்டவுடன் ஞான மென்னும் பேரறிவானது விளங்குகின்றன. இதனுள்ளிருந்தே மேலான பர அறிவானது விளங்கப் படுகின்றன. ஆகவே, ஆன்மாவுக்கு ஆதாரமாகிய ஆறு அறிவுகளும், சரீரத்திற்கு ஆதாரமாகவும் சரீரத்திற்கு ஆதாரமாகிய ஆறு ஸ்தானங்களும், (மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விரக்தி, ஆஞ்சை) இவைகள் ஆன்மாவுக்கு அனுகூலமாகவும் ஏற்பட்டிருப்பதால் பொதுவாக இவ்விரண்டையும் சேர்த்து ஆருதார மென்பதாக விளங்கப்படுகின்றது. மற்றும் சர்வாதாரம் என்பதும் ஏற்பட்டுள்ளன. அதாவது உலகில் ஐம்பூதங்கள் முதலாகச் சர்வ பொருள்களின் ஆதரவைக்கொண்டே இச்சரீரங்களும், ஆன்மாவும் நிலவப்படுகின்ற படியால் சர்வாதார மெனப்படும், மற்றும் பராதாரம் என்பதும் உள்ளன. அவை யாதெனின் மேற்கூறிய சர்வத்திற்கும் காரணமா யிருக்கக் கூடிய ஆதார மெதுவோ அதுப் பராதாரம் எனப்படுகின்றது. மற்றும் ஏகாதாரம் என்பதும் உள்ளன. அதாவது ஆன்மாவானவன் மேற்கூறியுள்ள சர்வ ஆதாரங்களையும் கடந்து இவைகளுக் கெல்லாம் காரணமாயுள்ள ஆதாரம் எதுவோ அது ஒன்றையே ஆதாரமாகக் கொண்டுள்ள நிலையுள் ஏகாதாரம் எனப்படும். மற்றும் நிராதாரமென்பதும் ஏற்பட்டுள்ளன. அவை யாதெனின், ஆன்மாவானவன் ஏகாதாரமும் கடந்து முடிவான நிலையுட்சார்ந்து தனக்கன்னியமாக எதுவுமின்றித் தானே தானாய்த் தன்மயமாய் நிராதாரியாய் நிற்கும் நிலையுள் நிராதார மெனப்படும். ஆகவே இவைகளுள் உலகத்தின் இயல்புக்குரிய சரீரத்திற்கு அனுகூலமாயுள்ள ஆதாரங்களையே ஆருதாரமென விளங்கப் பெற்றுப் பரமார்த்திகமாயுள்ள ஆதாரங்கள் யாவும் மறைவுபட்டு விளங்கப்படவில்லை.

இவ்வாருதாரமே சுப்பிரமணியருடைய வடிவமாக

அமைந்துள்ளது. அதாவது, உலகததன்மைக்குச் சீவர்களுக்குரிய சரீர ஆன்ம சுகத்திற்குப் பிரதிபந்தமாக ஏற்பட்டுப் பலவித துன்பங்களுக்குக்காரணமாக இருந்துள்ள மூன்று அசுரர்களுடன் அவர்களுக்கு அனுகூல மானவர்களையும் அழித்து எல்லோர்களுக்கும் இன்பமளித்த வடிவமாகவும், பரமார்த்திகத் தன்மைக்கு ஆன்மாவிற்குப் பிரதிபந்தமாக ஏற்பட்டுள்ள பவவினை முதலிய பலவிதத் துன்பங்களுக்கும் காரணமாக இருந்துள்ள அஞ்ஞானமென்னும் மூன்று ஆசைகளுடன் முக்குணம், மும்மலம் முதலியவைகளையும், அவைகளுக்கு அனுகூலமானவைகளையும், அழித்து இன்பமுத்தி யளிப்பதாகிய ஆறறிவோடுங் கூடிய ஞான ஒளியாகவும் ஏற்பட்டுள்ளன. சரீரமாகிய வடிவிற்கு ஆறு ஸ்தானங்களாகவும், ஆன்மாவிற்கு ஆறு அறிவோடுங் கூடிய பிரகாசமாகவும் ஏற்பட்டுள்ளன. அதாவது ஈசுவரனுடைய திரிவிழியினின்று ஏற்பட்டுள்ள ஆறு வடிவங்களும் ஈசுவரனுடைய பிரகாச வடிவமாகவே ஏற்பட்டுள்ள ஆறு அறிவுகளாகும். அந்த ஆறு வடிவங்களும் ஒன்றுபட்ட வடிவம். பேரறிவென்னும் மிகுந்த பிரகாசமுடைய மேலான அறிவாகும், பின்பு சத்திவேல் பெற்றதென்பது அதன் செயலால் விளங்கக்கூடிய ஒளிவடிவாய் கூர்மையாகவும், நுட்பமாகவும், உண்மையை விளங்கச்செய்து அஞ்ஞானமென்னும் இருளை அழிக்கக் கூடிய ஞானமாகும். சேவற்கொடியென்பது உலகில் இரவு ஏற்பட்டுப்பின்பு இரவு நீங்கிச் சூரியன் உதயமாகக் கூடிய தருணத்தில் எல்லோரும் விழித்து எழுந்திருக்கும்படி ஞாபகக் குறிப்பாக சேவல் கூவுகின்றது போன்று, அஞ்ஞானமென்னும் இருளில் அறிவாகிய கண் தெரியாது. மோகமென்னும் துயிலில் கனவென்னும் போகத்தில் ஈடுபட்டிருக்கும் ஆன்மகோடிகளைப் பார்த்து, ஞானமென்னும்

ஆறுதாரமும் சுப்பிரமண்ய வடிவமும்.

சூரியன் உதயமாயினன், அஞ்ஞான மென்னும் இருள் நீங்கிவிட்டது, எல்லோர்களும் தெளிந்து எழுந்திருங் கள் என்கிற அறிகுறியாக சேவற்கொடி யுடையதாகும். மயிலின் வாகனமானது முத்தி யென்னும் பதவியில் சேர்க்கக்கூடிய மேலான நிலையாகும். ஒருவனுக்கு மேலான செல்வம் வந்தபோது தாம் விரும்பிய இடங் களை அடைவதற்குத் தகுந்த வாகனங்கள் ஏற்படுவது போன்றும் ஞானமென்னும் ஒப்புவமை யற்ற மேலான செல்வத்தை யடைந்தவுடன் இவன் விரும்பும் இடமா கிய மோட்ச மென்னும் பதவியில் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க கூடிய வாகனமென்றும், மூவாசை முதல் சர்வமும் நீங்கி அப்பாலுள்ள மாபெரும் நிலை யாகும். மற்றும் ஆகாயத்திற் பறந்து செல்லக்கூயடிதும் விமானம் போன்றதும் எல்லோர்களும் விரும்ப கூடி யதும் மற்றும் பாவத்திற்கு முதற்காரணமாயுள்ள சம் போகத் தன்மை யற்றதாகவே இருக்கின்றபடியால் இதனை வாகனமென்பதாக ஏற்பட்டுள்ளன.

திருக்கல்யாணக் கோலமும் இரு சக்திகளும் ஏற் பட்டதாவது, உலகில் ஒருவனுக்கு மேலான செல்வம் ஏற்பட்டபோது அவனுடைய சரீரம் மிகுந்த செழிப் பாகவும் பலவித ஆடை ஆபரணங்களால் அழகுறும் மங்கள வடிவமாகவும் ஏற்படுவதுடன் இடம்பொருள் ஏவல் பலம் முதலிய தன்மைகளும் ஏற்படுவதும், மற் றும் திருமண நிலைமையும் ஏற்பட்டு கிரமமாக இல்ல றத்திற் குரிய ஒரு மாதரை மணம்செய்வதும், பின்பு இச்சையினுல் வேறு மாதர்களை விரும்பிச் சேருவது போன்றும் ஞான மென்னும் மேலான செல்வத்தை யடைந்தவுடன் ஆனந்தமும் தேசசும் நிறைந்த மேலான மங்களவடிவமாக விளங்குவதுடன் உலகில் சீவர்களுக்கு சரீர ஆன்ம சுகத்திற்கு அனுகூலம் செய்விக்கக் கூடிய பெருமை வாய்ந்த தெய்வீக சக்தியும் ஏற்படுகின்றன. அதுவே தெய்வயானை யென்பதும், பின்பு அச்சக்தியைக்

கொண்டு உலகிற்கு நன்மைசெய்ய வேண்டுமென்கிற இச்சையும் விவகாரமும் ஏற்படுகின்றன. அதுவே வள்ளி நாயகி யென்பதாகும். இவைகளே கிரியா சக்தி இச்சா சக்தி என்பனவாம். சமர் செய்ததாவது, உலகில் எப்படி மனோதிடம், பலம், யூகம், முயற்சி, ஆயுதம் இவைகளைக்கொண்டு யுத்தம் செய்து தம் பகைவர்களை வெல்கின்றார்களோ அது போன்று தீவிர வைராக்கியமும் திடமும் முயற்சியும், யூகமும் கொண்டு நின்று, ஞானமென்னும் ஆயுதத்தினால் மூவாசை முதலிய அஞ்ஞானப் பகைவர்களை வென்றதாகும். தேவர்களுக்குப் பதவி யளித்தாவது மூவாசை யென்னும் பகைவனால் தங்களுடைய எதார்த்த பதவியும் சுகபோகமும் இழந்து, பவப் பிணியுற்று, துன்பமுற்றலைந்த ஆன்மாக்களுக்கு மீண்டும் அப்பதவியாகிய முத்தியும் இன்ப போகமும் அளித்ததாகும். கண் என்பது காண்பதற்குரிய பிரகாசமும் மற்றும் அறிவுமாகும். மூன்று அசுரர்கள் என்பது மூவாசை, மும்மலம், முக்குணம் என்பனவாகும். பொதுவாக சீவர்களுடைய சரீரத்திற்கு ஆருதாரம் ஆறு ஸ்தானங்களாக இருப்பது போன்று ஆறு வடிவமாகத் தோன்றி அவைகள் ஒன்றுபட்டு சரீரங்களுக்கு பிரதிபந்தமானவைகளை அழித்து சரீரசுகம் அளிக்கக் கூடியதாகவும், ஆன்மாவிற்கு ஆருதாரம் ஆறு அறிவுகளாக இருப்பதுபோன்று சரீரங்கள் தோறும் ஆறு அறிவுகளாகத் தோன்றி அவைகள் ஒன்றுபட்டு ஆன்மாவுக்கு பிரதிபந்தமானவைகளை அழித்து ஆன்மாவிற்கு பரசுகபோக முக்தியை யளிக்கக்கூடியதாகும் (சுப்பிரமண்யம்) என்பது சுப்=என்றால் பிரகாசமானதும், பிர=என்றால் ஆதியானதும், மண்=என்றால், உலக முதல் எல்லாம் தோன்றி நிலவச் செய்விப்பதும், யம்= என்றால் முடிவில் அவைகளை யெல்லாம் தன் சொரூபத்தினிடத்தே சேர்த்துக்கொள்ளக் கூடியதாம். அதாவது பிரகாச வடிவமாய் முதன்மையாக நின்று, அனைத்

தும் தோன்ற செய்து அவைகளை இரட்சித்து பின்பு தன்னுருவில் சேர்த்துக்கொள்வதாகும். மற்றும் தூலம், சூக்குமம், காரணம் இம்மூன்று வடிவங்களாக நின்றும் தூய்மையும் பிரகாசமும் பொருந்திய அறிவின் வடிவமாகவும் நின்று ஐந்தொழில் செய்விக்கக் கூடிய மா பெரும் பொருளாகிய பிரமம் எனப்படுகின்றது.

ஆதியில் கடவுள் பரசிவ வடிவமாகக் காட்சியளித்த காலத்தில் அவருடைய நெற்றிமுதல் திருமேனியெங்கும் வெண்ணீறு விளங்கித்தோன்றியது. அதன் காரணம் கடவுளுடைய எதார்த்த சொரூபம் பரிசுத்தமான வெண்மை பொருந்திய ஏகவெளியாக இருப்பதின் அறிகுறியாகவும், மற்றும் ஆன்மாக்களின் வடிவங்களும் பரிசுத்தமான வெண்மை நிறம் பொருந்தியதாகவே இருப்பதாலும், அறிவுகளும் இவ்வெண்மை நிறமாகவே அமைந்திருக்கின்ற படியாலும் மற்றும் மூளையும் இந்நிறமாகவே ஏற்பட்டுள்ள படியாலும் மனமும் இந்நிறமாகவே ஏற்பட்டுள்ள படியாலும் இதன் உண்மைகளை அறிந்துகொள்ளும் பொருட்டாகவும், மேலும் தன் வடிவம் முடிவில் எல்லாவற்றையும் தகிக்கக் கூடிய மகா அக்கினி வடிவாகவும் இருப்பதால் அதிலிருந்து ஏற்படக்கூடிய வெண்ணீறு என்கிற அறிகுறியாகவும், சீவர்களின் சரீரங்களுள் உதிராக்கினி, கோபாக்கினி, ஆனந்தாக்கினி, துக்காக்கினி, காமாக்கினி, யோகாக்கினி, ஞானக்கினி என்பதாக இன்னும் பலவித அக்கினிகள் ஏற்பட்டுள்ளன. அவைகளுக்கு விறகு சிந்தனையே யாகும். எந்தெந்தச் சிந்தனைகளை எவ்வளவுக் கெவ்வளவு சிந்தித்தார்களோ அவ்வளவுக் கவ்வளவு அது அது பற்றி எரியும் அக்காலத்திற் சரீர முழுதும் அம்மயமாகவும் கண்களில் நீர் வடிவதும் மன முதல் இந்திரியங்களெல்லாம் அச் சிந்தனைக் குரியதாகி விடுகின்றன. சிந்தனையாகிய விறகு இல்லாவிடில்

திருவெண்ணீற்றின் உண்மை இரகசியம்.

அவிந்து ஒடுங்கிவிடும். ஆகவே இதனைப்போன்று மன மானது பஞ்சாட்சரமென்னும் பரசிவ நாம மந்திரத்தை தியானிப்பதாகிய ஓய்வில்லாத அச்சிந்தனையிலேயே ஈடு பட்டு சிந்திக்கச் சிந்திக்க உலக முதல் சர்வமுமற்று மனமும் சிந்திப்பதாகிய பரசிவ நாமமென்னும் விறகும் அற்று முடிவில் ஞானக்கினியால் தகிக்கப்பட்ட விற கின் சாம்பலாகிய பஸ்பமே மிஞ்சப்பட்டு விளங்குகின் றது. அறிவும் ஆன்மாவும் இவ்வடிவமாகவே விளங்கு கிறது. ஆதலின், அப்பொழுது எல்லாம் வேறுபா டின்றிக் கடவுள் மயமாகவே விளங்குகின்றன. திரு நீற்றைப் பஞ்சாக்கரமென்றும், பஸ்பமென்றும், சாம்ப லென்றும், விபூதியென்றும் வழங்கப்படும். அதாவது பஞ்சாக்கரங்களுடன் பஞ்சகோணத்தின் சக்கரத்தின் வடிவினுள் உருவமாகத் தோன்றியுள்ள பரசிவத்தின் நாமமாகிய அச்சொரூபத்திற்குரிய பஞ்சாக்கர மந்தி ரங்களென்னும் விறகினுல் தகிக்கப்பட்ட வெண்மை பொருந்திய நீறு எனப்படும். திருவெண்ணீறு என் பது திரு=அழகு பொருந்திய; வெண்=தூய்மையான; நீறு=பஸ்ப்பம்; ஆதலின் திருவெண்ணீறு அணியும் பொழுது இம்மந்திரத்தைத் தியானித்துக் கொண்டே அணியும்படி ஏற்பட்டுள்ளன. இக்காரணங்களை முன் னிட்டும் மற்றும் உலகமானது முடிவில் நீறு மயமாகவே ஏற்பட்டு விடுகின்றது. ஆகையால் இத்தகைய உண் மைகளை யறிந்துகொள்ளும் பொருட்டாகவே பரசிவத் தின் திருமேனியில் வெண்ணீறு விளங்கப்பட்டதாகும். மேலும் மனமானது வாயுவைப் பார்க்கிலும் அதிவேக மும் பலமும் உடையதாயும் மிகச் சூக்குமமான வடிவ மாயும் சதா சுழல் வேகத்தால் சர்வ இந்திரியங்களிடத் திலும் வியாபக முடையதாயும் ஏற்பட்டுள்ளன. காற் றானது சாதாரணமாக வீசும்பொழுது அதன் வடிவம் தோன்றாமலும் சில சமயம் பெரும் சுழல் காற்றானது ஏற்பட்ட பொழுது அதனுடன் பூமியிற் பல இடத்திலு

முள்ள குப்பை முதலிய அசுத்தங்களும், மண் தூசி முதலியவைகளும் கலந்து பறக்கும் பொழுது காற்றின் வடிவம் அசுத்தமாகவே புலப்படுவதும் பின்பு அது ஓய்வுற்ற இடத்தில் அவைகள் யாவும் பூமியில் வீழ்ந்து அசுத்தமாகக் கிடப்பது போன்று, மனமானதும் சாதாரணமாக அமைதியாக இருப்பின் அதன் வடிவம் தோன்றுமலும் சுழல்கின்றபொழுது எல்லா இந்திரியங்களினால் ஏற்படக்கூடிய நன்மை தீமையான பல விடயங்களெல்லாம் இதனுடன் கலந்து சுழல்கின்றன. அப்பொழுது இதன் சொரூபம் இருப்பதாகவே புலப்படுகின்றன. பின்பு அவ்விடயங்களாகிய குப்பை தூசி முதலிய அசுத்தங்களெல்லாம் மனதின் தானமாகிய இருதயத்தினிடத்தே வீழ்ந்து படிந்து மனத்தினுடைய எதார்த்த வடிவத்தையும் கொடுத்து அறிவு ஆன்மா இவைகளுடைய சுயவடிவையும் நிலைமையையும் மறைத்துக் கெடுக்கின்றன. ஆகவே அம்மனத்தின் சுழலையும், இந்திரியங்களிற் கலப்பதையும் தடுத்து அமைதியாக நிறுத்திப் பஞ்சாக்கர மென்னும் பரசிவத்தின் சொரூப நாம மந்திரத்திலேயே சுழலச்செய்து பரசிவ திருட்டியில் வைத்தபொழுது மனமானது அச்சொரூபமாகப் பெற்று முன் படிந்துள்ள அசுத்தங்களும் ஞானக்கினியாற் தகித்து நீங்கப்பெறுவதுடன் அறிவும் ஆன்மாவும் சுயவடிவத்தையும் பிரகாசத்தையும் எதார்த்த இன்ப சுகத்தையும் அடையப் பெறுகின்றபடியால் இவைகளின் அறிகுறியாகவும், பரசிவ வடிவத்தினிடத்தே பூத்து விளங்கப்பட்டதாகும். ஆதி திரி முனிவர்கள் பரசிவனிடத்தே இப்பஞ்சாக்கர விடயத்தை வினவிய காலத்தில் பரசிவம் மேற்கூறியுள்ள விடயங்களைத் திருவாய் மலர்ந்தருளி இத்திருவெண்ணீறே எனது சொரூபமும் சிவகலையென்னும் எனது முக்கிய அறிகுறியாகும் என்பதாகக் கூறியருளினார், இக்கருத்தைக் கொண்டே முன் காலத்திற் சந்தனக்கட்டை முதலிய

மேலான கட்டைகளைப் பரிசுத்தமான இடத்தில் வைத்து அவைகளைப் பரசிவ நாமங்களாகவும் அக்கினியைச் சிவஞான அக்கினியாகவும் பாவித்து அக்கினியை மூட்டிச் சுற்றிலும் ஐவர்கள் இருந்துகொண்டு பஞ்சாட்சர மந்திரத்தை ஆரம்ப முதல் எரித்து தகிக்கும் வரையில் இடையருது தியானித்துக் கொண்டிருந்து, பின்பு அதனை வணங்கிச் சேர்த்து மற்றோர்களுக்கும் அளித்துத் தாங்களும் அணிந்து வந்தார்கள். அதன் பின்பு பலவித விறகுகளால் எரித்து செய்து கொடும்பதாக நடந்து பின்பு அவரவர்கள் செய்து கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டன. அதன் பின் விறகும் ஆவின் கோமய விராட்டியும் சேர்த்துச் செய்து வந்து பின்பு ஆவின் கோமயத்தைக் சுவசமாகச் செய்து அதைத் தகித்து அந்நீற்றை அணியும்படி ஏற்பட்டுள்ளன.

குறிப்பு:— திருவெண்ணீறு அணியப் பெறுவது சிவகலையாகவும், பரசிவத்தின் அறிகுறியாகவும், ஞானமய மென்பதாகவும், அணியக்கூடிய ஸ்தானங்கள் தூய்மையாக இருக்கவேண்டு மென்பதாகவும் ஆகும். தூய்மையை யடைந்த ஞானிகளின் தேகத்தைச் சமாதி செய்வதும், அசுத்தம் பொருந்திய அஞ்ஞானிகளின் உடலைத் தகனிப்பதுமான உண்மையும் உணர்க.

வெளிதேசங்களிலுள்ள பல அறிகுறிகள்,

கிரேக்கரை போலவே எகிப்தியர்களும், சிவலிங்க விழாக் கொண்டாடுகிருர்கள். இதற்குப் பக்கஸ் தெய்வம் எனப் பெயர் ஏற்பட்டிருக்கின்றன. சிவலிங்கத்தைப் பெண்கள் தூக்கிக் கிராமங்களுக்குச் செல்லுகின்ருர்கள்.

இந்தியாவில் கார்த்திகைத் தீபம் வீடுகள் தோறும் ஏற்றுவதுபோன்று அவர்களும் வருடம் ஒருமுறை வீட்டைச் சுற்றிலும் பல விளக்குகளை ஏற்றுகின்ருர்கள்.

ஒவ்வொரு சட்டிகளிலும் ஏற்றுகின்றார்கள். இதற்கு தீபம் கொளுத்தும் திருவிழா என்கிறார்கள். இது எகிப்து முழுதும் கொண்டாடப்படுகின்றது. மற்றும் கோவிலுக்குப் பிரார்த்தனைக்காகத் தலையை மொட்டையிட்டு அம்மயிரை நிறுத்து அவ்வளவு வெள்ளிக்காசை ஆலயத்திற்கு அளிக்கின்றார்கள்.

"போனிச்சு" என்னும் ஒரு விதப் பறவை தன் தந்தையின் உடலை ஒரு பெட்டியில்வைத்து வாயிற்கௌவிக் கொண்டு 500 வருடத்திற்கு ஒருமுறை சூரியன் கோவிலுக்குக் கொண்டுவந்து மீண்டும் போகின்றதாம்.

தீப்சீ நகரின் அயலிலே குட்டையாகவும், தலையில் இரண்டு கொம்புகளும் உள்ள பாம்புகள் இருக்கின்றன மனிதரைத் தீண்டுவதில்லை.

அரேபியாவில் இறக்கை முளைத்த பாம்புகள் இருக்கின்றன. இது யூபிதர் தெய்வத்திற்கு உரியதாம். இலை துளிர்காலத்தில் எகிப்துக்குப் பறந்து செல்கின்றது, ஒரு வகைப் பறவை இவைகளைக் கொன்று விடுகிறது.

பாபிலோனில் உள்ள ஆலய அமைப்பும், பூசை முறைகளும் கை கூப்பி வணங்குவதும் தென்னிந்தியாவைப் போலிருக்கின்றது.

பீனிசியர் இந்தியரைப் போன்று சமாதிகளில் லிங்கம் வைப்பதும், லிங்க பூசைகள் செய்வதும், ஆலயங்களில் நந்தி இடபம் வைக்கின்றார்கள்.

எபிரேபியர் இவர்களுடைய சிவலிங்க முதலிய வழிபாடும், ஆலயங்களும் தென்னிந்தியாவை ஒத்திருக்கின்றது. முகமதியர் பிறையையும் நட்சத்திரங்களையும் மதக் குறியாகக் கொள்கின்றார்கள்.

சிரியா, உரோம், பிரிட்டன் முதலிய நாடுகளிலும் சிவன் வழிபாடும் ஆலயமும் இருக்கின்றன. பழைய பஞ்சாங்கத்தில் வைகாசித் திங்கள் சிவன் என்று எழுதியுள்ளது. எபிரேய மொழியில் எழுதப்பட்ட விவிலிய வேதத்தில் மோசே. கி. மு. 1500. சிவன் மாதத்தில்

ஆரும்நாள் சினாய் மலியிலிருந்து இறைவன் 10 கட்டளை களை மக்களுக்குத் தெரிவித்தார் என்றிருக்கின்றது.

சின்ன ஆசியா, மெசபெத்தேமியா, எகிப்து முத லிய நாடுகளில் சிவன் என்னும் நாமமுள்ள இடப் பெயர்கள் 100 கணக்கில் காணப்படுகின்றன: மேற்குத் தேசங்களிலும் இப்படியே இருக்கின்றன.

எகிப்திலே சிவன் என்னும் நாமமுள்ள ப்ாலைநிலப் பசும் தரை ஒன்றிருக்கின்றது. இது முன்னே சிவ வழி பாட்டிற் குரியதாக இருந்து பின்பு அமன் யூபிதர் என் னும் தெய்வ வழிபாட்டிற் குரியதாக மாறி இருக் கின்றன.

மெசபெத்தேமியாவில் மத்தானிய ரெனும் பாபி லோனியர்கள், ஹபில்சிவா - றபுசிவா என்று இரண்டு தெய்வங்களை வணங்கின்றார்கள்.

அமெரிக்காவிலே கொலாடோ ஆற்று முகத்துவா ரத்திலுள்ள பீடபூமியில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவாலயம் ஒன்று கண்டு பிடிக்கப்பட் டிருக் கின்றது.

பாபிலோனியாவில் சிவாலயமும், இடபவாகன உருவமுடன் விக்கிரகமும் இருக்கின்றது. மேற்கூறி யுள்ள எல்லோரும் சிவனைத் தந்தைக் கடவுள் என்றே கூறுகின்றார்கள். சிவனை செமித்தியர் - எல்லென்றும், எகிப்து அமன்ரா என்றும், பிரிட்டன் ஆரியர் தேவ னென்றும், மெச்சிக்கோ, பேரு, பிரிட்டன், ஜப்பான் முதல் எல்லோரும், ஆதித்தன் என்றும் அவர் தந்தை யென்றும் வணங்குகின்றார்கள்.

பாபிலோனில் நிப்பூர் என்னும் பட்டினத்தில் பெரிய சூரியன் கோவில் இருக்கின்றது. சின்ன ஆசி யாவிலும் இருக்கின்றது. சிவன், சூரியன், இடபம் முத லிய வழிபாட்டிற்கும், யேகோவா விழிபாட்டிற்கும் போராட்டம் முன்பு நடந்ததாக விவிலிய வேதத்தில் பல இடத்தில் இருக்கின்றது.

எபிரேயர் சிவ சூரிய வழிபாட்டை முதுமை இல்மை என்று இரண்டாக வழிபடுகின்றார்கள். தாடி முடி உடையதாகவும், இல்லாத இளமைப் பருவ உருவமாகவும் வணங்குவதாம்.

முகம்மதியர் வணங்கும் அல்லா என்னும் கடவுள் பெயரும், சிவ சூரியன் பெயராகும். யோகோவா என்பதும் சிவன் பெயராகும்.

தென்னிந்திய ஆலயங்களில் தல விருட்சம் இருப்பது போலவே உலகிலுள்ள சர்வ தேசங்களிலும் ஆதியில் மரத்தடியிலும் மலையின் உச்சியிலும் சிவலிங்கங்களையும், சூரிய குறியாக தூண்களையும் வைத்துப் பூசித்திருக்கின்றார்கள். பின்பு ஆலயங்களும் அதன் பிறகு பின்காலத்தில் வேறு பெயர்களும், கொள்கைகளும் ஏற்பட்டிருக்கின்றது. பெரிய ஆசியா, அமெரிக்கா, எகிப்து முதலிய இடங்களில் சமாதிகளிலும் செய் குன்றுகளிலும் சிவன், சந்திர, சூரியர் உருவங்களை வைத்து வழிபட்டிருக்கின்றனர்.

பேபெல் கோபுரம் ஒன்றிருக்கின்றது. பின்காலத்தில் மாராட்டம் கொடுத்த கோபுரம் என்பதாக வழங்குகின்றது.

கிருஸ்த்துவர்கள் முன்புள்ள சூரிய வழிபாட்டைக் குறித்தே ஞாயிற்றுக் கிழமையை பிரார்த்தனைக்குரிய முக்கிய தினமாக வைத்திருக்கின்றார்கள்.

தாய் தெய்வ வழிபாடும் ஆதியிலேயே எற்பட்டுத் தண்டு, சூலம், வாள், சிங்க வாகனம் முதலியவைகள் உடைய சத்தியின் உருவத்தை ஏற்படுத்தி வழிபட்டிருக்கின்றார்கள். ஆலயமும், இம்முத்திரைக் காசுகளும் இருக்கின்றன.

சந்திர சூரிய வழிபாட்டுடன் அக்னி வழிபாடும் ஆலயங்களும் ஏற்பட்டிருந்ததாக எங்கும் விளங்குகின்றது, இந்தியாவைப்போன்று, ஆலயங்களும், கிரியைகளும் முத்தீ வழிபாடும் ஒத்திருக்கின்றன. ஆதியில் சிவலிங்க வழிபாடும், பின்பு சிவம் சக்தி யென்னும் தாய் தந்தை யென்பதாக உருவமாக ஏற்படுத்தி வழிபட்டி

ருக்கின்றார்கள். கடவுள் சிவமாகிய பிரகாசமும் ஆனந்தமும் பொருந்தியதாகவும் அதனின்றும் சர்வ கிருத்தியங்களைச் செய்யும் செயலைச் சத்தியாகவும் கொண்டு வழிபட்டதாகும்.

உலக முழுதும் சமாதிகளில் லிங்கங்களை வைப்பது ஏற்பட்டிருக்கின்றது. "இலிதியர்" தேசத்தில் அலியாதீஸ் என்பவரின் சமாதியில் 9-அடி குறுக்களவுள்ள லிங்கம் இருக்கின்றது.

"இடப"வழிபாடும் எங்கும் பரவி வந்திருக்கின்றது. "நாக" வழிபாடும் எங்கும் பரவி ஆலயங்களும் இருக்கின்றன. கிருஸ்த்துவ மதம் ஏற்பட்ட பிறகுதான் மறைவுபட்டிருக்கின்றது.

இந்தியாவில் இருப்பது போன்று தெய்வம் ஆடும் கூத்தும் பலிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

சீனுவிலும் ரசியாவிலும் எல்லா வழிபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆமை வழிபாடும் எங்கும் பரவியிருக்கின்றன. சீனரின் கொடி ஆமையும் பாம்பும் பொறித்ததாக முன்னிருந்ததாம்.

கொரியாவில் பாம்புகளைக் குல தெய்வமாக வணங்குகின்றார்கள்.

ஜப்பானிலும் எல்லா வழிபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவைப் போன்றே அமெரிக்கா, திபெத்தில் முதலிய எல்லா இடங்களிலும் ஆறு குளம் முதலிய இடங்களில் நாக உருவம் இருக்கின்றது. ஆனால் அங்கே படமுள்ள பாம்புகள் இல்லை. சாதாரணப் பாம்பே இருக்கின்றது.

இந்திரன், வருணன் முதலிய வழிபாடுகளும் முன்பு பரவி இருந்திருக்கின்றன. மற்றும் உலகிலுள்ள சர்வ தேசங்களிலும் இப்பொழுதுள்ள மொழிகளும் பலவிதத்திலும் தமிழ் மொழியை ஒத்திருக்கின்றன. பழக்க வழக்கங்களும், கொள்கைகளும், மதங்களும் தமிழரை ஒத்து இருக்கின்றன. வரவர பின்காலத்திலேயே சிறிது சிறிதாக எல்லாம் மாறுதல் ஏற்பட்டிருக்கின்றனவாகும்.

முற்றிற்று.

எல்லா உயிரும் இன்புற்று வாழ்க.

